THE

TAMIL TEXT

FOR THE

MATRICULATION EXAMINATION

OF THE

UNIVERSITY OF MADRAS,

DECEMBER 1902.

PRICE 12 ANNAS.

Madras:
HIGGINBOTHAM & CO.,
Printers and Publishers to the University,
MOUNT ROAD.

1901.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
8 JAN 1902
MADRAS.

சூசிபத்திரம்.

		பக்கம்.
அரிச்சந்திரபுராணம்—பாயிரம்	... ...	1
,,	விவாககாண்டம்	2
,,	இந்திரகாண்டம்	4
,,	சூழ்வினைக்காண்டம்	6
பன்னூற்றிரட்டு—ஈகை	... ...	20
பெருமாள் திருமொழி—வித்துவக்கோட்டம்மான்	... ...	27
திருவாசகம்—குயிற்பத்து	... ...	29
கோவிந்தசதகம்	... ...	31
அறப்பளீசுரசதகம்	... ...	33

சம்பராமாயண வசனம் :—

பாலகாண்டம்	... ...	39
அயோத்தியாகாண்டம்	... ...	51

பஞ்சதந்திரம் :—

நான்காவது லப்தஹானி	... ...	70

அரிச்சந்திரபுராணம்.

பாயிரம்.

ஆக்கியோன் பெயர் முதலியன.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

1 தண்கவிகைக் குரிசிலரிச் சந்திரன்றன்
சரிதமதைத் தாரணியோர் விருப்ப மெய்த
வண்கவிஞர் வகைவகையே வகுத்து ரைத்த
வடமொழியுந் தென்மொழியின் வழுவி லாத
வெண்கவியுங் கண்டரங்கின் மாத ராடல்
விதங்கேட்டு மழையெனவே வெருண்டு சோலைக்
கண்கவிகள் குதிபாயு நெல்லூர் வீர
கவிராச னேவிருத்தக் கவிசெய் தானே.

இதுவுமது.

2. விதியினர சிழந்தவரிச் சந்தி ரன்றன்
வியன்கதையாம் வெண்கவியை விருத்த மாக்கி
அதிவிதமாங் கலியுகத்தில் வருச காத்த
மாயிரத்து நானூற்று நாற்பத் தாறிற்
சதுர்மறைதேர் புல்லாணித் திருமான் முன்னே
சக்கரதீர்த் தக்கரைமேன் மண்ட பத்துட்
கதிதருசீர் நெல்லூர்வாழ் வீர ராசு
கவிராசன் கவியரங்க மேற்றி னானே.

கோசலநாட்டில் அயோத்தியாபுரி அரசனாகிய அரிச்சந்திரன், ஒருநாள் தனது ஸபையையடைந்த சில முனிவர் கன்னோசிநாட்டுக் கன்னமாபுரியரசனாகிய சந்திரதயனுடைய மகள் சந்திரமதியினது அழகின் மிகுதியையும் குணமிகுதியையும் சொல்லக்கேட்டு, அவளை மணஞ்செய்ய விரும்பி, அம் முனிவர்களைச் சந்திரதயனிடமனுப்பி மணம்பேசுவித்து, 'சிவபெருமானருளிய இரகஸ்யத்தை அறியவல்லோனே சந்திரமதியின் கணவன்' என்று

சந்திரதயன் சொல்லியதை அவர் சொல்ல அறிந்து, தன் பரிவாரங்களுடன் புறப்பட்டு, வழியிடையில் காளியருளிய பொற்றேர் முதலியவற்றைப் பெற்று, கன்னமாபுரியிற்சென்று, பலதேயத்தரசர்களும் நெருங்கியுள்ள சுயம்வரமண்டபத்தையடைந்து ஓராசனத்திலிருந்தான். அப்பொழுது, அம் மண்டபத்தைச்சார்ந்து ஒவ்வொரு அரசருடைய வரலாறுகளையும் தோழி மார் விளங்கச்சொல்லக் கேட்டுவரும் சந்திரமதி, 'இவன் அரிச்சந்திரன்' என்று அவர் சொல்லக்கேட்டாள்.

விவாககாண்டம்.

கலிவிருத்தம்.

3. மந்தர மனையதோள் வள்ளல் பேர்சொலச்
சுந்தரத் தோகைமார் தோளைத் தாழ்த்தியச்
சந்திர மதியரிச் சந்தி ரன்றனைக்
கந்தர நீட்டியுட் கருத்து நோக்கினாள்.

4. அங்கைவேன் மன்னனு மாசை யுட்கொள
மங்கைதன் பங்கய வதன நோக்கினான்
செங்கயற் கண்ணிற டிருக்க முத்தினின்
மங்கல நாணுறீஇ வயங்கக் கண்டனன்.

5. கன்னியென் றெண்ணினங் கன்னி யோவலன்
முன்னரே மங்கலம் பூண்ட மொய்குழ
லின்னமு மொருவருக் கெய்து மோவெனு
மன்னவன் மாதுலற் குரைவ ழங்கினான்.

6. பொருத்துமுன் மங்கலம் பூண்ட பேதையை
மருத்திரண் டாவது மணமு டிப்பரோ
சிருத்தவர் செய்தொழி றிரைவ டைப்பிதி
னிறுத்தினீர் நீரென நெடிது கூறினான்.

7. வள்ளலீ துரைத்தலு மதித யன்றன
துள்ளம்விட் டோங்கிய வுவகை யட்டெரு
வெள்ளமுள் ளடக்கியே வேந்தர் காளிவன்
கள்ளமோ மெய்ம்மையோ கட்டு ரைக்கதே.

8. தையலாள் கழுத்தினிற் றாலி யுண்டெனிற்
கையினாற் கண்ணுறக் காட்டு நீயெனச்
செய்யகை யன்றந் தனி மூக்கிற் சேர்த்தியிவ்
வையனும் பொய்யனென் றரசர் கூறினார்.

9. மண்டல வேந்தனோம் மடந்தை மங்கலங்
கண்டது நீங்கடாங் கண்டி லாததுந்
திண்டிற லீரொரு தேவ ராசிய
முண்டென மதிதய னுரைப்ப தாயினன்.

10. அண்டர்நா யகன்வர மளித்த நாளையில்
வண்டணி குழலியோ டுதித்த மங்கலங்
கண்டவர் பதியிவட் கென்ற கட்டுரை
உண்டஃ தன்றிவே றுண்டு கேட்டிரால்.

11. மஞ்சனச் சடையிறான் வரத்தில் வந்தநாள்
கஞ்சன நீழலிற் காண்ப தன்றியே
யஞ்சனக் கண்ணிக்கு மங்கைக் கெய்திடா
தெஞ்சலில் யாவரு மியானுங் கண்டிலேம்.

ஷை வேறு.

12. என்றலும் வல்லிமு னெண்ணிய நாம
மொன்றல துள்ளுற வுன்னல ளாகிச்
சென்றவன் மார்பிது சேர்கென வுன்னு
மன்றல மாலையை வானிலெ றிந்தாள்.

அம்மாலை அரிச்சந்திரன் கழுத்தில் விழுந்தது.

13. வஞ்சிவ ழங்கிய மாலைய ணிந்தோன்
செஞ்சுட ரின்முக நின்றொளி செய்ய
வெஞ்சுடர் முன்சசி யாமென மிக்கோர்
கஞ்சமு கங்கள்க ரிந்தன வன்றே.

14. மாதர்க ளார்த்தனர் வானவ ரார்த்தார்
கீ[illegible]ர்க ளார்த்தனர் கேளிரு மார்த்தார்
மு[illegible]ர்க ளார்த்தனர் துறவரு மார்த்தார்
வேதர்க ளார்த்தனர் வேலைய டங்க.

15. நல்லிய னூலறி நாவலர் பாடப்
பல்லிய மும்பல பாடலு மார்ப்ப
அல்லிம லர்த்தொடை மாலைய ணிந்தே
வல்லியு மன்னனு மாளிகை புக்கார்.

பின்பு, அரிச்சந்திரன், கன்னமாபுரியிற் சிலதினமிருந்துவிட்டு, அப்பால், சந்திரமதியுடன் அயோத்தியையடைந்து அரசாட்சி செய்துகொண்டிருக்கையில், சந்திரமதி, கருப்பமுற்று ஒரு பிள்ளையைப்பெற்றாள்; அந்தப்பிள்ளைக்குப் பெரியோர்களால் தேவதாஸனென்று பெயரிடப்பட்டது. இது நிற்க.

இந்திரன், ஒருநாள், தனது மகாஸபையில் வந்த பலவகையினருள் முனிவர்களை நோக்கி, 'பூலோகத்தரசர்களில் ஸத்தியமுதலியவற்றிற் சிறந்தவன் யார்' என்று கேட்க, வஸிஷ்ட முனிவர் சொல்வார்:—

இந்திரகாண்டம்.

கலிநிலைத்துறை.

16. பாருக் கொருவன் பரதார சகோத ரன்வெம்
போருக் கொருவன் புகழுக்கு மறைப்பொ ருட்கும்
நேருக்கும் வீடா மனுநா னெறிக் கும்பொ றைக்கும்
ஆருக்கு மிக்கா னரிச்சந்திர னாகு மென்றான்.

17. அன்னா னதுகூ றிடமைந்தனை யட்ட தாலும்
முன்னா ளயர்வென் றொருதண்டின் முடித்த தாலுந்
தன்னா லுணரா தசலத்தினன் றுன மூன்று
கொன்னார் தவத்தோங் கிபகௌசிகன் சீற லுற்றான்.

18. வெய்யன் பதகன் பரதாரனி ருப்பன் வீணன்
பொய்யன் னிறையும் பொறையுஞ்சிறி துமில் புல்லன்
கையன் கபடன் கயவன்றனை நல்ல னென்றிவ்
வையன் றிருமுன் னுரைத்தா[illegible]தன் னாக மென்றான்.

19. தீவெந் தொழிலின் றிபொய்ப்பற் றமெய்ச் செல்வி யோனைக்
காய்வெந் திறலா விசைகூறிய கௌசி காநின்
வாய்வெந் திலைநின் மனம்வெந்திலை வம்பு சொன்ன
நீவெந் திலைதெய் வமுநின்வயிற் பொய்த்த தென்றான்.

20. தெய்வந் தனைநொந் துவசிட்ட முனிச் செய்தி செப்பக்
கைவந் தகொடிர் தொழிற்கௌசிகன் கன்றி நோக்கிப்
பொய்வந்த நின்வாய் புழுவாகுத லன்றிப் பொய்யா
மெய்வந்த வென்வாய் மணம்வேவல வென்றுசொன்னான்.

அப்பால், 'அரிச்சந்திரன் ஸத்தியமுதலியவற்றில் தவறின் நான் தவஞ் செய்தலை விட்டுவிட்டுத் தலையோட்டிற் கள்ளை யேந்திக்கொண்டு தெற்கே செல்வேன்' என்று வசிஷ்டரும், 'அவன் தவறுதிருப்பின் என் தவத்திற் பாதி கொடுப்பேன்' என்று கௌசிகரும், இந்திரன் முன்பு சபதம் செய்து கொண்டார்கள். பின்பு, கௌசிகமுனிவர், பூமியையடைந்து சில முனிவர் களை அரிச்சந்திரனிடமனுப்பி யாகஞ்செய்தற்குப் பெரும்பொருள் வேண்டு மென்று கேட்கும்படிசெய்து முன்பு அவனை உடன்படுவித்துச் சிலநாளைக் குப் பின்பு அவனிடம் தாமே சென்று 'அப்பொருளைக்கொடு' என்றார்; அவன் 'எவ்வளவு' என்ன, இவர் 'யானைமேல் ஒருவன் நின்று எறிந்த கவண் கல் போகுந்தூரம் குவிக்கப்பட்ட பொருள்' என்றார். உடனே அவன் அப் பொருளைக்கொடுக்கத் தொடங்குகையில், கௌசிக முனிவர், 'இப்பொருள் உன்னிடமிருப்பின் வேண்டியபொழுது பெற்றுக்கொள்வேன்' என்று சொல்லிவிட்டுப்போய்த் தமது தவப்பெருமையாற் பலவகை மிருகங்களையும் பட்சிகளையும் வருவித்து, 'அரிச்சந்திரனுடைய நாட்டிலுள்ள பயிர்களை அழிமின்' என்றார்; அவைகள் சென்று அவ்வாறு செய்தன. அதனைக் குடிகளாலறிந்த அரசன் சென்று வேட்டையாடி அவற்றையெல்லாம் கொன் றான். அதனைக் கேள்வியுற்ற கௌசிகமுனிவர், தமது தவமகிமையால் ஒரு மாயப் பன்றியை யுண்டாக்கி அதனை நோக்கி, 'படைத்தலைவர் முதலி யோரைக்கொன்று அரிச்சந்திரனை இங்கே கொணர்வாய்' என்று அனுப்பி னர். அரசன், அப்பன்றியையும் வென்று தனது பரிவாரங்களுடன் மிக வும் அலங்காரமான ஒரு தடாகக் கரையிலுள்ள சோலையில் அமைக்கப்பட்ட படமாடத்திலிருந்தான். முன்பு தோல்வியுற்ற மாயப்பன்றி வருத்தமுற்றுக் கௌசிகமுனிவரையடைந்து நிகழ்ந்ததைச் சொல்ல அவர்க்கு அரசன் மீது மிகுந்த கோபமுண்டாயிற்று. அக்கோபத்தில் அதிக அழகுள்ள இரண்டு பெண்கள் பிறந்தார்கள். (கோபத்திலிருந்து பிறந்தமையின் அவர் கள் புலைச்சியராயினர்.) முனிவர் அவர்களை நோக்கி, 'நீங்கள் அரிச்சந்திர னிடஞ்சென்று பாடல் முதலியவற்றால் அவனை வஞ்சித்து அவனுடைய கொற்றக்குடையை வாங்கிக்கொண்டேனும் அவனை விவாகஞ்செய்துகொண் டேனும் வாருங்கள்' என்று சொல்லி அனுப்பினர். அப்படியே அவர்கள் வந்து பாட, அதனை அரசன் கேட்டு மகிழ்ந்து, 'உமக்கு வேண்டியதைக் கேண்மின்' என்ன, அவர் முனிவர் கூறியவாறு கேட்ப, அவனை நீசமங் கையொன்றறிந்த அரசன் அதற்குடம்படானாக, அவர்கள் சொல்வார்கள் :—

சூழ்வினைக்காண்டம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

21. வள்ளலென் றடைந்தோ முன்பால் வந்திரந் தோர்க்கொன் றீயாக்
கள்ளனென் றறிந்தா லிங்கு வருகலங் கண்டா யென்றார்
உள்ளமுங் கண்ணுஞ் செந்தீ யுருத்தெழச் சினந்து வேந்தன்
தள்ளுமென் றருளிச் செய்தான் விளைவது தன்னை யோரான்.

22. பார்த்திப னுரைப்பக் கேட்டப் பப்பரர் நெருங்கிச் சீறித்
தீத்திரள் செங்கண் சிந்த நூக்குவான் செல்ல வெங்கிக்
காத்திர நடுங்கக் கையுங் கால்களு நடுங்க மார்பிற்
சேர்த்திய யாழும் போகட் டிரிந்தனர் திசைம யங்கி.

23. ஆறுகொண் டோடார் செல்லா வடவியிற் சென்று மேனி
மாறுகொண் டுதிரஞ் சிந்த மஞ்சினைப் பழித்த கூந்தல்
தாறுகொண் டீர்க்கச் சேர்த்த துகில்கிழிந் தகலச் சாப
வீறுகொண் டேவி விட்ட முனிவன்முன் வீழ்ந்தார் வந்து.

௸ வேறு.

24. மண்டலந் தனிவிழுப் புண்டசெந் துகில்களு மாற டித்த
புண்டனிற் பொழிபசுங் குருதியுந் துவரிதழ்ப் பொருமலுந்தான்
கண்டனன் கௌசிகன் கடையுகக் கனலெனக் கடிய கோபங்
கொண்டனன் வந்தவா றேதெனக் கோதைமார் கூறலுற்றார்.

25. ஐயகே ளின்னருட் படியின ரசன்மாட் டணுகி நின்றே
பையவே யிசைகளும் பாடிநீ சொன்னவப் பரிசுரைத்தேங்
கையினங் கனையடித் துமரெனச் செய்தவக் கண்டனத்தால்
உய்யவும் போகுமோ வுரையுமுண் டோவெமக் குயிரு முண்டோ.

26. எனவுரைத் திடவெயர்த் திடியிடித் தெனநகைத் திருகணுமங்
கனலெறித் திருபுடைக் கடமினைத் தும்புகை கடிது மூடச்
சினமிகுத் திறைவனுக் கிடர்விளைத் திடுவதே செயலெனத் தன்
மனநினைத் தருமறைத் தவமுனிந் திரனுடன் வரநடந்தான்.

27. கரதலத் திடுமெழிற் குசைவிதிர்ப் புறவிணைக் கழல்வ ருந்தப்
பரவுபொற் றடமலர்ச் சனைவிரித் தகல்பெரும் படியி னுலைச்
சுரர்மிகப் பரிதவித் தபயமிட் டலறிடச் சுவண வெற்பாற்
புரமெரித் திடவரும் புனிதனைத் தணிமலர்ப் பொய்கை புக்கான்.

28. பிணிமுகத் திரள்களுங் குருகினப் பகுதியும் பிரிவுறுத
அணிமலர்க் குளிர்தடத் ததிசினத் தொடுநடந் தனுக லோடும்
பணிமுடிச் சுமைதவிர்த் திருபுயத் தினின்மிசைப் படிதரித்த
மணிமுடிக் குரிசிலக் கொடுவினைக் கௌசிகன் வரவு கண்டான்.

29. கடல்களென் படுநெடுந் திசைகளென் படுமகன் ககன மென்னும்
உடல்களென் படுமவற் றுயிர்களென் படுமிடந் துலக மென்னும்
விடலருந் தவமுடைப் பெருவலிக் கௌசிகன் வெகுளி யாலென்
றடனெடுஞ் சிலையவன் கடிதெழுந் தெதிர்நடந் தடிப் பணிந்தான்.

30. உருமிடித் தனவெனச் சினமிகுத் திகல்செயற் குறவ தற்குக்
கருமிடற் றவனலேன் கடனிறத் தவனலேன் கமல னல்லேன்
இருமியிற் கடையனு மெரியனே வலனெனக் கெழுமி யேகுற்
றிருமலர்க் கழல்களைக் கரமுறத் தழீஇநிலத் திடைக்கி டந்தான்.

31. கரமுறத் தழுவலுங் கௌசிகப் பெயரினன் கால்ப றித்தே
சிரமிசைத் திருமுடிச் சுடர்மணித் தொகைகள்பஃ றிசைதெ றிக்க
உரமிசைப் பணிதெறித் திடவுதைத் தனனுதைத் திட லு முன்றன்
மருமலர்க் கழல்சிவப் புறுமெனக் கைகளால் வருட லுற்றான்.

32. குடியினிற் பிடைபிழைத் திலனெனக் கடிமையிற் குறையு மில்லேம்
இடியிடித் தனவெனச் சினமிகுத் திடைவிடா தெனைபு டைத்த
அடிவடுப் படுமெனக் க[illegible]யிந் தைய வென்றன்
முடிவடுப் படுமெனக் கவல்கிலேன் வெகுளியென் மொழிதி யென்றான்.

33. மாவினைத் துணிசெய்தாய் கேழலுக் கிடர்செய்தாய் வான ளாவுங்
காவினைப் பொடிசெய்தாய் நீநியா லீன்றவென் காதன் மக்கள்
பாவினைப் பழிசெய்தாய் தீவினை [illegible] பாவி நீதான்
ஆவினற் றேல்பொதிந் தடுபுலித் தொழில்செய்தா ய[illegible] தென்றான்.

34. நாடழித் திடினுநன் னகரழித் திடினுமென் னறும[illegible]லர்ப்பூங்
காடழித் திடினுநீள் காலறக் கிளையினைக் களையி னுங்கோன்
றீடழித் திடினுநீ கான்விடுத் தனை[illegible] யான[illegible]ரால்
பாடிழைத் திடுவனோ வென்றரிச் சந்திரன் பலமொழிந்[illegible]ன்.

35. சிறியரா னவர்தமக் குரியவே யல்லவோ தீமை நன்னூ
லறிஞரா னவர்தமக்கல்லவோ பொறைபிறர்க்காகுமோதான்
நெறியிலாவினையினேனொருவனைப்பொருளதா நீ முனிந்தாற்
பொறையுநின்னருளுமென்னளவிலோ இலவெனப்போனவென்றான்.

36. மடித்தவா யினன்மிகக் கொதித்தநெஞ் சினனெதிர் மறுத்து நீதான்
படித்தவா சகமெலா மெனக்குநீ பிதற்றிடற் பாலவோதான்
வடித்தவே ழிசைநினக் கிசைக்கவே வந்தவென் மக்க டம்மை
அடித்தகா ரணமெலா மெனக்குநீ தக்கவா றறைதியென்றான்.

கலிவிருத்தம்.

37. மீண்டு மன்னவன் வேதியன் றன்கரம்
பூண்டு வாயிற் புனல்வரண் டற்றிட
ஆண்ட நாயக விம்முனி வாற்றிடல்
வேண்டும் யானது விண்ணப்பஞ் செய்வனால்.

38. இக்க ருங்குழ லேழையர் தம்மைநின்
மக்க ளென்ப துணர்ந்திலன் மாதவ
தக்க வாறுனை யாமையிற் றள்ளினேன்
புக்க தீது பொறுத்தரு ளீயென்றான்.

39. கழுத்த ரிந்திது கைப்பிழை வந்ததென்
றழுத்த மாக வுரைத்தனை யாதலாற்
பழுத்த நல்லறி வுற்றுனைப் பற்றிய
[illegible]ழுக்க மற்றுள [illegible]ம்.

40. இரப்ப வர்க்கொன் றிலையெனில் யாவையுங்
கரப்ப வர்க்குறு கட்டுரை கூறுவர்
புரப்ப வர்க்குப் பொ[illegible]ல் லாலடித்
துரப்ப [illegible]ந் தகுமோவென் றுருத்தனன்.

41. பை[illegible]கு லாவுகண் மாதரை மோதிய
மை[illegible]குறைக்கினுங் கண்ணினைச் சூலினும்
செ[illegible] வேண்டிய வாறுநீ
செய்க வென்ன மறைமுனி செப்புவான்.

42. கொய்து மாக்களைக் கொன்றதும் பன்றியை
எய்த தும்மிசை கேட்டடித் தினமாய்
வைத தும்மென்றன் மக்களை நீமணஞ்
செய்தி டிற்பொறுப் பேனென்று செப்பினன்.

43. நிலத்தில் யாரு நெறியல செய்திடின்
விலக்கு நீயினை யென்கண் விளம்பலென்
புலைக்கு லத்தொடு மன்னர் பொருந்துதல்
நலத்த தோவென்று நாயகன் கூறினன்.

44. அற்றை ஞான்றெம னைதயன் வசிட்டனாற்
பெற்ற சாபப் பெரும்புலை தீர்த்தனை
இற்றை ஞான்றிங் கெனைப்புலை யாக்கநீ
கற்ற தேதெனக் கால்கரம் பூண்டனன்.

45. முன்னை முந்தை முழுப்புலை நீக்கினம்
இன்ன நீக்கு வெமக்கரி தன்றியாஞ்
சொன்ன வாசகங் கேட்டுச் சுடர்முடி
மன்னர் மன்னவென் மக்களைச் சேர்கென்றான்.

46. இடினு நின்விதி யாரழ லாலெனைச்
சுடினு மென்னுடை றன்னைத் துறந்துயிர்
விடினு மேனியை வெட்டி யரிந்துகூ
றிடினு மிச்சொற் கிசைகிலென் யானென்றான்.

47. யூப வேள்விக் கௌசிக னெய்விலாக்
கோப மெய்திக் கொடியிடை மங்கையர்
தீப மன்னவர்ச் சேர்கிலை யாயினென்
சாப நீபெறு கென்றுரை சாற்றினன்.

48. கூற்ற முன்னைக் கொடுத்தெம தாருயிர்
தோற்ற னன்றுகன் றென்று துணிந்துநின்
சீற்ற மாற்றிடச் செப்பினுஞ் சாபம்யான்
ஏற்ற னன்றிடு கென்ன விளம்பினன்.

49. அப்பெ ருந்தகை யன்ன துரைத்திட
இப்பெ ருந்தகைக் கும்பொறைக் கும்பியான்
ஒப்பெ டுத்துரைக் கத்தகு மோவெனச்
செப்ப ருந்தவன் சிந்தையி லெண்ணுவான்.

50. இரைத்தெ ழுந்த கதத்தை யிறுத்திடின்
வரைத்த டம்புய வாசவன் முன்னர்யாம்
உரைத்த வாசகந் தோற்குமென் றுன்னுபு
நிரைத்த வேணி நெடுந்தவன் கூறுவான்.

51. துடிம ருங்குலத் தோகையர் தங்களைக்
கடிம ணஞ்செய நீதென்ற கள்வனே
குடிமை செய்யுங் கொடும்புலை யற்குநீ
அடிமை யாவை யறிதியென் றோதினன்.

52. கொஞ்சிப் பேசுங் குழவிசொற் கூற்றத்தான்
வஞ்சித் தன்னை வனமுலைப் பாலினில்
நஞ்சிட் டாலதை நாடி விலக்குநன்
னெஞ்சத் தாருள ரோவிந் நிலத்திலே.

53. வாரி காய்ந்து கொதித்திடின் மாற்றத்தண்
ணீரி யார்தரு வார்களந் நீதியிற்
சீரி யாபெண்ணை நீமிகச் சீறிடின்
யாரி யாரஞ்ச லென்பவ ரென்றனன்.

54. தாயுந் தந்தையுந் தஞ்சமுந் தெய்வமும்
நீயுண் டென்று நினைத்திருந் தோமெனச்
சேயும் வேந்துந் திருவு மமைச்சனும்
போயுன் பாதம் புகலென்று பூண்டனர்.

55. அன்னை யென்னை யருந்துணை யென்னையுன்
முன்னை வாழ்வு முதல்வனு மென்னையும்
[illegible]னை யிப்படி யெல்லவ னிச்சமர்த்
தன்னை யல்லது கண்டில னுண்மையே.

56. கண்ணை வேண்டினு மீகுவன் காக்கின்ற
மண்ணை வேண்டினும் வாழ்வுட னீகுவன்
பண்ணை வேண்டிய செஞ்சொற் பறைக்குலப்
பெண்ணை வேண்டிலன் யானென்று பேசினான்.

57. மன்னர் மன்ன னுரைத்திட மாதவன்
அன்ன தேசமக் காமென் றவாவுறீஇச்
சொன்ன தேயமை யுங்கடல் சூழ்புவி
என்ன தேயென் றெழுந்தெழுந் தாடினான்.

58. மருவு நாடும் வளநக ரும்பெருந்
திருவு மீகுவ னென்றனை செவ்விபோய்
தருவ னென்ற மொழிதவ ருமனுன்
அரச ளிக்கி னிமையு மெனச்சொனான்.

59. அந்த ணாளனை நோக்கியவ் வண்ணனும்
உந்த மக்க ஒருநலன் வேண்டிலேன்
எந்த நாடு மிருநிதிக் குப்பையுந்
தந்த னன்மொழி தப்புவ தில்லென்றான்.

60. பாரை வார்த்தையி னுற்றதற் பாலதோ
தாரை வாரெனக் கௌசிகன் சாற்றிட
காரை வாய்க்கயல் பாயு நறுந்தட
நீரை வார்த்தன னீள்புவி யாள்கென.

61. வைய நின்னது மாநகர் நின்னது
வெய்ய வாசியும் வேழமு நின்னபொற்
செய்ய தேர்களுஞ் செல்வமுஞ் சேவிக்குங்
கைய லார்களுந் தானையு நின்னவே.

62. என்று மன்ன னியம்பி யிறைத்தநீர்
அன்று கௌசிக னங்கையி லேற்றபின்
நின்ற மாதவர் தங்களை நேர்குறித்
தின்று நீரெழுந் தார்த்திடுமென்றனன்.

கலிநிலைத்துறை.

63. கோசிக னின்னே கூறிய பின்கூ கூவென்றே
ஆசிகள் சொன்னா ராடின ரார்த்தா ரணியாடை
வீசினர் நீயே மேன்மக னென்று மேன்மேலும்
பேசினர் பேசி மாசனர் நேசம் பெரிதுற்றார்.

64. வாரண முத்திண் டேர்பரி தேசம் வளமெல்லாம்
ஆரண மோதுங் கௌசிக னுக்கீ யினவென்றே
பூரண கும்பம் வீதிக டோறும் பொலிவித்துத்
தோரண மிட்டார் தாரணி யெங்குந் துறவோரே.

65. மென்னடை யன்ன நன்னடை யானை விறலானை
முன்னடை யாநின் னின்னவை பின்னு முனிகூறும்
என்னக ரின்றே யிவ்வுல கெல்லாம் யாருள
நின்னடை யாளந் தந்திடு யாறு நெறியென்றான்.

66. வாழிய நாடேர் செல்வ மமைச்சென் மாசேனை
சூழி நெடுங்கைப் போர்மத வேழந் துரகந்தேர்
ஊழியின் மட்டு மாளுதி தந்தே னுனதென்றே
ஆழி யளித்தான் பாருள மட்டு மழியாதான்.

67. குடைதந் தேனீள் கொடிதந் தேனென் குழூவாய
படைதந் தேனற் கனகத் திண்டேர் பரிதந்தேன்
தடைதந் தேனின் றடியே னேகத் தவனேநீ
விடைதந் தேகென் றடிமேற் பரவி வீழ்வானை.

68. துணியுந் தனிநெடுஞ் சடையா னினது தோண்மாலை
மணியும் வளையும் வலயங் களுநின் வடிவாளும்
அணியும் முடியுஞ் சேயுந் தாயு மணியும்பொற்
பணியுங் கழலுந் தந்தே கென்று பலசொன்னான்.

69. எத்துக் கிவையென் றணிமா முடியும் வடிவாளும்
புத்திப் புதல்வன் பூணும் பணியும் புனைமாதின்
பத்திக் கிரணப் பணியுங் கனகப் பணியும்வெண்
முத்திற் பணியுஞ் சழியா முனிவன் முனைமுய்த்தான்.

70. உனையும் மடமா தினையும் மரசே யுன்மைந்தன்
றனையும் விடுதற் கணியும் பணிநீ தந்தாய்காண்
வனையுங் கழலாய் மகனு நீயு மடவாளும்
புனையுங் கிரணக் கலைதந் தகலப் போவென்றான்.

71. ஆரை யிரப்போ மாடை யளித்தா லரனேயென்
றாரை யளித்த காவல னின்றே யுயிர்சோருந்
தாரை நினைந்தே கௌசிக னாங்குத் தான்மூடுஞ்
சீரை கிழித்தே றாவகை யிட்டுச் செலவுய்த்தான்.

72. நாறற் பாழ்ந்துணி சீலைப் பேனொரு நாண்மாறாப்
பிறற் சீலையி தாருக் கென்றானை பேசாமே
மாறற் காலமி தாகிற் செய்வதென் மற்றென்னாக்
கூறற் காமிசை பூணக் கோனது கொண்டானே.

73. காவிச் சீரை யுடுத்துங் கூறை கழித்துச்சென்
றாவிக் காகுல மாகச் சேனை யழுங்கப்போய்ப்
பாவிக் கோசிக னார்முன் னாவொரு பால்வைத்துத்
தாவித் தாளினை பூசித் தேவிடை தாவென்றான்.

74. தாவென் றான்விடை தந்தே னீயொரு சார்பூடு
போவென் றானிது வேதல னென்னைப் போலானை
வாவென் றானது கேளா மீளவும் வந்தெய்தி
யாவென் றானினி யீகுவ வெந்தா யானென்றான்.

75. செந்தே னொழுகுந் தண்பணை சூழுந் திருநாடா
வந்தே நானும் மாமுனி வோரும் வளர்வேள்விக்
குந்தே நண்ணி யிரந்த புசம்பொ னுளவெல்லாந்
தந்தே போவா யென்றிறை யோனைத் தடைசெய்தான்.

76. முன்ன முனக்குச் சொன்ன திறத்தின் மொழிமாறி
அன்னது கைக்கொண் டிந்நிதி தந்தே னல்லேன்யான்
நன்னக ரோடு பொன்னுள முற்று நனிதந்தேன்
இன்று முனக்குப் பொன்றர வென்பா லிடமுண்டோ.

77. தாருட னேசெந் தாமரை யாள்சேர் தடமார்பா
யாருட னேயிம் மோசமு ழைப்பா யறிவில்லாய்
ஊருட னேமுன் கூறிய பொன்னு முடனென்றே
நீருட னேநீ பேசி யளித்த நெறியுண்டோ.

78. சொன்னது மாறார் பானு குலத்திற் றொல்வேந்தர்
அன்னது காணே னின்னிடை யென்றா னதுகேளா
மன்னவ னுள்ள நொந்தற நாணி மதிவல்லோய்
இன்னமு மொன்றுண் டென்னவி ரந்தே யிவைகூறும்.

வேறு.

79. நித்த னைப்பிர மனையனை யாய்நினை வழிந்த
பித்த னைப்பொருள் விழைவினை யெங்கியான் பெறுகோ
இத்த னைத்தினந் தீவதென் றியம்புவை யெனின்யான்
அத்த னைக்குனின் பொருடர வவதியீ கென்றான்.

80. ஊரு நாடுநீண் மலைகளுங் கானமு முழன்றே
யாரு மேடிழுப் புண்பவ ரவதியா ரிடுவார்
சோர முள்ளநீ கூறுமப் பொருடனைச் சொரிந்து
பேர டாவினைத் தடுத்தனன் பேர்கலை யென்றான்.

81. பக்க நோக்கிலன் பார்மிசை விழுந்தடி பூண்டு
சக்கல் வந்திட மிடற்றினை யொடுக்குமக் கதைபோல்
விக்க லும்பொரு மலுமிசை மிசையெழ விரிநீர்
உக்க கண்ணன்வா யூறுநீர் வற்றிட வுரைப்பான்.

82. இழைத்த தீவினை பொறுத்தன னரசுதா வென்னத்
தழைத்த வன்பொடு தந்தியா னகன்றிடுங் காலை
அழைத்த நீயெனக் கவதியிட் டாள்விடு வாய
பிழைத்த னன்னிதோர் பெரும்புகழ் பெறுதியென் றிரந்தான்.

83. சற்றுண் டாகிய மலைகளில் வனங்களிற் றொட்டுன்
பற்றுண் டாகிய பதிகளிற் படுபொரு ளல்லால்
உற்றுண் டாகிய நிதியமுன் றிருவுள முணர
மற்றுண் டாமெனின் விளம்பிடு வழங்கிட வென்றான்.

84. ஆமி தேயெனி னரசகே ளவதியா னுரைப்பன்
ஏம கூடமுங் காசியு மன்றியி லிப்பால்
தாம மார்பநீ தந்தனன் றுடிதற் கப்பாற்
போம துண்டெனிற் பொருளுமப் பொருளலா தளியேல்.

85. இந்த வெல்லையி லிப்பொரு ளீதலல் லாமல்
அந்த வெல்லையிற் பொருடர வல்லையே யானால்
முந்து நீசொன்ன முறைமையா லவதியா னீவேன்
தந்தி டாயெனிற் சத்திய மேதெனச் சாற்றும்.

86. நிற்பி ழைத்திடி னினக்கியா னருநிதி யளிக்குஞ்
சொற்பி ழைத்திடிற் சூளுற வேதெனிற் சொல்வல்
கற்பி ழைத்தநற் சொற்ப தாரத்தைக் கருதி
இற்பி ழைத்தவ னவனின் னிருநிதி கொடேனேல்.

87. காசி நாட்டினிற் சென்றவந் நாளினுன் கனகம்
ஆசின் மாதவ வளிப்பனவ் வவதியி லதுநீ
பேசி டாயென விருபது நாளையின் பின்பு
மூசி வண்டுறை தாரினாய் தருகென மொழிந்தான்.

88. அங்குற் றெய்தநா ளம்முறைக் கிருமடங் கடங்கா
ஈங்குற் றீட்டிவ திப்பொரு ளையமென் றியம்ப
நங்குற் றம்பிலை நாற்பதிற் றெட்டென நவின்றான்
உங்குற் றம்பிறற் குட்கொடா தொழிந்திடி லென்றான்.

89. இப்புத் திக்கினி தொத்தன னன்விடு கென்று
குப்புற் றேகலுங் கௌசிகன் மீளவுங் கூவித்
தப்புத் தீர்தரத் தந்தவப் பொருளெலாம் பதிவந்
தொப்புத் தந்துபின் போவெனு மன்னனுக் குரைத்தான்.

90. பார ளித்தனை புரக்கநின் பதியிடைச் சென்றால்
ஆர ளித்தன ரென்பர்நின் னடியவ ரெல்லாம்
ஊர ளித்திட வுடன்வரத் துணிதியீ தொழியின்
நீர ளிக்கதே யெனக்குமன் னினக்கென மொழிந்தான்.

91. நன்று நன்றுநீ நகரியி லெழுந்தரு ளுமேயேன்
இன்று நின்பிற கெய்துவ லென்றினி தியம்பச்
சென்று கௌசிகன் றேர்மிசை யேறினன் றிரண்டு
நின்ற மாதவர் கரியினும் பரியினு நிறைந்தார்.

92. தேரி லேறிமா முனிசெலச் சேனைபின் செல்லப்
போரில் வீரனுந் தேவியும் புதல்வனு நடுவே
பாரின் மேனடந் தடிப்பொரு திடல்பண்ட பகைக்க
வேரி வாவிவிட் டயோத்தியை நோக்கியே விரைந்தார்.

93. கன்ன லம்பெருங் கழனியுஞ் சோலையுங் கடந்து
வன்ன மாமணிப் புரிசையின் புறத்துவந் தணைந்தார்
நன்ன கர்ப்பெருஞ் சனமெலா மெதிர்கொடு நண்ணி
மன்ன னைச்செழுந் தேர்மிசைக் கண்டிலர் மருண்டார்.

94. இரத மேன்முனி யேறிய தகிதமோ விதமோ
சரத மோவெனு மையத்தார் வந்தவன் சார்ந்தார்
விரத மிவ்வகை விளைந்தவா றேதென மெலிந்து
கரத லங்களான் முகத்தறைந் தழுதனர் கதறி.

95. எங்கு வாரிவங் கொடியையுஞ் சேயையு மேந்தித்
தாங்கு வகர்செழுந் தாளிலே வீழ்ந்துவீழ்ந் தயர்வார்
ஓங்கி யோங்கியே யறைந்தறைந் தொளிமுகங் கன்றி
வீங்கு வாரழு வார்விழு வாருள மெலிவார்.

96. மன்ன வற்குநம் மனைக்கு மைந்தற்கு மந்தோ
என்ன பாவம்வந் தெய்திய வென்றிருந் தேங்கப்
பொன்ன கர்ப்பெரும் புரிசையின் புறத்துவந் தணுகி
இன்னல் செய்தவக் கௌசிக னிரதம்விட் டிழிந்தான்.

97. கோசி கன்றனை யுடன்கொடு கோநகர் புகுந்து
வாசி யுள்ளவு மதகரி யுள்ளவும் வழங்கிக்
காசி னல்லறை பூசனை யறையெலாங் காட்டித்
தாசி னல்லறை ஆயிலறை பாரெனச் சொன்னான்.

98. என்னின் முன்னவ ரிருபதோ டொருவருண் டந்த
மன்னர் வைத்தசெம் பொன்னறை யீதென வழங்கி
அன்ன சந்திர னிவையிவை யடியனேனுன் வைத்த
பொன்னறைத்தொகை கொள்கெனக் கொடுத்தனன் புகழோன்.

99. ஆட ரங்குக ளம்பல மடமனை சாலை
மாட மாளிகை மண்டப மஞ்சனச் சாலை
கூட கோபுர மடைப்பள்ளி கோயில்செய் குன்றம்
பீட மாதன மிவையெனக் கொடுத்தனன் பின்னை.

100. இந்த வாதனத் திருந்தரு மௌனமுனி யிருந்தான்
அந்த வெல்லையி லரசனு மவனடி பணிந்தான்
வந்த மன்னரு மமைச்சரு மங்கையர் குழாமுஞ்
சுந்த ரக்கழற் சேனையு மவனடி தொழுதார்.

101. தொழுதெ ழுந்துதஞ் சுடர்முடி மன்னனை நோக்கி
அழுது நின்றவத் தலைவனை யவன்கையா லமைத்துப்
பழுதி லாதுநீ ரெமக்குமுன் செய்தவப் பரிசே
முழுது மிந்தமா முனிவற்கு முறைசெயு மென்றான்.

102. எவர்க்கு நல்லவர் திரிபுர மெரியெழச் சிரித்த
சிவற்கு நல்லவர் செங்கண்மா லுக்குநான் முகத்தன்
அவற்கு நல்லவ ரமரர்க்கு நல்லவ ராவர்
இவற்கு நல்லவ ரெனக்குநல் லவரென விசைத்தான்.

103. வைய மேழுடை மன்னவ னவ்வுரை வழங்கச்
செய்ய வாய்மலர் செங்கையாற் புதைத்தடி வணங்கி
ஐய நின்மொழி மறுப்பவ ராரெனு முகத்திற்
கைய றைந்தமுக் கண்டவக் கௌசிகன் கருதும்.

104. அறந்தி ரண்டுரு வாகிய வரசனை யவமே
புறம்ப றைந்தனம் புன்மையெம் புந்தியில் லாமல்
திறந்தெ ரிந்தவர் செயலிதோ வெனக்கவு சிகன்மெய்
மறந்தி ருந்தபின் மற்றுமோர் வாசக முரைப்பான்.

105. இந்த வையமு மிருநிதிக் குழுவுமிப் பொருளும்
முந்து நீதரு மொழிந்தவப் பொருளும்பா ணிழப்பேன்
எந்த மக்களை மணம்புணர்ந் திந்நக ரிருவென்
றந்த ணன்மகிழ்ந் தரசனைக் கைபிடித் தமைத்தான்.

106. கைபி டித்தலு முனிவனைக் கால்பிடித் திறைவன்
மெய்பி டித்தலு மிக்கவை செய்தலு மல்லால்
மைபி டித்தகட் பரத்தையர்ப் புணர்தலும் வழங்காப்
பொய்பி டித்தலு மறனல் செய்தலும் புகழோ.

107. உமக்கி யான்சொலல் வேண்டுமோ மனுவின்பி னுதித்தே
எமக்கு முன்னர சாண்டபார் வேந்தர்மூ வெழுவர்
தமக்கு முன்னொருத் தருக்குந்தாங் கரும்பெரும் பாரஞ்
சுமக்க வல்லனே தவிர்கவிச் சொல்லெனத் தொழுதான்.

108. சூளைக் கூட்டம்யான் பொருந்திலேன் சொன்னவிப் பொருளுக்
காளைக் கூட்டென வரசனை நோக்கியே முனிவன்
நாளைக் கூட்டுவ னின்றுநீ நடபுறத் தென்னத்
தாளைக் கூட்டர வாக்கிய தலையினன் சாற்றும்.

109. சிறுத்த நாயினேன் செய்தவிப் புன்மைக ளெல்லாம்
பொறுத்தல் வேண்டுமென் றடியிணை யிருகரம் பூண்டான்
கறுத்த சிந்தையன் கௌசிகன் பொறுத்தன னென்றான்
மறுத்து மின்னுமொன் றுரைத்திடக் கேளென வள்ளல்.

110. கையி னற்பிடித் தமைச்சனைக் காட்டிமற் றிவர்கள்
வையி னுந்நினை மறுக்கினு மற்றுமோர் குற்றஞ்
செய்யி னும்பொறுத் தருள்செய்வாய் செல்கதி யளித்த
ஐய னேயுன தடைக்கல மிவரென வளித்தான்.

111. குடைநி ழற்பொலி கௌசிக னடியின்மேற் கொடிநே
ரிடையி னாளையு மகனையு மிறைஞ்சுவித் தேத்திப்
படையை நோக்கிநீர் நின்மினென் றங்கைபாற் பணித்து
விடையி தேயெனப் பணிந்தனன் வேந்தர்க்கு வேந்தன்.

112. பரமு னக்குல கென்றிறை யகன்றனன் பரிந்து
புரமெ ரித்தவ னனையமா முனிபுவி புரந்தான்
சிரம நீங்குவீ ரர்கள்செறி மன்றமுந் தெருவும்
பிரம சாரிகண் மலிந்தனர் பெருகுமுட் களிப்பால்.

113. காமத் தோகையர் கருங்குழல் விரித்தனர் பரப்பிச்
சேமத் தாமங்கள் காட்டுமச் சிறப்பெலாந் தேய்ந்து
தாமத் தாமலர் தருப்பைகள் சமிதைகள் விரித்த
ஓமத் தூமமே யோங்கின வுயர்மனை யெல்லாம்.

114. தோலி னோர்களுந் துரகதத் தோர்களுஞ் சோதி
வேலி னோர்களு மாதரு மிடைந்தமை மாறி
நூலி னோர்களு நுண்ணிடைக் கவுந்தியர் களுமுக்
கோலி னோர்களு மலிந்தனர் கொடித்தெரு வெல்லாம்.

115. புனித மாதவர் சூழ்ந்திடப் புரவலர் போற்றக்
கனிதி ருந்திய செய்யவாய்க் கன்னியர் காண
நனிதி ருந்திய நவமணி யாதனத் தேறி
இனிதி ருந்துல காண்டனன் கௌசிக னிப்பால்.

பன்னூற்றிரட்டு.

ஈகை.

கந்தபுராணம்.

1. என்னானு மோருதவி யாதொருவன் யார்க்கெனினுந்
தன்னான் முடிவதெனிற் றானே முடித்தறலை
சொன்னான் முடித்த லிடையாகுஞ் சொல்லுகினும்
பன்னாண் மறுத்துப் புரிதல்கடைப் பான்மையதே.

காஞ்சிப்புராணம்.

௨. கொடையே யெவர்க்கு மெப்பேறுங் கொடுக்கு நெறி யிற் பிறழாத, கொடையே யாருந் தன்வழியி னொழுகச் செய் யுங் குறைதீர்ந்த, கொடையே பகையை யுறவாக்குங் குலவும் பூத லனைத்தினையும், கொடையே புரக்கு மென்னுள்ளங் கொள்ளப் புகன்றான் கவுதமனே.

தணிகைப்புராணம்.

3. தருக்குறுஞ் செல்வ மெய்திற் றருக்கினாற் பிழைகளெல்லாம்
பெருக்குநல் கூரி னந்தோ பிறருழை யிரந்து சேறன்
மரித்தலிற் றுயர மீண்டும் வந்தவர்க் கிரக்க மற்றுக்
கரத்தன்மற் றதனி னூங்குக் கடுந்துய ரறிவி லார்க்கே.

விநாயகபுராணம்.

4. இரப்பவன் வாளா தேக விலனெனு மெவ்வங் கூறு
திரப்பினை யிரப்ப னென்று மிதனினன் றுவ தாகு
மிரப்பவ னிலனென் றார வியம்பிய வெவ்வஞ் சொல்லென்
றிரப்பினும் பிறர்பாற் கூறு திரக்கமோ டுதன் மைந்தா.

5. அருத்தியி னிலனென் றழு னளித்தலு மிலனென் றப்பா
லுணாத்தில னுகச் சால வுதவலு மேற்கின் றூனும்
வருத்துற விலனென் றுமை வழங்கிட வளைவில் செல்வம்
பொருந்தலு மொன்றி னென்று புகழ்மிக விளங்கி நிற்கும்.

6. சாதல்வந் தடுத்த காலுந் தனக்கொரு சாத லின்றிப்
பூதல மிறக்குங் காலும் புகழுடம் பிருக்கு மந்தக்
கோதறு புகழின் யாக்கை கொடையினாற் செல்வங் கூர
வாழ்தலை யுடையா ரன்றே வானமும் வணங்கு நீரார்.

7. ஐவத்துப் பொருளைத் தானுகரான் வழங்கா னிருந்துஞ் செத்தானே, செத்த பின்ன ரென்செய்வான் றீயார் கொள்வ ரீட்டுதலான், மெத்தும் வருத்த மேயன்றி வேறொன் றில்லை யாதலினாற், பொத்தும் வெறுக்கை நன்றியுறல் புசித்து வழங்கலேயாகும்.

கூவத்துப்புராணம்.

8. இகத்தி னன்கொடைப் பெருமையை யறிந்துளோ ரில்லென்
றகத்தி னுமழு முளைசெயா ரவரரி தாகத்
தொகுத்த வோர்பொரு ணல்குவ ரென்பதென் றுணிந்து
மிகுத்த வாவியுங் கொடுப்பரால் வேண்டுமுன் விரும்பி.

காசிகண்டம்.

9. முகமனெதி ரொன்றும் பிரியின்மற் றொன்று மொழிபவர் விழைவுறு தூத, ரகன்றுசேள் வியிலா ரருமருத் துவர்க ளரும் பொருள் கவருநர் தூர்த்தர், புகலருந் தீமை புரிபவர் மல்லர் செருக்கினர் புன்றொழிற் றீயோர், நிகழ்தரு மினையோ ரொன்பது பெயர்க்கு மீந்திடல் பழுதென விசைப்பார்.

10. மாண்புடை யாளர் கேண்மையர் தத்தம் வழிமுறை யொழுக்கினி லமர்ந்தோர், சேண்படு நிரப்பி னெய்தினோர் புரப்போர் தீர்ந்தவர் தந்தைதாய் குரவர், காண்டகு முதவி புரிந்துளோ ரினையோ ரொன்பதின் மருமுளங் களிப்ப, வேண்டுறு நிதிய மளிப்பின்மற் றொன்றே கோடியா மெனமறை விளம்பும்.

பட்டினத்தடிகள் பாடல்.

11. பிறக்கும் பொழுது கொடுவந்த தில்லைப் பிறந்துமண்மே
லிறக்கும் பொழுது கொடுபோவ தில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லு வேன்கச்சி யேகம்பனே.

12. நாயாய்ப் பிறந்திடி னல்வேட்டை யாடி நயம்புரியுந்
தாயார் வயிற்றி னரராய்ப் பிறந்துபின் சம்பன்னராய்க்
காயா மரமும் வறளாங் குளமுங்கல் லாவுமென்ன
வீயா மனிதரை யேன்படைத் தாய்கச்சி யேகம்பனே.

13. முற்றொடர்பிற் செய்த முறைமையால் வந்தசெல்வ
மிற்றைநாட் பெற்றோமென் றெண்ணாதே பாழ்மனமே
யற்றவர்க்கு மீயாம லரன்பூசை போராமற்
கற்றவர்க்கு மீயாமற் கண்மறந்து விட்டாயே.

நன்னெறி.

14. பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன் முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

15. எந்தைநல் கூர்ந்தா னிரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் மீகை மறுப்பரோ—பைந்தொடீ
நின்று பயனுதவி நில்லா வரம்பையின் கீழ்க்
கன்று முதவுங் கனி.

நீதிநெறிவிளக்கம்.

16. வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோ
னல்குரவே போது நனிநல்ல—கொன்னே
யருளில னன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான்.

இராமாயணம்.

17. வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளிய ராக வழங்குவ தல்லா
லெள்ளுவ வென்சில வின்னுயி ரேனுங்
கொள்ளுத றீது கொடுப்பது நன்றால்.

18. மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயா
தேந்திய கைகொ டிரந்தவ ரெந்தாய்
வீந்தவ ரென்பவர் வீந்தவ ரேனு
மீந்தவ ரல்ல திருந்தவர் யாரே.

குசேலோபாக்கியானம்.

19. ஒருசிறு தருமமேனு முஞற்றிடா ரிரப்போர் வந்து
தருகிகர் கரத்தா யென்று சாற்றினுங் கொள்ளா ராகிக்
கருணைசற் றின்றி யெல்லை கடந்திடத் துறந்து மீள்வர்
மருவுபல் கிளையு மோம்பார் வளம்படைத் தென்பெற் றாரால்.

புறநானூறு.

20. ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிது
மீத லெளிதே மாவண் டோன்ற
லதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே.

21. மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே
துன்னருஞ் சிறப்பி னுயர்ந்த செல்வ
ரின்மையி னிரப்போர்க் கீஇ யாமையிற்
றொன்மை மாக்களிற் றொடர்பறி யலரே.

22. தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கு
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கு

முண்பன நாழி யுடுப்பன விரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே.

புறப்பொருள் வெண்பாமாலை.

23. முல்லைக்குத் தேரு மயிலுக்குப் போர்வையு
மெல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத்—தொல்லை
யிரவாம லீந்த விறைவர்போ னீயுங்
கரவாம லீகை கடன்.

நாலடியார்.

24. உண்ணா னொளிநிறா னோங்கு புகழ்செய்யான்
றுன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானே லஅ ஆ
விழந்தானென் றெண்ணப் படும்.

25. உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
வுய்த்தீட்டுந் தேனீக் கரி.

26. உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
யிறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனுந்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

27. முன்னரே சாநாள் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள—கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.

28. எற்றகை மாற்றுமை யென்னுந் தாம்வரையா
தாற்றுதார்க் கீவதா மாண்கடன்—ஆற்றின்
மலிகடற் றண்சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகட னென்னும் பெயர்த்து.

29. துய்த்துக் கழியான் றுறவோர்க்கொன் றீகலான்
வைத்துக் கழியு மடவோனை—வைத்த
பொருளு மவனை நகுமே யுலகத்
தருளு மவனை நகும்.

30. எனதெனா தென்றிருக்கு மேழை பொருளை
யெனதெனா தென்றிருப்பன் யானுந்—தனதாயிற்
றானு மதனை வழங்கான் பயன்றுவ்வான்
யானு மதனை யது.

சீவகசிந்தாமணி.

31. மாசித் திங்கண் மாசின சின்னத் துணிமுள்ளி
னூசித் துன்ன மூசிய வாடை யுடையாகப்
பேசிப் பாவாய் பிச்சை யெனக்கை யகமேந்திக்
கூசிக் கூசி நிற்பர் கொடுத்துண் டறியாதார்.

பெரும்பொருள் விளக்கம்.

32. மின்னுந் தமனியமும் வெற்றிரும்பு மோரினமாய்ப்
பொன்னின் பெயர்படைத்தாற் போலாதே—சொன்னே
யொளிப்பாரு மக்களா யொல்லுவ தாங்கே
யளிப்பாரு மக்களா மாறு.

பழமொழி.

33. வழங்கலுந் துய்த்தலுந் தேற்றாதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வந்—தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப வஃதன்றோ
நாய்பெற்ற தெங்கம் பழம்.

சிறுபஞ்சமூலம்.

34. கழிந்தவை தானிரங்கான் கைவாரா நச்சா
னிகழ்ந்தவை பின்புரா னில்லார்—மொழிந்தவை
மென்மொழியா லுண்ணெகிழ்ந் தீவானேல் விண்ணோரா
வின்மொழியா லேத்தப் படும்.

திருக்குறள்.

35. நல்லா றெனினுங் கொளறீது மேலுலகை
மில்லெனினு மீதலே நன்று.

36. அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

37. ஈத்துவக்கு மின்ப மறியார்கொ றாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

38. சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை.

பெருமாள் திருமொழி.

வித்துவக்கோட்டம்மான்.

1. தருதுயரந் தடாயேலுன் சரணல்லாற் சரணில்லை
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் வித்துவக்கோட் டம்மானே
அரிசினத்தா லீன்றதா யகற்றிடினு மற்றவடன்
அருணினைந்தே யழுங்குழவி யதுவேபோன் றிருந்தேனே.

2. கண்டா ரிகழ்வனவே காதலன்றான் செய்திடினும்
கொண்டானை யல்லா லறியாக் குலமகள்போல்
விண்டோய் மதிள்புடைசூழ் வித்துவக்கோட் டம்மானீ
கொண்டாளா யாகிலுமுன் குரைகழலே கூறுவனே.

3. மீனோக்கு நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மாவென்
பானோக்கா யாகிலுமுன் பற்றல்லாற் பற்றிலேன்
தானோக்கா தெத்துயரஞ் செய்திடினுந் தார்வேந்தர்
கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே.

4. வாளா லறுத்துச் சுடினு மருத்துவன்பால்
மாளாத காதனோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட் டம்மானீ
ஆளா யுனதருளே பார்ப்ப னடியேனே.

5. வெங்கட்டிண் களிறடர்த்தாய் வித்துவக்கோட் டம்மானே
எங்குப்போ யுய்கேனுன் னிணையடியே யடையலல்லால்
எங்கும்போய்க் கரைகாணா தெறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறு மாப்பறவை போன்றேனே.

6. செந்தழலே வந்தழலைச் செய்திடினுஞ் செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லா லலராவால்
வெந்துயர்வீட் டாவிடினும் வித்துவக்கோட் டம்மாவுன்
அந்தமில்சீர்க் கல்லா லகங்குழைய மாட்டேனே.

7. எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கு மற்றவைபோல்
மெய்த்துயர்வீட் டாவிடினும் வித்துவக்கோட் டம்மாஎன்
சித்தமிக வுன்பாலே வைப்ப னடியேனே.

8. தொக்கிலங்கி யாறெல்லாம் பரந்தோடித் தொடுகடலே
புக்கின்றிப் புறநிற்க மாட்டாது மற்றவைபோல்
மிக்கிலங்கு முகினிறத்தாய் வித்துவக்கோட் டம்மா னுன்
புக்கிலங்கு சீரல்லாற் புக்கிலன்காண் புண்ணியனே.

9. நின்னையே தான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டுஞ் செல்வம்போன் மாயத்தால்
மின்னையே சேர்திகிரி வித்துவக்கோட் டம்மானே
நின்னையே தான்வேண்டி நிற்ப னடியேனே.

10. வித்துவக்கோட் டம்மானீ வேண்டாயே யாயிடினும்
மற்றாரும் பற்றிலேனென் றவனைத் தாணயந்த
கொற்றவேற் றானைக் குலசேகரன்சொன்ன
நற்றமிழ்பத் தும்வல்லார் நண்ணார் நரகமே.

திருவாசகம்.

குயிற்பத்து.

ஆசிரியவிருத்தம்.

1. கீத மினிய குயிலே கேட்டியே லெங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவிற் பாதாள மேழினுக் கப்பாற்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்துநின்றதொன்மை
யாதி குணமொன்று மில்லா னந்தமி லான்வரக் கூவாய்.

2. ஏர்தரு மேழுல கேத்த வெவ்வுரு வுந்தன் னுருவா
யார்கலி சூழ்தென் னிலங்கை யழகமர் வண்டோ தரிக்குப்
பேரரு ளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்.

3. நீல வுருவிற் குயிலே நீண்மணி மாட நிலாவுங்
கோல வழகிற் றிகழுங் கொடிமங்கை யுள்ளுறை கோயிற்
சீலம் பெரிது மினிய திருவுத் தரகோச மங்கை
ஞாலம் விளங்க விருந்த நாயக னைவரக் கூவாய்.

4. தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயி லேயிது கேணீ
வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை யாட்கொண்ட வள்ள
லூன்பழித் துள்ளம்புகுந்தென் னுணர்வதுவாய வொருத்தன்
மான்பழித் தாண்டமென் னோக்கி மணாளனை நீவரக் கூவாய்.

5. சுந்தரத் தின்பக் குயிலே சூழ்சுடர் ஞாயிறு போல
வந்தரத் தேநின் றிழிந்திங் கடியவ ராசை யறுப்பான்
முந்து நடுவு முடிவு மாகிய மூவ ரறியாச்
சிந்துரச் சேவடி யானைச் சேவக னைவரக் கூவாய்.

6. இன்பந் தருவன் குயிலே யேழுல கும்முழு தாளி
யன்ப னமுதளித் தூறு மானந்தன் வான்வந்த தேவ
னன்பொன் மணிச்சுவ டொத்த நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே கோகழி நாதனைக் கூவாய்.

7. உன்னை யுகப்பன் குயிலே யுன்றுணைத் தோழியு மாவன்
பொன்னை யழித்தநன் மேனிப் புகழிற் றிகழு மழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன் சீர்ப்புயங் கன்வரக் கூவாய்.

8. வாவிங்கே நீகுயிற் பிள்ளாய் மாலொடு நான்முகன் றேடி
யோவி யவருன்னி நிற்ப வொண்டழல் விண்பிளந் தோங்கி
மேவியன் றண்டங் கடந்து விரிசுட ராய்நின்ற மெய்யன்
றாவி வரும்பரிப் பாகன் றாழ்சடை யோன்வரக் கூவாய்.

9. காருடைப் பொன்றிகழ் மேனிக் கடிபொழில் வாழுங் குயிலே
சீருடைச் செங்கம லத்திற் றிகழுரு வாகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாச மறுத்தெனை யாண்ட
வாருடை யம்பொனின் மேனி யமுதினை நீவரக் கூவாய்.

10. கொந்தண வும்பொழிற் சோலைக் கூங்குயி லேயிது கேணீ
யந்தண னாகிவந் திங்கே யழகிய சேவடி காட்டி
யெந்தம ராமிவ னென்றிங் கென்னையு மாட்கொண் டருளுஞ்
செந்தழல் போற்றிரு மேனித் தேவர் பிரான்வரக் கூவாய்.

கோவிந்தசதகம்.

1. செடிக்கொரு வேங்கை குடிகொண்ட காடெனத் தேசத்திலே
அடிக்கொரு தீங்குசெய் வாரைத் துரந்தர சாளவிந்தப்
படிக்கொரு மன்னருண் டாறு ஆழுது பயிரிடுமக்
குடிக்கொரு சேதமுண் டோவச்சு தானந்த கோவிந்தனே.

2. கட்டாண்மை வேந்தர் பெருமையென் ஞதவர் கன்னத்தடி
பட்டாலல் லாமல் வணங்கார் விடமூட் புடாமற்சும்மா
தொட்டா லதைப்பின்னைப் பூச்சியென் பார்மூட் சுறுக்கெனவே
கொட்டாமற் றேளென்ப ரோவச்சு தானந்த கோவிந்தனே.

3. எடுத்தாலு மூறு மிறைத்தாலு மூறு மிடைநடுவே
தடுத்தாற் றடைபடு மோமணற் கேணித்தண் ணீரதுபோல்
அடுத்தாரை வாழ்விக்குஞ் செல்வமு ண்டானவ ரள்ளிச்செம்பொன்
கொடுத்தாற் குறைவரு மோவச்சு தானந்த கோவிந்தனே.

4. எந்தா பெனச்சென் றிரப்பவர்க் கேபவ ரெவ்வளவு
தந்தாலு நல்ல திகழுமொன் றுதெங்குஞ் சஞ்சரித்து
வந்தாற் பெருகுங் குளத்துக்குப் பெய்யு மழைத்துளிகள்
குந்தாணி போற்பெய்யு மோவச்சு தானந்த கோவிந்தனே.

5. பீடார் குலத்தினி லாகாத பிள்ளையைப் பெற்றெடுத்தால்
வாடாதும் வாடிக் குலநாச மாய்விடு மாறுபடத் [ம்
தாடாண்மையாளர்கைக் குள்ளாய்த் தருக்குலஞ் சாயவெட்டு
கோடாலிக் காம்பல்ல வோவச்சு தானந்த கோவிந்தனே.

6. உணத்தக்க நன்மருந் தாற்பிணி போமுன் றலகிலுளோர்
பணத்துக்குக் கொண்டு பரிகரிப் பார்விடம் பாய்ந்துசெத்த
பிணத்துக்கும் பச்சிலை யுண்டுபுல் லோர்க்குப் பிறக்குமவ
குணத்துக்குச் சொன்மருந் தேதச்சு தானந்த கோவிந்தனே.

7. கிட்டி யொருவன் றலைக்கு விரத்தங் கிளைத்ததென்றால்
வெட்டிவெளிசெய்யவேண்டுமென்றேவிரும்பார்பெரியோர்
எட்டினை மாத்திரம் புத்தியில் லாரொரு தின்றதென்றால்
கொட்டிலுட் கட்டுமென் பாரச்சு தானந்த கோவிந்தனே.

8. சடத்துக் கழகென்பர் தான்கற்ற கல்வியத் தன்மையல்லால்
இடத்தக்க பூடணந் தானணியாவிடி லேசுவரோ
புடத்திற் படத்தங்கக் கட்டி யுருக்கிப் பொருத்தியபொன்
குடத்திற்குப் பொட்டழ கேனச்சு தானந்த கோவிந்தனே.

9. பாவுக் கழகு பொருட்சுவை சொற்சுவை பன்மலர்பூங்
காவுக்கழகு மயிலுங் குயிலுங்கண் டாய்கமலப்
பூவுக் கழகு மணமுந் திருவும் புவிபுரக்கும்
கோவுக் கழகுசெங் கோலச்சு தானந்த கோவிந்தனே.

10. ஒளித்தாலுந் தூர்க்குணம் போமோ குருவுப தேசமந்த்ரம்
அளித்தாலும் புல்லர்நல் லோரர்வ ரோசென் றடித்துநித்தக்
களித்தி யிரந்தரங் காகங்கள் வீழ்ந்துகங் காநதியில்
குளித்தாலு மன்னமொவ் வாவச்சு தானந்த கோவிந்தனே.

11. இணக்கா திரார்வல் விரும்பொடிந் தால்வைத் திருதலையும்
வணக்கா திரார்வின் னிமிர்ந்தெழுந் றுற்புல்லர் மாறுபடும்
பிணக்கார் தவிர்ப்பவர் நாய்வாலை நீளப் பிடித்திழுத்துக்
குணக்கா ரெடுக்கவல் லாரச்சு தானந்த கோவிந்தனே.

12. நள்ளிருட் போதில் விளக்கிட்ட தாகல் லவரிருந்தால்
தெள்ளிய சீர்பெறு வீட்டுக் கழகென்பர் திங்கள்வந்தால்
தள்ளி விடாமற் குடிவைத்துக் கொள்ளத் தகாதிறப்பில்
கொள்ளிவைத் தக்கொள்வ ரோவச்சு தானந்த கோவிந்தனே.

அறப்பளீசுரசதகம்.

நன்மாணாக்க ரியல்பு.

1. வைதாலு மேமூர்கொடுமை செய்தாலு மேசீறி
மாறு திகழ்ந்தாலுமே
மனுசற் றுகிலுங் கோணாது நாணாது
மாதா பிதாவெனக்குப்
பொய்யாம னீயென்று கனிவொடும் பணிவிடை
புரிந்துபொரு ளுடலாவியும்
புனிதவுன் றனதெனத் தத்தஞ்செய் திரவுபகல்
போற்றிமல ரடியில்வீழ்ந்து
மெய்யாக வேபரவி யுபதேச மதுபெற
விரும்புவோர் சற்சீடராம்
வினைவே ரறும்படி யவர்க்கருள்செய் திடுவதே
மிக்கதே சிகரதுகடன்
ஐயா புரம்பொடி படச்செய்த செம்மலே
யண்ணாமலை தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

ஒன்றற்கொன் றழகுசெய்வன.

2. வாழ்மனை தனக்கழகு குலமங்கை குலமங்கை
வாழ்வினுக் கழகுசிறுவர்
வளர்சிறுவ ருக்கழகு கல்விகல் விக்கழகு
மாநிலந் துதிசெய்குணமாம்
சூழ்குண மதற்கழகு பேரறிவு பேரறிவு
தோன்றிடி லதற்கழகுதான்
தூயதவ மேன்மையுப காரம்விர தம்பொறுமை
சொல்லரிய பெரியோர்களைத்

தாழ்தல்பணி விடைபுரிதல் சிலரே சங்கருணை
சாற்றுமிவை யாமென்பர்காண்
சௌரிமல ரோனமரர் முனிவர்முச் சுடர்களுஞ்
சரணெமைக் காக்கவெனவே
ஆழ்கட லுதித்துவரு விடமுண்ட கண்டனே
யண்ணலெமை தருணமமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

மூடர் தாரதம்மியம்.

3. பெண்புத்தி கேட்கின்ற மூடருந் தந்தைதாய்
பிழைபுறஞ் சொலுமூடரும்
பெரியோர்கள் சபையிலே முகமேட்டி வந்தது
பிதற்றிடும் பெருமூடரும்
பண்புற்ற சுற்றஞ் சிரிக்கவே யிழிவான
பழிதொழில்செய் திடுமூடரும்
பற்றற்ற பேர்க்குமுன் பிணைநின் றுபின்புபோய்ப்
பரதவித் திடுமூடரும்
கண்கெட்ட மாடென்ன வோடியிர வலர்மீது
காய்ந்துவீழ்ந் திடுமூடரும்
கற்றறிவி லாதமுழு மூடருக் கிவரெலாங்
கான்மூட ரரைமூடர்காண்
அண்கற்ற நாவலர்க் காகவே தூதுபோ
மையனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

செயற்கருஞ் செயல்,

4. நீர்மே னடக்கலா மெட்டியுந் தின்னலா
நெருப்பைநீர் போற்செய்யலாம்
நெடியபெரு வேங்கையைக் கட்டியே தழுவலா
நீளரவி னைப்பூணலாம்

பார்மீது மணலைச் சமைக்கலாஞ் சோறெனப்
பட்சமுட னேயுண்ணலாம்
பாணமொடு துன்று விலகச் செய்யலாமரப்
பாவைபே சப்பண்ணலாம்
எர்மேவு காடியைக் கடையுற்று வெண்ணெயு
மெடுக்கலாம் புத்திசற்றும்
இல்லாத மூடர்த மனத்தைத் திருப்பவே
யெவருக்கு முடியாதுகாண்
ஆர்மேவு கொன்றைபுனை வேணியர் சுரர்பரவு
மமலனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

யாக்கை நிலையாமை முதலியவை.

5. காயமொரு புற்புதம் வாழ்வுமலை சூழ்தருங்
காட்டிலாற் றின்பெருக்காங்
கருணைதரு புதல்வர்கிளை மனைமனைவி யிவையெலாங்
கானல்காட் டும்ப்ரவாகம்
மேயவிரு புயவலிமை யிளமையழ கிவையெலாம்
வெயின்மஞ்ச ளுயிர்தானுமே
வெட்டவெளி தனில்வைத்த தீபமென வேகருதி
வீண்பொழுது போக்காமலே
நேயமுட னேதெளிந் தன்பொடுன் பாதத்தி
னினைவுவைத் திருபோதினு
நீர்கொண்டு மலர்கொண்டு பரிவுகொண் டர்ச்சிக்க
நிமலனே யருள்புரிகுவாய்
ஆயுமறி வாளர்பணி நாதனே போதனே
யண்ணலெம தருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

குறைவுற்றுங் குணங்கெடாமை.

6. தழிபட்ட சந்தனக் கட்டைபழுதாயினுஞ்
சார்மணம் பழுதாகுமோ
தக்கபால் சுவறிடக் காய்ச்சினுந் தித்தித்த
சாரமது ரங்குறையுமோ
நிறைபட்ட கதிர்மணி யழுக்கடைந் தாலுமதி
னீள்குண மழுங்கிவிடுமோ
நெருப்பிடை யுருக்கினு மடிக்கினுந் தங்கத்தி
னிறையுமாற் றுங்குறையுமோ
கறைபட்ட பைம்புயன் மறைத்தாலும் வானுலாங்
கதிர்மதி களம்போகுமோ
கற்றபெரி யோர்மகிமை யற்பரா லொளிற்
காசினி தனிற்போகுமோ
அறிவுற்ற பேரைவிட் டகலாத மூர்த்தியே
யையனே யருமைமதவேள்
அனுதினமு மனநினைவ தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

நற்குணங்களுக் கிடமாகாதவர்.

7. வெறிகொண்ட மற்கடம் பேய்கொண்டு
கள்ளுண்டு வெங்காஞ் சொரிப்புதவிலே
விழ்ந்துதேள் கொட்டிடச் சன்மார்க்க மெள்ளளவு
மேவுமோ மேவாமை போல்
குறைகின்ற வற்பர்க்கு மனைவியிழி சாதியாய்க்
கூடவே யீனமை யுண்டாய்க்
கொஞ்சமா மதிகார முங்கிடைத் தான்மிக்க
குவலயந் தனிலவர்க்கு
நிறைகின்ற புத்தியுஞ் சீலமும் மேன்மையு
நிதானமும் பெரியோர்கண்மேல்
நேசமும் மீகையும் மிவையெலாங் கனவிலுந்
நினைவிலும் வராதுகண்டாய்

அறைகின்ற சுருதியின் பொருளான வள்ளலே
யண்ணலே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

இதற்கிது வேண்டுமெனல்.

8. தனக்குவெகு புத்தியுண் டாயினும் வேறொருவர்
தம்புத்தி கேட்கவேண்டுந்
தானதிக சூரனே யாயினுங் கூடவே
தளசேக ரங்கள்வேண்டும்
கனக்கின்ற வித்துவா னாயினுந் தன்னினுங்
கற்றோரை நத்தல்வேண்டுங்
காசினியை யொருகுடையி லாண்டாலும் வாசலிற்
கருத்துள்ள மந்திரிவேண்டும்
தொனிக்கின்ற சங்கீத சாமர்த்ய னாயினுஞ்
சுதிகூட்ட வொருவன்வேண்டுஞ்
சுடர்விளக் காயினு நன்றாய் விளக்கிடத்
தூண்டுகோ லொன்றுவேண்டும்
அனற்கண்ண னேபடிக சங்கநிகர் வண்ணனே
யையனே யருமைமதவேள்
அனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுரதேவனே.

நற்பொருளிற் குற்றம்.

9. போரான கங்கா நதிக்குமதன் மேல்வருநும்
பேனமே தோடமாகும்
பெருகிவளர் வெண்மதிக் குள்ளுட் களங்கமே
பெரிதான தோடமாகும்
சீராந் தபோதனர்க் கொருவர்மேல் வருகின்ற
சீற்றமே தோடமாகும்
தீதின்முடி மன்னவர் விசாரித் திடாதொன்று
செய்யிலவர் மேற்றோடமாம்

தாராள மாமிகத் தந்துளோர் தாராமை
தானிரப் போர்தோட மாம்
சீராமுன நற்கருப் பஞ்சாறு கைப்பதவர்
தாலஞ்செய் தோடமாகும்
ஆராயு மொருநாள் மறைக்குமெட் டாதொளிரு
மண்ணமேல யருமைமதவேள்
அனுதினமு மனதினிணை தருசதுர கிரிவள
றப்பளீ சுரதேவனே.

கோபத்தின் கொடுமை.

10. கோபமே பாவங்க ளுக்கெலாந் தாய்தந்தை
கோபமே குடிகெடுக்குங்
கோபமே யொன்றையுங் கூடிவர வொட்டாது
கோபமே துயர்கொடுக்கும்
கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு
கோபமே யுறவறுக்குங்
கோபமே பழிசெயுங் கோபமே பகையாளி
கோபமே கருணைபோக்கும்
கோபமே யீனமாங் கோபமே யெவரையுங்
கூடாம லொருவனுக்குங்
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநர
குக்குழியி னிற்றள்ளுமால்
ஆபத்தெ லாந்தவிர்த் தென்னையாட் கொண்டருளு
மண்ணமேல யருமைமதவேள்
அனுதினமு மனதினிணை தருசதுர கிரிவள
றப்பளீ சுரதேவனே.

கம்பராமாயணவசனம்.

மிதிலைக்காட்சி.

ஸ்ரீராமர், இலக்குமணர், விசுவாமித்திரர், சீதாபிராட்டியாரைத் தந்ததனாலே "இலக்ஷுமியிருக்கின்ற செந்தாமரை மலர் போலத் தோன்றும் மிதிலையிலேபுகுந்து அலங்காரமான பெரிய வீதியில் நடந்தார்கள். இம்மூவரும் நடந்துகொண்டிருக்கையில் சங்கீதங்கள்கேட்டும், நடனசாலையில் அபிநயங்கள் பார்த்தும், கருவிச்சூதாடும் விளையாட்டை நோக்கியும் இவைமுதலான விநோதங்களைக்கண்டு அதிசயித்தும், கோட்டை மதிற்புறத்துள்ள அகழியில் அன்னப்பட்சிகள் சந்தோஷத்தோடு விளையாடுவதைப் பார்க்க அங்குச் சற்றுநேரம் நிற்க, அப்போது ராஜமாளிகையின் மேல் அநேக பாங்கிமார் நடுவில் சீதாதேவியார் சாளரவாயில் வழியிலே ஸ்ரீராமனைப் பார்த்தார்; ஸ்ரீராமரும் அத்தேவியாரை நோக்கினார். அவர்களுக்குள்ள ஆனந்தத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. அங்கிருந்து ஸ்ரீராமர் முதலானவர்கள் நடந்து ஜானகியார் கண்ணுக்கு மறைந்துபோனார்கள். சீதாதேவியார் ஸ்ரீராமரிடத்தில் பிரீதிவைத்துத் தமக்குள்ள நாணமழிந்து பாங்கியர்களிடத்தில் சொல்லிக்கொண்டிருக்கச் சூரியன் அஸ்தமயமானான். பின் செக்கர்வானம் மாலைப்பொழுது இருட்காலம் சந்திரோதயம் குயிலோசை அன்றிலோசை இவைமுதலியவற்றால் உண்டான துன்பநோயைப்பற்றித் தாஷித்து அயர்ந்து கிடந்தனர். அப்பிராட்டியார் அப்படியிருக்க, ஸ்ரீராமர்முதலிய மூவரும்போய்ச் ஜனகராஜனைக்காண அவ்வரசன் எதிர்வந்து அழைத்துக்கொண்டுபோய் ஒரு விடுதியில்விடச் சுவர்ண கசிதமான மாடத்தில் அவர்கள் தங்கியிருக்கையில் அகலிகை புத்திரராகிய சதாநந்தமுனிவர் வந்தார்; அம்முனிவரை ஸ்ரீராமர் வணங்க, ஆசிர்வதித்துக் கௌசிகர் பக்கத்தில் அம்முனிவர் சேர்ந்து, மாதவரே! நீர் இப்போது வந்ததற்கு இப்பூமி

எத்தவஞ்செய்ததென்றார். சதாநந்தனைநோக்கிக் கௌசிகர் சொல்லுகின்றார்; இந்த ராகவனார் ராட்சசியாகிய தாடகை ஆகத்தையும், என்னது யாகத்தையும், உம்முடைய தாயார் சாபத்தையும் முடித்து, என் மனைவியாகுலத்தை ஒழித்தாரென்று சொன்னார். அதற்குச் சதாநந்தர் கௌசிகனைநோக்கி, உமது கிருபையிருப்பதினாலே ஸ்ரீராமருக்கு அரியகாரியம் என்னவிருக்கின்றதென்று சொல்லிப், பின்பு ராகவனைநோக்கி, இம்முனிவர் பூர்வத்தில் அரசராயிருக்கையில் காட்டில் வேட்டையாடி இளைத்து வசிட்டமுனிவரிடஞ்சார்ந்தார். அம்முனிவர் உபசரித்து விருந்துசெய்வேனென்று சொல்லி, உடனே காமதேனுவையழைத்து இவர் முதலானவருக்கு அன்னம்படையென, அப்படியே சமஸ்தமும் அதுசெய்தது. அதனாலே ஆயாச நீங்கி யோசித்து இப்படிப்பட்ட மேன்மையான பொருள் அரசருக்கேயிருக்கவேண்டுமென்று நீதிசாஸ்திரம் இருக்கிறதென்றுசொல்லி வசிட்டனைப்பார்த்து, அந்தப் பசுவை நமக்குக் கொடுமென்றார். அவர் நானோ தவசி. கொடுக்கக்கூடாது, அது வருமாகில் நீரே கொண்டுபோமென்றார். அவர் அச்சுரபியைக் கட்டிக்கொண்டு போக அது கயிற்றை யறுத்துவிட்டு முனிவரிடம் வந்து என்னை அரசனுக்குக் கொடுத்தீரோவென்றது. அதற்கு வசிட்டர், நான் உன்னைக் கொடுக்கிலேனென்ன, அப்பசு கோபித்து அரசன் சேனைகளை நாசஞ்செய்கிறேனென்று தன் மெய்ம்மயிரைச் சிலிர்க்க அதினின்று. குரூரமுள்ள பலவிதசேனைகள் ஆயுதங்களோடுகிளம்பி அரசன் சேனையைமுழுதும் நாசமாக்கின. அது கண்டு அவ்வரசருடைய புத்திரர்கள் கோபித்துப் பசுவின்வலி இதுவல்ல, வசிட்டர் கபடமென்று நினைத்து அவர் சிரத்தையரிந்துவிடுகிறோமென்று நெருங்க, அம்முனிவர் கோபத்தோடு விழிக்க, குமாரர்கள் நூற்றுவரும் இறந்தார்கள். அவர்கள் இறந்ததைக்கண்டு ராஜா பாணந்தொடுக்க, முனிவர் தமது தண்டத்தையெதிர்கவென்றார். தைவிகப்படைகளைத்தொடுக்க அவைகளைத் தண்டமானது கவளீகரித்ததைக்கண்டு பரமசிவனைத் துதிக்க அவர் கொடுக்கப்பெற்ற அஸ்திரம் பிரயோகிக்க வசிட்டர் அப்படையை விழுங்கிப் பிரகாசித்தனர். அரசர் பார்த்து முனிவர்களுக்கன்றி மற்றவர்க்குப் பராக்கிரமமும் தேஜசும்

இல்லையென்று நினைத்து நம்முடைய வலிக்கு என்ன பயன் உள்ளதென்று தவஞ்செய்வதற்குக் கிழக்குத்திசையைச் சார்ந்து தவவேடம்பூண்டு தவஞ்செய்யத் திடுக்கிட்டுத் தேவேந்திரன் திலோத்தமையென்னும் ரம்பா ஸ்த்திரீயை யனுப்பினான். அவளைப்பார்த்து மயங்கிப் பின் கோபித்து நகைத்தார். இது தேவேந்திரன் செய்த வஞ்சமென்றறிந்து நீ பூமியில் ஜனிக்கக்கடவாயென்று திலோத்தமையைச் சபித்தார். உடனே யமதிக்கில் ஒரு பொழிலில் வந்து தவஞ்செய்தார். அச்சமயத்தில் அயோத்தியரசன் திரிசங்கென்பவன் தன்குலகுருவாகிய வசிட்டரையடைந்து சரீரத்தோடு சுவர்க்கலோகமடைய எனக்கு அருள்கவென்றான். அதற்கு அம்முனிவர் நீ இறந்து அடைவாயென்றார். அப்படிப்பட்ட குருவை யடைவேனென்றான். அதற்குக் குருவை நீக்கி வேறொருவனைத் தேடுகிறாய், ஆதலால் நீசனாய்விடுகவென்றார். உடனே ராஜவர்ச்சசு இழந்து நீசவர்னமானான்; பார்த்தவர்கள் இகழ நகரத்திலிருந்து நீங்கிச் சுற்றித் திரிகையில் ஒரு சோலையில்வந்துநிற்க விசுவாமித்திரர் திரிசங்கை நோக்கி நீ யாரென, தனக்கு வசிட்டரால் நேரிட்டதைச்சொல்ல இப்படியாவென்று நகைத்துச் சுவர்க்கலோகத்தைக் கொடுப்பேனென்றுசொல்லி வேள்வியை முடிப்பிக்க அங்கிருக்கு முனிவர்களை அழைக்க, வந்த முனிவர்களில் வசிட்டர் புத்திரர்கள் விசுவாமித்திரரைநோக்கி, நீசனுக்குத்தரும் வேள்விக்காரியத்தை நாங்கள் கற்கவில்லையென, கோபித்துக் கிராதராகுகவெனச் சபிக்க அப்படியே ஆகிப்போனார்கள். பின் கோசிகர் வந்திருந்த முனிவர்களோடு யாகத்தை முடித்து இவ்வரசனைச் சுவர்க்கத்துக்குத் தவவலியால் விமானத்திலேற்றியனுப்பினார். அங்கே பார்த்த தேவர்கள் நீசன் வரக்கூடாதென்று தள்ளிவிட, கவிழ்ந்து வருகிற திரிசங்கு கூக்குரலிட்டுத் தபோநிதியே சரணம் சரணமென்றான். அங்கே நில் நில்லென்றுசொல்லிப் பிரதியுலகம் சிருஷ்டிக்கக் கௌசிகர் தொடங்கினார். அதையறிந்த தேவர்கள் வந்து கௌசிகரைநோக்கி இப்போது ராஜரிஷியானீரென்றுரைத்துத் திரிசங்கு சுவர்க்கத்திற்கு இந்த நட்சத்திரம் தெற்குத்திசையில்வந்து ஒளிவிடுகவென்று சொல்லிப்போனார்கள். உடனே கௌசிகர் மேற்குத் திசைச் சோலையில் வந்து

தவஞ்செய்கையில் அம்பரீஷ மஹாராஜன் நரமேதஞ்செய்ய ஒரு மைந்தனை விலைக்குவாங்குவதற்கு வேண்டும்திரவியத்தோடு தேரிலேறிக் காட்டிலே தேடித்திரிகையில் ஒரு பர்ன சாலையைப் பார்த்துக்கிட்டினான். அதில் இரிசிகமுனிவரும் அவர்பத்தினி கௌசிகியும் அவர்கள் புத்திரர் மூவரும் யிருக்கக் கண்டு, அரசன் தான் வந்ததைச் சொல்லப் பிதா, ஜேஷ்டன் தமக்கு வேண்டுமென்ன, தாயோ கனிஷ்டன் தமக்கு வேண்டுமென்ன, இதையறிந்த இடையிற்பிறந்த புத்திரன் அரசனைப் பார்த்து என்றந்தைக்கு வேண்டும் பொருள்களைக் கொடும், நானே வருகிறேனென்றான். அப்படியேகொடுத்து அம்மைந்தனைக்கொண்டுபோய் ஒரு சோலையில் நிறுத்தி, அரசனை நித்திய கருமஞ்செய்யப்போனான், அப்போது அச்சிறுவன் கௌசிகரிடம்போய் வணங்கிநிற்க நீயாரென்ன, தான் இன்னானென்றும் தான்வந்த வரலாறு இன்னதென்றும் சொல்ல, அவர் இரு மந்திரத்தை உபதேசித்து, யாகத்தைச்சேர்ந்த யூபத்தில் உன்னைக்கட்டுவான், அப்போது யிம்மந்திரத்தைத்தியானஞ்செய், தேவர்கள் வந்து அந்த யாகத்தை நிறைவேற்றி உன்னையும் விடுவிப்பாரென்று சொல்லி அனுப்பினார். பின்னர் வடதிசையில் வந்து பிராணாயாமமுடையராய்ப் பிரணவத்தைத் தியானித்துக் கொண்டே நெடுங்காலம் நிற்கக் கபாலந்திறந்து இருட்படலம் எவ்வுலகமுந் தாவிமூடியது; அதனாலே பூமியில் புகையமூந்தியது திக்குப்பாலகர் கண்ணோடு அஷ்டநாகங்கள் கண்ணுங் கூசின, இப்புகையால் தேவர்கள் சலனமடைந்தார்கள். தேவேந்திரன் பிரமன் திருமால் பரமசிவன் மற்றதேவர்களும் கௌசிகரிடம் வந்தார்கள். மும்மூர்த்திகளும் முனிவரைநோக்கி வேதபாரகர் நீரேயல்லாமல் வேறிலர் என்று சொன்னார்கள். அதைக்கேட்ட கௌசிகர் அவர்களை வணங்கி அஞ்சலியஸ்தராய் யானினைத்த தவப்பயன் சித்தித்ததென்று களிப்பில் மூழ்கினார். தேவர்கள் தத்தம் பதவிகளுக்குப்போனார்கள்; இக்காரியம் பூர்வத்தில் நடந்தது. இவருக்குச் சமானமானவர்கள் யாருமில்லை, இப்படிப் பட்டவர் கிருபை உமக்குக் கிடைத்திருப்பதால் அரியகாரிய மென்னவிருக்கின்றது என்று சதாநந்தமுனிவர் ஸ்ரீராமருக்குச் சொன்னார். சொல்லவே ஸ்ரீராமர் அவரை வணங்கியபின்

வாழ்த்தித் தம்மிடம் போயினார். கௌசிகரும் இராம இலக்குமணர்களும் சயநித்திருக்கையிலே சூரியோதயமாயிற்று. இம்மூவரும் சந்தியாவந்தன முதலிய நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு ஜனகராஜர் செய்யும் யாகசாலையைச் சார்ந்தார்கள். அவ்வரசர் வேள்வியைமுடித்து அரண்மனை மண்டபத்தில் முனிவரோடு இராம லக்ஷுமணர்கள் பக்கத்திலிருக்க வீற்றிருந்தார். பக்கத்திலிருந்த குமாரர்களது அழகைப்பார்த்து விசுவாமித்திரரை வணங்கி இவர் யார் உரையுமென்று ஜனகர் கேட்க, இவர்கள் விருந்தினர்; உமது வேள்வியைப்பார்க்க வந்தார். வில்லையும் ஒருகை பார்ப்பார், தசரதசக்கரவர்த்தி புதல்வரென்று ஸ்ரீராமர் பிரபாவத்தைக் கௌசிகர் ஜனகராஜருக்குச் சொல்லத்தொடங்கினார்.

குலமுறைகிளத்தல்.

சூரியவம்சத்திற்கு முதற்புத்திரரான மனுச்சக்கரவர்த்தியென்பவரும் உயிர்கள் பசிநீங்கப் பூமிதேவி வளஞ்சுரக்கச் செய்தவரும், பிரமனிடத்திலிருந்து திருமாலைப்பெற்றுக் கொணர்ந்து ஸ்ரீரங்கத்திற் பிரதிஷ்டை பண்ணினவரும், தனக்கு வந்த ஆபத்து நீங்க இந்திரன் இடபமாய்த் தாங்கப்பெற்றவரும், தேவர்களுக்குச் சமுத்திரமதனஞ்செய்து அமுதங்கொடுத்தவரும், புலியுமானும் ஒரு துறையில் நீருண்ணச் செங்கோல் செலுத்தினவரும், சுராசுரர்கள் போர்செய்தகாலில் அமராபதியைக் காத்தவரும், தம்மிடம் அடைக்கலமென்றுவந்த புறவினுயிருக்குத் தம்முயிரை வதிலாகக்கொடுத்தவரும், சமுத்திரம் தோண்டினவர்களும், ஆகாசகங்கையைப் பூமியிலே கொணர்ந்தவரும், நூறு அசுவமேதஞ் செய்தவரும், சந்திரனை வென்றவருமான இவர்முதலோர் அளவிறந்தவர்கள் இருந்தார்கள். அக்குலத்திலே வந்தவர் ரகுமகாராஜா; அவர் புத்திரர் அஜமஹாராஜா; அவர் புதல்வர் தசரதசக்கரவர்த்தி; அவர் மைந்தர் இவரென்றுசொல்லி, கலைக்கோட்டுமுனிவராற் புத்திரகாமேஷ்டி செய்ததுமுதல் அகலிகை சாபநிவர்த்திவரையிலும் நடந்த விஷயங்களையுணர்த்தி, இதுவே இவர் வரலாறும் புஜபலமுமென்று கோசிகர் ஜனகருக்குரைத்தார்.

வில்லிறுத்தது.

ஜனகமஹாராஜா கௌசிகனைநோக்கி: இந்தப்பாரமான வில்லைக்குறித்து நானென்னசொல்லுவேன்? அனேகர் வில் வளைக்கத் தோற்றதனாலே என்மனம் சலனமடைகின்றது. இவர் நாணேற்றுவாரேல் எங்கள் துக்கசாகரத்தை நீக்குவாரென்றார். அங்கெதிர்நின்றவர்களைப் பார்த்து அவ்வில்லைக் கொண்டு வருகவென்ன, அவர்கள் அச்சாலையிற் புகுந்துசொல்ல அநேகர் கூடி எடுத்துவருவதைக் கண்ட ஜனங்கள் பலவாறுசொல்ல அதை இறக்கிவைத்தார்கள். ஸ்ரீராமருடைய முகமலர்ச்சியை நினைத்துத் துன்பந்தரும் வில்லைப்பார்த்துத் தன்புத்திரி நலத்தை யெண்ணும் ஜனகராஜரது மனதைக் குறிப்பினாலறிந்த சதானந்தமுனிவர் சொல்லத்தொடங்கினார்.

பரமசிவன் தன் பாகத்திலுள்ள உமையாகிய தாக்ஷா யணியை நிந்தித்தானென்று இவ்வில்லைக் கொண்டுபோய்த் தக்கனது யாகசாலையைக்கிட்ட, அங்கிருந்த தேவர்கள் பல்லும் கைகளும்போக ஓடிவிட்டார்கள். அவ்வேள்வியழியப் பரமனார் கோபந்தணிந்து இந்த ஜனகராஜரது மரபிலே பிறந்த ஓரரச னிடத்தில் அவ்வில்லைவைத்தார். இவ்வில்லை வளைக்கப் பரமசிவனுக் கொப்பான ஸ்ரீராமரே! நீரன்றி யாரிருக்கிறார்கள். இதற் குத்தோன்றிய ஜானகியார் தன்மையைக் கேளுமென்றுரைத்து, வேள்விசெய்வதற்குப் பூமியை ஏராலுழுதோம்; அவ்வுழுபடைச் சாலிடமாகச் சீதாபிராட்டியார் அவதரித்தார். அவர் குணங்களை என்னசொல்லுவேன்? இவர் தோன்றினபின் மற்றைய மாதர்கள் அழகிழந்தார்கள். அவரைப் பூமியரசரெல்லாரும் தனித்தனி விரும்பிவந்து கேட்க அவர்களுக்கு இந்த வில்லை வளைத்தவரே இவ்வைதேகியார் நாயகரென்று சொன்னோம். அதற்கு எல்லாவரசர்களும் வந்து இவ்வில்லை வளைக்கக்கூடாமல் இவ்வில்லோடு பூமிதேவிதந்த சீதாபிராட்டியாரை இச்சித்துப் போர்செய்தார்கள். அதில் இந்தவில்லைக் காக்குநிமித்தம் செய்யும் வாள்யுத்தத்தில் வருந்துகின்றாரென்றிரங்கித் தேவர்கள் ஆயுதங்களை ஜனகருக்குக் கொடுத்தாரென்றறிந்த அரசர்கள்

பயந்து நீங்கினார்கள். அன்றுமுதல் இன்றுபரியந்தம் இந்த வில்லின்பக்கத்தில் யாரும்வந்துமிலர், திரிந்துமிலர்; இனிக் கலியாணமும் இல்லையென்றிருந்தோம். இவர் நாணேற்றினால் சுகிர்தமாகுமென்றார். அம்முனிவர் சொன்னதைக் கருதிக் கௌசிகர் ஸ்ரீராமனைப்பார்த்தார்; அவர் வில்லைப்பார்த்தெழுந்தார்; ஸ்திரீ ஜனங்கள் இவரையும் வில்லையுங்குறித்துப் பலவாறு பேச, ஸ்ரீராமர் போய் அவ்வில்லையெடுத்து வில்லடியைத் தமது தாளில்வைத்ததும் நாணைப்பூட்டியதும் காண்கிலர்; வில்லெடுத்ததைப்பார்த்தார்கள், ஒடிந்த ஓசையைக்கேட்டார்கள், தேவர்கள் பிரமாண்டம் பிளந்ததென்றேங்கினார்கள்; மற்றவர்கள் பட்ட துன்பத்தை என்ன சொல்லவேண்டும்? அதுநிற்க; ஜனகராஜரும் ஜனங்களும் ஜானகியாருக்குச் சுபம் உண்டாயிற்றென்று அவரவர்கள் செய்த விநோதகாரியங்களைச் சொல்ல முடியாது. அங்கு வில்வளைத்த சமாசாரத்தை அறிந்த ஒரு பாங்கிபோய் ஸ்ரீராமர் ரூபலாவண்ணிய முதலியவற்றை அப்பிராட்டியாருக்குச் சொல்லவே மகிழ்ந்திருந்தார். ஜனகர் கௌசிகரைநோக்கி, ஸ்ரீராமருக்கு இத்தினம் திருக்கலியாணம் முடித்தல் விருப்பமோ? எங்குந் தெரிவிப்பதோடு சக்ரவர்த்தியையும் அழைப்பித்து முடிப்பது அபேக்ஷையோவென்றார். கௌசிகர் அவரை வருவிப்பது நல்லதென்றார். ஜனகர் இங்கு நடந்தவைகளைச் சொல்லுங்களென்று சக்ரவர்த்திக்குத் தூதருந் திருமுகமும் அனுப்பினார்.

தசரதர் எழுச்சி.

தூதர்கள் அயோத்தியரசனை வணங்கி, அங்கே நடந்தவைகளைச் சொல்லி ஓலையைக்கொடுக்க வாசிக்கக்கேட்டுக் களிப்படைந்து, வில்லொடிந்த வொலிதானே அன்று கேட்டதென்றுரைத்து, சேனைகளும் அரசர்களும் முன்னே செல்லுகவென்று பறையறைவித்தார். அப்போதே நகரமாந்தர்களும் வஸ்திராபரணங்கள் தரித்துக்கொண்டுபோனார்கள். அப்படியே சேனைகளும் போயின. அவ்விருவகைக் கூட்டங்களுஞ் செல்லுகையில் அவர்கள் கோலாகலங்களைச்சொல்லிமுடியாது. தாதியர் பலர்

சூழக் கைகேயியாரும் அப்படியே சுமித்திரையாரும் கௌசலையாரும் சிவிகையிற் சென்றார்கள். அவ்வாறே அறுபதினாயிரம் தேவிமார்களும் போனார்கள். வசிட்டமுனிவரோடு பரதரும் சத்துருக்கருஞ் சென்றார்கள். சக்ரவர்த்தியும் அநேகமாதர்கள் வாழ்த்தெடுக்கவும், வாத்தியங்கள் கோஷிக்கவும், அரசர்களோடு பரிஜனங்கள் சூழவும் இரதத்திலேறி இரண்டுகாதம்போய்ச் சந்திரசைலமென்னும் மலைப்பக்கத்திலிறங்கினர்.

எதிர்கொள்ளல்.

சக்ரவர்த்தி தமது சேனையோடு கங்காநதியைச் சார்ந்தார். சேனைகள் வந்த ஆயாசம்நீங்க அந்நீரைப் பானஞ்செய்தன. அங்கிருந்து ராஜா புறப்பட்டு மிதிலாநகரத்தினெல்லையையடைய, ஜனகராஜா செய்த காரியங்களைச் சொல்லுகின்றோம். சக்ரவர்த்தி வந்தாரென்னுமளவில் சந்தோஷம் பெருகச் சூரியனைச் சந்திரன் சார்ந்தாற்போல, ஜனகர் எதிர்கொள்ள வெழுந்துவந்தார். சக்ரவர்த்தி சேனைகள் மிதிலாநகரத்தைவந்தடைந்தன; ஜனகர் சேனைகளும் பரிஜனங்களும் குடைகள் ஆலவட்டங்கள் சாமரைகள் கொடிகள் கொடிச்சீலைகள் மகரதோரணங்கள் முதலிய பிருதுகளும் மங்கலவாத்தியகோஷங்களும் ஆகிய சம்பிரமத்தோடு சக்ரவர்த்தியைக்கண்டு தேரிலிருந்திறங்கத் தசரதர்கைலாகுதர இரதத்திலேறி ஆலிங்கனஞ்செய்ய, ஜனகரைத் தமது தேரிலிருக்கச்செய்ய இருவரு மிகுந்த சந்தோஷத்தோடு மிதிலையையடையத் தம்பியோடு ஸ்ரீராமரும் தமது தந்தையைக் காணப் பரிஜனங்களோடு எதிர்கொண்டுவந்து பிதாமுதலானவர்களைக் கிரமப்படி நமஸ்கரிக்க ஒவ்வொருவரும் எடுத்துத் தழுவினார்கள். சக்ரவர்த்தி கட்டளைப்படி தம்பியர்களோடு ஸ்ரீராமர் இரதத்திலேறி மிதிலையினுட்புகுந்து ராஜவீதிமுதலியவைகளில் பிரவேசித்தார்.

கோலங்காணல்.

ஜனகராசர் தசரதசக்ரவர்த்தியாரைச் சபாமண்டபத்தில் இறக்கி உபசரித்துச் சிங்காதனத்தில் இருக்கவெனத் தேவியர்

பக்கத்தில் நிற்கச் சக்ரவர்த்தி இருந்தபோது ஜனகனைப்பார்த்து, சீதாபிராட்டியாரைக் கொணர்கவென்று வசிட்டமுனிவர் சொல்ல வைதேகியாரைக் கொண்டுவருவீர்களென்று மாதர்களை யேவ, அவர்கள் தாதியரிடஞ்சொன்னார்கள்; அவர்கள் ஜானகியா ரழகினை மறைப்பதையுணராமல் ஆபரணங்களால் அலங்கரிக்கத் தொடங்கிக் கேசாதிபாதபரியந்தம் அவயவங்களுக்குத் தக்கவா பரணங்களால் சிங்காரித்தார்கள். பின் மாதர்களும் சிந்தும் குறளும் கூனும் பாங்கிமார்களும் வந்தடிவணங்கினார்கள். நவரத்தினங்களால் சித்திரித்த மேற்கட்டியென்னும் விதான நிழலில் ஜானகியார் நடக்கலுற்றார். நடக்கும்போது இவர்பாதம் மிருதுவானதால் வருந்துமென்று தளிர்களும் மலர்களும் பரப்ப மயில்போல நடந்து ராஜசபாமண்டபத்தையடைந்தார். வைதேகி யார் வடிவத்தை ஸ்ரீராமர் பார்த்தவளவில் அவருக்குண்டான களிப்பு இன்னதென்று எவராலும் சொல்லமுடியாது. திருப் பாற்கடலினின்று எங்கள் தவப்பயனால் இங்குவந்தவதரித்த ஸ்ரீராம மூர்த்தி ராஜாவானதால் அதற்கேற்க மஹாலக்ஷ்மியே மைதிலி யாராய் வந்தாரென்று வசிட்டர் உள்ளுக்குள்ளே களித்திருந்தார். வசிட்டாதி முனிவர்களை முன்னே வணங்கிச் சக்ரவர்த்தியைத் தொழுது ஆனந்த பாஷ்பம் பொழிகின்ற தம் பிதாவாகிய ஜனகர் சமீபத்திலிட்ட ஆசனத்தில் ஜானகியாரிருந்தார். வசிட்ட முனிவர் கௌசிகரைநோக்கி, மேலானவரே, சீதாபிராட்டி யாருக்குத் திருக்கலியாணம் என்றைக்குச்சொல்லுமென்றார். அதற்குக் கௌசிகர் நாளைக்கென்றார். சீதாபிராட்டியார் கன்னிகாமாடஞ்சேர்ந்தார். ஸ்ரீராமரும் மற்றையரசர்களும் முனிவர்களும் தங்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிற விடுதிகளைச் சார்ந்தார்கள். சூரியன் மேருவின் வலப்பக்கத்தில் மறைந்தான்.

திருமணம்.

அன்றிரவில் ஜனகர் உபசரிக்கத் தம்பியர்களுடன் ஸ்ரீராமருமிருந்தார். சீதாபிராட்டியாரும் ஸ்ரீராமரும் அன்றிரவு எப்போது விடியுமென்று தனித்தனி எண்ணினார்கள். ஜனகர்

நாளைத்தினந் திருமணமென்று பறைபறைவித்தார். அதைக் கேட்ட நகரமாந்தர்கள் சூரியனுதிக்கவே, தோரணம் நாட்டுகின்றவர்களும், முத்துப்பந்தர்கள் அமைத்து வாழை கமுகு பலா முதலியவை தூக்கி நிறைகுடம் தீபம் முதலிய அஷ்டமங்கலம் ஸ்தாபிப்பவர்களுமாய், யாவரும் சித்திர வஸ்திராபரண புட்பங்களால் அலங்கரித்துக்கொண்டு, வீதிகளில் மாளிகைதோறுந் தங்கள் தங்களுக்கு மணம்நேரிட்டதுபோல ஆனந்தபரவசராய், முகூர்த்தலக்கினம் எப்போதென்று விசாரித்துக்கொண்டிருந்தார்கள். வாத்திய கோஷமுதலியவை சமுத்திரம்போலொலிக்க, அரசர்கள் சூழச் சக்ரவர்த்தி மண்டப ஆசனத்திலேறியிருக்க, முனிவர்களும் அரசர்களும் ஜனகரும் சுஜனங்களோடு முறைப்படி ஆசனங்களிலிருந்தார்கள். அப்போது ஸ்ரீராமர் கங்காநதிமுதலிய தீர்த்தங்களால் திருமஞ்சனமாடித் திருமண்காப்பிட்டுத் தம் குலதெய்வமான ஸ்ரீரங்கநாதனை வணங்கிப் பிராம்மணர்களுக்குக் கன்னியாதானஞ்செய்து, சர்வாலங்காரத்தோடு திருமணக் கோலத்திற்காயத்தமாகிப் பிராமணர்களும் முனிவர்களும் ஆசீர்வதிக்கவும் பரதர் சாரத்தியஞ்செய்யவும், மற்றதீசரதிகளிருவரும் சாமரை யிரட்டவும் தேரிலேறி மணக்கோலமாகவந்து அரசர்களோடு சக்கரவர்த்தி வீற்றிருந்த மஹாமண்டபத்திலெழுந்தருளி வசிட்டாதிமுனிவர்களை வணங்கித் தந்தையாகிய சக்கரவர்த்தியையு நமஸ்கரித்துப் பக்கத்தில் வீற்றிருந்தார். அச்சமயத்தில் ஜானகியார் மண்டபத்தில் பிரவேசித்தார். வைதிகபிராமணர்களும் முனிவர்களுஞ்சூழத் தருப்பையோடு வசிட்டமுனிவர் அடைந்து, மணவறையில் விதிப்படி அக்கினி மூட்டி அமைத்தனர். பின் திருக்கலியாணமணையில் ஸ்ரீராமரும் மைதிலியாரும் இருந்தார்கள். ஜனகராஜா ஸ்ரீராமருக்கெதிரே நின்று என் மகளுடன் நீர் வாழக்கடவீரென்று தாராதத்தஞ்செய்தார். மாதர்கள் வாழ்த்தெடுக்கச் சங்கம் முழங்கின. அக்கினியில் மந்திரஞ்சொல்லி ஆகுதிமுற்றும்முடித்தார். பின் ஜானகியார் கரத்தை ஸ்ரீராமர் தமது பாணியினாலே பரிக்கிரகித்தார். திருக்கலியாணத்தில் அமைத்த அக்கினியை வலம்வந்து அவ்வேள்வி அக்கினியை வணங்கிப் பொரியிட்டு அம்மிமிதித்து எதிரேநின்ற அருந்ததியைத் தரிசித்தார். பின் சுவர்ணதானம் முதலியவைசெய்து வசிட்டர்

முதலியோரைத் தண்டஞ்செய்து, தம் பிதாவைக் கும்பிட்டு, ஜானகியாரைக் கைக்கொண்டு கலியாணமண்டபத்தினின் றெழுந்து வாத்தியமுதலியவை கோஷிக்கத் தாசரதியார் தாய்மார் மூவரையும் வணங்கினர். அவ்வாறே ஜானகியாரும் வணங்கினர். இவ்வாறு பங்குனிமாதம் உத்திரநட்சத்திரம் பகற்காலத்தில் ஸ்ரீராமபிரானது திருக்கலியாணச் சடங்கு நிறைவேறிற்று. ஸ்ரீராமருடைய தம்பிமாருக்கு யான் பின்புபெற்ற புத்திரிகளைக் கொள்ளுமென்று ஜனகர் பந்துக்களோடு வந்து சக்கரவர்த்திக்குச் சொன்னார். அவர் சம்மதிக்க அம்மூவருக்கும் தம்முடைய புத்திரிகள் மூவரையும் தனித்தனி ஜநகர் பாணிக்கிரகணஞ் செய்வித்தார். அப்புத்திரிகளுக்குச் சீதனங்களுங் கொடுத்தார். இவ்வாறு சுகமாய் முனிவர்களோடு சக்கரவர்த்தியும் அந்நகரத் திற்றங்கினர்.

பரசுராமர் வரவு.

இப்படி மிதிலையில் போகபோக்கியங்களை அனுபவிக்கின்ற ஸ்ரீராமரை விசுவாமித்திர முனிவர் வாழ்த்தி மேருமலையை யடைந்தார். பின்பு தசரதர் அயோத்திக்குப் போகச் சேனைமுத லியோருக்கு எழுகவென்று கட்டளையிட்டு, அதைக்கேட்ட தாச ரதியார் முதலியவர் பின்னேதொடர்ந்துவர இரதத்திலேறிச் சென்றார். மார்க்கத்தில் சகுனம் தடைசெய்யக்கண்டு நின்று தம் அருகில் வந்த சகுனசாஸ்திரியைநோக்கி, இச்சகுனம் என்னவென, இப்போதேவரும் இடையூறு அது நல்லதாய் விடுமென்று சொல்லுமளவில் கோபக்குறியோடு கார்த்தவீரன் ஆயிரம் புஜங்களைச் சேதித்த மழுவாயுதமுடையவரும், தம் பிதாவைக்கொன்ற பழிபற்றிய அரசர்கள் குலத்தை இருபத் தொரு தலைமுறை வந்து கொன்றவரும், கிரௌஞ்சகிரியை அம்பினாலே துளைத்தவருமாகிய பரசுராமர் வரவைச் சக்கரவர்த்தி பார்த்து இவர் வருதற்குக் காரணம் என்னவோவென்று நினைத்துத் திகிலடைந்திருந்தார், அதிகோபத்தோடு பரசுராமரை ஸ்ரீராமர்பார்த்து இவர் யாரோவென்று நினைக்குமளவில் சக்கரவர்த்தி ஆராதனைசெய்து பாதத்தை வணங்குதலும் அதைப் பாராமல் ஸ்ரீராமருக்கெதிர்போய் நின்று நீர் வளைக்க ஒடிந்த

வில்லின் பலம் நமக்குத்தெரியும். உமது புஜபலத்தை நாம் அறியவந்தோம். நமது புஜத்தில் போர்செய்யத் தினவும் கொஞ்சம் இருக்கின்றது. இங்கே வருதற்கு வேறுகாரணம் இல்லையென்று ஸ்ரீராமருக்குப் பரசுராமர் சொன்னவளவில் உலக முழுதும் வென்று காசிபமுனிவருக்குக்கொடுத்த சுவாமிக்கே மனிதர்கள் ஒரு பொருளாவரோ? இச்சிறுவனும் அடியேனும் அடைக்கலமென்று சொல்லி, அரசர்களிடத்தில் கிருபைசெய்து கோபநீங்கிய நீர், இன்றிந்த வில்லைப்பிடியென்று கோபிக்கின்றது தருமமாவென்று சக்கரவர்த்தி சொன்னார். பின்னும் என் மகனுயிர்போகாமற் செய்வீராகில் என் வம்ச பரம்பரை நிலை பெற்றிருக்கும்; இதுதான் சுவாமிகள்செய்யும் காரியமென்று அவர் பாதத்தைப்பிடித்து ஸ்மரணை தப்பியிருந்தபோது, பரமசிவன் பிடித்தவில் பின்னமுள்ளது; அதனில்லை ஸ்ரீராமரே சொல்லக் கேளும். பூர்வத்தில் பிரமதேவர் மகமேருவின்கண் நிருமித்த இரண்டு வில்லுகளில் ஒன்றைப் பரமசிவன் கையிற்கொண்டார். மற்றொரு தனுசுவைத் திருமால்பிடித்தார்; இதையறிந்த தேவர்கள் இச்சிலைகளில் வலியுள்ள தெதுவென்று பிரமதேவனை வினவ, அப்போது அவர்கள் கேட்டது தகுதியானதென்று பிரமதேவர் போய் வணங்கி அரியரர்களை வில்லுகள் காரணமாகப் போர் மூட்டிவிட்டனர். அவ்விருவர்களும் போராடுகையில் பரமசிவன் கைவில் பின்னமாக அவர் கோபித்து மற்றும் போர்தொடங்கத் தேவர்கள் தடுத்தார்கள். பரமசிவன் தம் வில்லை இந்திரனுக்குக் கொடுத்தும் திருமால் இரிசிகமுனிக்குத் தந்தும் அவரவர் தத்தமிடஞ்சார்ந்தார்கள். அவ்விரிசிக முனிவர் எம்பிதாவுக்குக்கொடுக்க அவர் எமக்குத் தந்த இந்த வில்லை வளைப்பீரானால் ஸ்ரீராமரே உமக்குச் சமானமானவர் யார்? நாம் உம்மோடு போருஞ்செய்யோம். பின்னமான வில்லை வளைத்த வலியை நினைப்பது ஆண்மையன்று; உம்மிடத்தில் நாம் வழிப் பகையுடையோம். அதற்குக்காரணமாவது:—எம்பிதா கோபம் நீங்கினரென்று உலகத்தார்சொல்லும்படி ஓரரசன் அவரைக் கொல்ல அதனாலே மனம்வருந்திப் பூமி அரசரெல்லாரையும் இருபத்தொருதலைமுறைகொன்று அந்த இரத்தவெள்ளத்தில் எம் பிதாவுக்கு நீர்க்கடன் செய்ததுதான். பின் பகையையொழித்துக் கோபமடக்கி இமகிரியில் தவஞ்செய்திருந்தோம். அங்கே நீர்

வில்லையொடித்த வோசையைக்கேட்டுக் கோபித்துப் போர்செய்ய வந்தோம். நீர் சமர்த்தரானால் இந்தவில்லை வளையுமென்று பரசுராமர் சொன்னவளவில், ஸ்ரீராமரும் மந்தஹாசத்தோடு வில்லைத் தாருமென்று வாங்கி வளைத்துச் சொல்லுகின்றார். பூமி யரசரெல்லாரையும் கொன்றீரென்றாலும் நீரோ சமதக்கினி முனிவர்புத்திரர் தவவிரதம்மேற்கொண்டிருக்கின்றீர். இவ்வேதுக் களினால் உம்மைக்கொல்லத்தகாது. இந்தப்பாணமோ தப்புவ தன்று, இதற்கிலட்சியம் யாதுசொல்லுமென்றார். நீர் கோபியா தேயும், ஜெகத்காரணர் நீரேயென்றறிந்தோம். பரமசிவன் பிடித்த வில் நீர் பிடிக்க ஒடியாமலிருக்குமா? எய்தபாணம் பழுதுபடா வகை யென்தவமெல்லாம் சிதைக்கவென்று கூப்பிய கைகளைத் தளரவிடவும் பாணம்போய் அவர் தவமுழுதுங் கவளீகரித்துத் திரும்பியது. உடனே ஸ்ரீராமரிடத்தில் விநயத்தோடு விடைபெற்றுக்கொண்டு பரசுராமர் போய்விட்டார். பிதா களிப் படையப் புஷ்பம் வருஷிக்கவந்த தேவர்களுள் வருணதேவனை நோக்கி இந்தவில்லைக் காப்பாற்றிவையுமென்று கொடுத்தார். ஸ்ரீராமர் சக்கரவர்த்தியோடு அயோத்தியாபுரியை யடைந்தார். அப்படியிருக்குநாளிலே கேகயதேசத்தரசரான உதாசித்தென்பவர் அனுப்பிய திருமுகத்தைப்பார்த்துச் சக்கிரவர்த்தி பரதனை யழைத்து உன் மாதாமகனார் உன்னைப்பார்க்க அபேக்ஷிக்கின்றார் போய்வாவென்றனுப்ப, எழுநாளில் சத்துருக்கனரோடு பரதர் போய் அங்குக் களிப்போடிருந்தனர்.

8 3217

மந்திராலோசனை.

ஒருநாள் தசரதமஹாராஜா சபாமண்டபத்தில் தனித்திருந்து தன் மந்திரிமாரை வரவழைக்க, மகா புத்திசாலிகளும் தாக்ஷணிய மின்றி அரசர்க்கு நீதியுரைப்பவருமாகிய அந்த மந்திரிகள் வந்து கூடியபின் அம்மஹாராஜா அவர்களைநோக்கி, நான் எனது குலத்துப் பெரியோர் காத்துவந்தபடி இதுவரையிலும் உங்கள் சகாயம்பெற்று இயன்றமட்டும் பூமியைக்காத்து ஜனங்களுக்கு நன்மைசெய்தேனேயல்லது என் ஆத்துமாவுக்கு நன்மை தேடினேனில்லை; இப்போது அறிவைமழுக்கும்படியான மூப்பு

எனக்கு வந்துவிட்டதனால் இனி அந்தப்பாரத்தை என் குமாரனாகிய இராமனிடத்து இறக்கி இளைப்பாறுவதுமன்றி, அவ்விராமனுக்குத் திருமகள் விவாகம் கண்டதுபோல் நிலமகள் விவாகத்தையுங் கண்டுவந்து பெரியோர்கள் பழியாதிருக்கும்படி ஆத்துமலாபத்திற்குரிய தவநிட்டைபெற விரும்புகின்றேன். நீங்கள் இம்மையாட்சிக்கு இதுவரையிலும் துணைப்பட்டதுபோல் மறுமையாட்சிக்கும் துணைப்படவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன் என்றனர். இதைக்கேட்ட மந்திரிமுதலாயினோர் தசரதமஹாராஜனைப் பிரியநேர்ந்ததேயென்கிற விசனமும், ஸ்ரீராமனை அரசனாகப்பெறுவோமென்கிற சந்தோஷமும் கலந்தசிந்தையராய் இரண்டுகன்றுகளுக்கு இரங்குகின்ற பசுவைப்போல் சூற்றுச்சும்மாவிருக்க, வசிட்டமாமுனிவர் அரசனைநோக்கி, ஓ மஹாராஜனே, ஆளுகையில் உம் பெரியோரோடு நீர் ஒத்தவராயினும் சகலகுண பூரணரான இராமசந்திரனைப் பெற்றதனால் அவர்களினும் நீர் மேம்பட்டிருக்கிறீர்; உமது ஆணைத்தனையில்லையென்கிற குறையில்லாமல் ஜனங்களெல்லாம் விசேஷமாய்க் களிக்கும்படி உம்முடைய குமாரர் நிர்வகிக்க வல்லவர்; ஆதலால் நீர் எண்ணிய எண்ணம் தகுந்ததே என்றுசொல்ல, சுமந்திரரும் அதையே ஆமோதித்து அரசனைநோக்கி விண்ணப்பஞ்செய்தார். இவைகளைக் கேட்ட மஹாராஜா மகனைப்பெற்றநாளினும் மிகுந்த ஆனந்தத்தையடைந்து சுமந்திரரையே இராமசந்திரனை அழைத்துவரும்படி கட்டளையிட்டார். அப்படியே சுமந்திரர்சென்று சொல்லியதைக் கேட்டதும் ஸ்ரீராமமூர்த்தி லக்ஷ்மணனோடு தேர்மேலேறித் தன் தந்தைசன்னிதானஞ்சென்று பணிந்துநிற்க, தந்தை மகனைக் கட்டியணைத்து, அப்பா! நம்முன்னோர் அனுஷ்டித்துவந்தபடி நான் இதுவரையிலும் இராச்சியபரிபாலனஞ்செய்தேன். இனி அதனை உன்பாரமாக்கி நான் வீடுபெறத்தக்க முயற்சியையே விரும்புகின்றேன். இதனை நீ மறுக்காமல் ஏற்றுக்கொண்டு என்னைக் காப்பாற்றவேண்டுமென்றுசொல்ல, இராமரும் அது தனக்குப் பிரியமல்லதாயினும் பிதாபணித்ததைச் செய்துதீரவேண்டுமென்னுங் கடமையால் அங்கிகரித்தனர். அங்கீகரித்ததும் சக்கரவர்த்தி மிக்ககளிப்போடு தன் மாளிகைக்குச்சென்று தன்மகற்கு முடிசூட்டுஞ்செய்தியை அறிவிக்க முறைமுறையே யாவருங்கேட்டுத் தந்தமக்கே அவ்வரசுநேர்ந்ததுபோல் உடம்பு

தெரியாமல் ஆனந்தபரவசராயிருந்தனர். அதுகண்டு அரசன் இதென்ன ஆச்சரியம்! நீங்கள் இப்படிக் களிக்கக் காரணம்யாது என்றுவினவ, அவர்கள் அவரிடமுள்ள நற்குணங்கள் இப்படிக் களிப்பிக்கின்றன; ஊரினிடத்து யாவர்க்கும் உபயோகமான குளம் நிறைவதையும், அப்படிப்பட்ட கனிமரம் பழுப்பதையும் மேகம்வந்து பொழிவதையும், ஆற்றுநீர் கழனிமேல் பாய்வதையும் கண்டு சந்தோஷியாமலுமிருப்பார்களோ குடிகள் என்று விண்ணப்பஞ்செய்யக்கேட்டுச் சோதிடம் வல்லோரையழைத்துப் பட்டாபிஷேகத்துக்கு நாள் ஏற்படுத்திக்கொண்டிருந்தனர். இப்படியிருக்கையில் நால்வர் பெண்கள் கோசலையினிடம் சென்று இச்செய்தியை அறிவிக்க அவள், இனி அரசன் துறப்பான் என்கிற விசனமொருபுறம் இருக்கவும் மங்களச்செய்தி சொன்னவர்க்கு வெகுமதியளித்துப் பிராமணர்க்குப் பலதானங்கள் கொடுத்து ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் ஆலயத்துக்குச்சென்று அவர் திருவடிவணங்கித் தன் மகற்கு நன்மைகள்பெருகும்படி பலநோன்புகள் நோற்கத்தொடங்கினாள்.

மந்தரை சூழ்ச்சி.

தசரதமஹாராஜன், நாளைப் பட்டாபிஷேகத்துக்கு நல்ல நாளென்று சோதிடர் சொன்னதனால், இராமற்குச் செய்ய வேண்டியனவற்றைச் செய்யும்படி வசிட்டரோடு சொல்ல, அப்படியே அவர் இராமனிடஞ்சென்று நாளைப் பட்டாபிஷேகமென்பதை அறிவித்து, அந்தணர்களிடத்து அடங்கிநிற்கவும், சூதாடன்முதலியன செய்யாதிருக்கவும், எல்லா ஆத்துமாக்களுக்கும் ஓர் உயிர்போனின்று தீதகற்றி நன்மைபயக்கவும்வேண்டும் எனப் பல நீதிகள்போதித்து ஸ்ரீமந்நாராயணமூர்த்தியின் கோயிலிற்சென்று அவர்க்குத் திருமஞ்சனமுதலிய செய்வித்து இராமற்குக் காப்புகட்டிச் சடங்கைநிறைவேற்றித் தசரதருக்கு அறிவிக்க, அவர், ஜனங்களுக்குத் தெரிவித்து நகரத்தை அலங்கரிப்பித்தார். இப்படியிருக்கக் கூனியொருத்தி, இராமன் பாலியத்திலே தன் கூனின்மீது வில்லாலுண்டை எய்ததை நினைத்துக் கோபம்பொங்கக் கைகேயியினிடஞ்சென்று துயின்றுகொண்டிருந்த அவளை எழுப்பி, உனக்குப் பெருங்குறை

நேர்ந்திருக்க நீ துயின்றுகொண்டிருப்பது தகுமோ என, அவளும் இராமனை மகனாகப்பெற்ற எனக்கும் குறையுண்டாமோ என்று உரைக்கக்கேட்டு, கூனியானவள்: அடிபேதாய்! நாளை இராமற்கு முடிசூட்ட நின்கணவன் நிச்சயித்திருக்கின்றான் எனக் கேட்டு, நல்லமுத்தாராபரணத்தைக் கைகேயி கூனிக்கு வெகுமதி கொடுக்க அதை அவள் வெறுமற்கழற்றிப்போட்டுக் கைகேயியை நோக்கி: அடி முழுப்பேதாய்! அங்ஙனமமையின் நின்மகனாகிய பரதன் இராமற்கு ஆட்செய்யவும், நீ கோசலைக்கு ஆட்செய்யவு மமையுமே. அப்போது கோசலையின் தாதிமார்க்கல்லவோ நானாட்செய்யவேண்டும். இதனை எப்படி பொறுப்பேனென்று அழுதுகொண்டு பலவுஞ்சொல்லி அவள் புத்தியைக் கலக்கவும் அவள் கலங்காமல், மநுகாலமுதல் நடந்துவருமுறையை அழிக்கப் பார்க்கிறையோ புத்திகெட்டவளே! என்முன்நிற்காமல் எழுந்து போவென்று அவளை இகழ்ந்துரைத்தாள். அதற்கு அவள் பின்னிடாமல் கைகேயி பாதங்களைப் பிடித்துக்கொண்டு, நீ விட முண்ண எத்தனஞ்செய்தால் அதைத்தவிர்க்காமல் நான் புறத்துப் போகேனென்று அவள்மனம் மாறும்படி பலபல பேச்சுகளைப் பேச, அவளும் முன்னிருந்த மனநிலைகெட்டுக் கூனியைநோக்கி: நீ சொல்வதே தக்கது, அதற்கு உபாயம் என்னென்றுவினவ, முன்னே சம்பராசுரனை உன் கணவன் வெல்லச்சென்றபோது நீ தேர்நடத்தினதற்கு உவந்து இரண்டு வரமளித்திருக்கின்றானே; அவற்றுள் ஒன்றினால் உன் மகன் அரசுபெறவும் மற்றொன்றினால் பதினான்குவருடம் இராமன் காட்டுக்குச்செல்லவும் கேட்கக் கடவை எனக் கேட்டு மிகமகிழ்ந்து கேகயன்மகள் அவளுக்குப் பல வெகுமதியளித்துத் தன் பணிகளைக் களைந்தெறிந்து தரையிற் கூந்தல்புரள அலங்கோலமாய் அழுதுகொண்டுகிடந்தனள்.

கைகேசி சூழ்வினை.

அன்றிரவில் தசரதமஹாராஜன் கைகேயிமாளிகைக்குச் சென்று அவள் அலங்கோலமாய் வீழ்ந்திருப்பதைக்கண்டு அவளை எடுக்கப்போக, அவள் அந்தக் கைகளை நீக்கிவிட்டுப் பேசாம லிருந்ததனால், பெண்ணே! யாருனக்குத் தீங்கிழைத்தனர் சொல்லென: அக்கைகேசி, மன்னவனே! உமக்கு என்மேல்

இவ்வளவு கருணையிருந்தால் முன் எனக்குக் கொடுத்தவரம் இரண்டும் தரவேண்டும் என்றாள். அவளது வஞ்சமறியாத அரசன் சிரித்து, சொல் இப்போதே கொடுக்கிறேன், இராமன் மேல்ஆணை—என்றான். பின்பு அவள் என் மகனாகிய பரதன் அரசாள்வது ஒருவரம்; இராமன் காட்டுக்குப்போவது இரண்டாம் வரம் என்றாள். அதுகேட்டு அரசன் காட்டுத்தீயில் வெதும்பின யானைபோல் வேகமடங்கிவிழுந்து கொல்லன் உலைத்துருத்திபோல் பெருமூச்செறிந்து நாவறண்டு உதிரவேர்வைவிட்டுச் சொல்லக் கூடாத மிகுந்த துயரத்தை அடைந்து தரையிற்கிடக்கவும் அவள் சிந்தித்தும் தளராமையைக்கண்டு, கைகேசி: இப்போது நீ என்ன திகைத்துப் பேசுகிறாயா உனக்கு யாராயினும் துர்ப்போதனை செய்தார்களா என்று வினவ, எனக்குத் திகைப்புமில்லை துர்ப் போதனையுமில்லை என்று சொல்லிக் கைகேசி ஒரேபிடியா யிருந்தாள். அப்போது அம்மஹாராஜன், அவளையும் சத்தியத்தையும் மிகவெறுத்துக்கொண்டே, என்னசெய்வோம்; இவளை வேண்டுவதே மேலானதென்று விழுந்து அவளை மிக வணக்கிக் கேகயன்மானே! இவ்விராஜ்யத்தைப் பரதன் கொள்ள மாட்டான்; கொண்டாலும் உலகத்தார் இஷ்டப்படமாட்டார்கள். யாரும் இஷ்டப்படாமல் இராமனோடு செல்ல நீ யாரை வைத்துக் கொண்டு உலகம் ஆள்வாய். ஆதலால் நீயே இசைந்தால் உனக்கு நல்ல புகழுண்டு; வீண்பழி ஏன் படைக்கிறாய். இராமனே உன் மகனுக்கு ராஜ்யம்கொடுப்பான். நீ விரோதமான பேச்சுப் பேசாதே. அல்லவென்றால் உன் மகன் அரசாளட்டும். இராமன் காட்டுக்குப்போகாதிருக்கும்படியாகிலும் கிருபைபண்ணு. பேயும் வணங்கி ஒன்று இரந்தால் கொடாதிராதே. என் உயிர்போன்ற இராமன் என் கண்ணுக்கு எதிரில்லாமற்போனால் என் உயிர் நில்லாது. ஆதலால் நீ அபயந்தந்து என்னை ரக்ஷிக்கவேண்டும் என்று இப்படிப் பலவகை சொல்லி வேண்டவும் அவள் மனமிரங்காமல், மஹாராஜாவே! நீர் முந்தி வரம்கொடுத்து மறுபடி மறுத்தால் உம்மைப்போல் சத்தியவான் யாரிருக்கிறார் என்றுகூற, மறுபடி அரசன்: அடிபாவி! உனக்குத் தயையும் தாக்ஷண்யமுமில்லையே, நீ பழிபாவங்களையும் எண்ணுவதில்லையே. என் உயிர் துடிக்கின்றதே, கடைசியில் நான் ஒரு பெண்ணாலே உயிர்விடும்படியாயிற்றே, இந்த அவமானத்துக்கு என்ன

செய்வேன் என்று அவளைப் பலவகை தூஷித்து மகா வேதனையோடு தரையிற் புரண்டுகொண்டிருந்தான். அக்கைகேசி கிஞ்சித்தும் இளகாமல் அரசனே! நீ கொடுத்தவரத்தைத் தவிர்வையானால் இதோ உன் எதிரில் உயிர்விடுகிறேன் என்று துணிந்திருந்தாள். இப்படியிருக்கப் பொழுதுவிடிந்தது. பறவை முதலியவும் ஸ்ரீராமபட்டாபிஷேகங்காணக் குதூகலித்தன போல எழுந்துலாவ, இவ்விரவு எப்போது விடியுமோ என்று எதிர்பார்த்திருந்த ஆடவர்களும் பெண்களும் எழுந்து அலங்காரஞ்செய்துகொண்டு தெருக்களில் நிறைந்து போங்கள் போங்கள் என்று ஒருவரையொருவர் நெருக்கினரேயன்றி போனவர்களுமில்லாமல் நின்றவர்களுமில்லாமல் கடல்போலக் கூவிக்கொண்டிருந்தார்கள். அநேகராஜாக்கள் வெண்குடை வெண்சாமரைகள் விளங்கவும், கிரீடமுதலிய காந்திகள் தேவர் கண்ணையுமறைக்கவும் பட்டாபிஷேக மண்டபத்துக்கு வந்து சேர்ந்தார்கள். வசிட்டமாமுனிவர் மற்றுமுள்ள முனிவரோடும் பிராமணரோடும் அங்குவந்து பட்டாபிஷேகத்துக்குவேண்டிய பொருள்களையும் புண்ணியதீர்த்தங்களையும் சித்தஞ்செய்து சிங்காதனமுதலியவும் திருத்திவைத்திருந்தார். இவ்வகையிருக்க, அரசன் கைகேயிமாளிகைக்குச் சென்றிருப்பதுதெரிந்து சுமந்திரன் அங்குச்செல்ல, கேகயன்மகள், இராமனை இங்கு அழைத்துக்கொண்டுவா என்று சொல்ல, அதைக்கேட்டுச் சுமந்திரன் இராமனுக்கு இச்செய்தி அறிவிக்க, அவரும் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியை வணங்கி அரசர் சூழவும் பல வாத்தியங்கள் முழங்கவும் தேரேறி வீதிகளில்நின்ற பெண்கள் மொய்த்துப் பற்பலவிதமாய்ப் புகழ்ந்துபேச விபவமாய் வீதிகளைக்கடந்து கைகேயி மனையுட்சென்று தந்தையிருக்குமிடம் தேடிக்கொண்டிருக்கையில் அந்தக் கைகேயி எதிரில்வந்து தன் பாதகங்களைக் கும்பிட்டு வணங்கிநிற்கிற இராமனோடு, அப்பா! உன் தந்தை சொன்ன செய்தி ஒன்று உனக்குச் சொல்வேன் என்றாள். இராமமூர்த்தி, தாயே அவர் சொன்னாலென்ன, நீ சொன்னாலென்ன, கட்டளைப்படிநடக்கக் காத்திருக்கிறேன் என்றதைக்கேட்டு, உன் தம்பி பரதன் இந்நாடாளவும், நீ தவவேடத்தோடு பதினன்குவருடம் காட்டிற்செல்லவும் மஹாராஜா பணித்தார் என்றாள். அதுகேட்டு,

முன்னிலும் அதிக சந்தோஷமாக அன்றலர்ந்த செந்தாமரை மலரொத்தமுகத்தோடு ஸ்ரீராமர், அம்மா என் தம்பி பெறுஞ் செல்வம் என்செல்வமேயன்றோ இதோ காட்டிற்குச் செல்கின்றேன் என்று அங்கீகரித்தார்.

நகர் நீங்கல்.

பிறகு ஸ்ரீராமர் கோசலையின் மாளிகையிற்சென்று தெண்டனிட்டுநிற்க, அவள், அப்பா முடிசூட ஏதாகிலும் இடையூறுண்டோவென்று வினவ, அவர் என் தம்பி முடிசூடும்படி மஹாராஜா கைகேசிக்கு வரந்தந்தார் என்றார். அதுகேட்டுக் கோசலாதேவி, முறைபிறழ்வு என்பதொன்றேயன்றிப் பரதன் உன்னிலும் மேலான நற்குணமுடையவன் என்று சந்தோஷித்தாள். பின்பு தன்னைக் காட்டுக்குப் போம்படி அரசன் கொடுத்த வரத்தையும் அறிவிக்க அவள் வேரற்ற கொடிபோல் வீழ்ந்து புலம்பி, மகனே அப்படியாகில் என்னையும் கூட அழைத்துக்கொண்டுபோ என்ன, இராமர், அம்மா என் பிரிவினாலே வருந்துகிற மஹாராஜாவுக்கு ஆறுதல்சொல்லிக்கொண்டு அவர் அரசைவிட்டுத் தவஞ்செய்யப்போம்போது, நீயும் கூடப்போய் நோன்புகளைச்செய்தல் நியாயமேயன்றி இப்போது வருவது நியாயமன்று. இந்தப் பதினான்குவருடங்களும் பதினான்கு நாழிகையாகக் கழித்து முனிவர் முதலானோர் ஆசீர்வாதங்களையும் பெற்று மேன்மையோடுவருகிறேன். விசுவாமித்திரமுனிவராலே முன்பெற்ற அஸ்திரமுதலியவை எனக்குத் துணையிருக்கின்றனவேயென்று சொல்லியதைக்கேட்டுக் கோசலையானவள், இவனைக் காட்டுக்குச் செல்லாதிருக்கும்படி அரசனைவேண்டித் தடுப்பேனென்று கைகேசிமாளிகைக்குச்சென்று அரசன்கிடக்கிற கிடையினாலே இறந்ததாகநினைத்துக் கோவென்று கதறிப்புலம்ப, இந்தக்கூக்குரலைச் சபாமண்டபத்திற்கூடியிருந்த அரசர் அந்தணர் முதலியோர் செவியுற்று அதை அறிந்துவரும்படி ஒருமுனிவரை அனுப்பினார்கள். அவர் அங்குச்சென்று அரசனை உற்றுப்பார்த்து மூர்ச்சையடைந்ததாகத் தெரிந்துகொண்டு இதென்னகாரணமென்று கைகேசியை வினவ, அவள் நடந்ததையெல்லாம்

சொல்லினுள். பின்பு அம்முனிவர், மஹாராஜாவே கவலைப்பட வேண்டாம்; ஸ்ரீராமருக்குக் கைகேசியே அரசுகொடுப்பாள் என்றுசொல்லிச் சிதோபசாரங்கள்செய்ததனுல் அரசனும் கண் திறந்து விசனப்பட, முனிவர் கைகேசியைநோக்கிப் பலவகையில் புத்திசொல்லியும் கேளாமல் ஒரேபிடியாய், ராஜா பேச்சுத்தவரி னுல் நான் உயிர்விடுவேனென்று கூறினுள். ராஜா பலவகையில் அவளைத் தூஷித்துக் கோசலை வந்திருப்பதையும் தன் பிரிவுக்காக அவள் துயரப்படுவதையும் கண்டு அதிக விசனமுற்று முன்னொரு காலத்தில் தான் வேட்டைக்குச்சென்று ஒரு தடாகத்தில் முனி குமாரனொருவன் கடத்தில் தண்ணீர்மொள்ள அவ்வோசை யானது யானை தண்ணீர்உறிஞ்சுவதுபோலத் தோன்றினதனுல் இருட்டில் தெரியாமல் அம்பை எய்ய, அக்குமாரன் அது பட்டுக் கதறித் தரையில் விழுந்ததும் தான் அங்கே ஓடிப்பார்த்து அவன் வரலாற்றையறிந்து இரண்டுகண்ணுமில்லாத அவன் தாய்தந்தை யரிடஞ்சென்று செய்தியை அறிவிக்க அவர்கள் அளவில்லாத் துக்கத்தோடு, நீயும் மகனைப்பிரிந்து உயிர்விடக்கடவாயென்று சபித்ததையுஞ்சொல்லி, ஆதலால் இராமன் வனஞ்செல்லா திரான்; நானும் உயிரோடிரேன் என்று கூற, கோசலை முதலியவர்கள்கேட்டுத் திகைத்துநின்றுர்கள். சபையிலிருந்து வந்த முனிவனும் இவைகளையெல்லாம் தெரிந்துகொண்டு சபை யினிடம்சென்று அறிவிக்க அங்கிருந்தவர்களெல்லாம் தசரத மஹாராஜனைப்போலவே சோகமுற்றுப் புலம்பினுர்கள். இச் செய்தி முறைமுறையாய் எங்கும் பரவ நகரத்திலுள்ளோரெல்லாம் ராஜாவையும் கைகேயியையும் தருமத்தையும் நிந்தித்துக் கொண்டே தேம்பியழ, கிளி முதலிய பறவைகளும் யானை குதிரை முதலான மிருகங்களும் அழுதன. கூனியும் கைகேசி யுமே அழாதிருந்தவர். இப்படியிருக்க இச்செய்திகேட்ட லக்ஷ்மணர் மிகக்கோவங்கொண்டு கவசம்பூண்டு வாள்முதலிய வற்றை வரிந்துகட்டிக்கொண்டு அம்புப்புட்டிலையும் புறத்தில் தாங்கிக் கையில் வில்லிலே நாணேற்றிக்கொண்டு, தேவர்களாயி னும் தயித்தியர் முதலியோராயினும் மும்மூர்த்திகளாயினும் வரட்டும், நான் யாவரையும் புறங்கொடுத்தோட விட்டு ஸ்ரீராம பிரானுக்கு முடிகவிக்க நிற்கிறேனென்று உலகம் நடுங்கும்படி

அங்கேவந்தார். இராமபிரான் அவனையும் அவர் கொண்ட கோபாவேசத்தையும் பார்த்துப் புன்னகைகொண்டு "அப்பா இதேன் இத்தனை கோபம்? குற்றம் மஹாராஜாமேலுமில்லை; சிற்றன்னைமேலுமில்லை; என் மேலுமில்லை. தெய்வசங்கல்பம் இப்படியிருந்தால் யார் என்னசெய்யலாம்? தந்தையை அசத்திய வாதியாக்கி ராஜ்யம்பெற எனக்கு விருப்பமில்லை. எனக்கு விருப்பமில்லாதது உனக்கு எப்படி விருப்பமாம், ஆதலின் கோபந்தணி" என்று பலநியாயங்களைச்சொல்லித் தம்பியைச் சாந்தப்படுத்தி அவனோடு சுமித்திரையின் திருமாளிகைக்குப் போனார். அங்கே இக்குமாரரிருவரும் வரக்கண்ட சுமித்திரா தேவி, கரையில்லாத் துக்கக்கடலிலாழ்ந்து வீழ்ந்துபுரள, அவளை யெடுத்து அவள் என்னசொன்னாலும் கேளாமல், "அம்மா இவ்வுலகம் கீழ்மேலானாலும் தந்தையைப் பொய்யனாக்காமல் வனம்போய்த்திருமேவன்" என்று உறுதியாய்ச்சொன்னார். இப்படி யிருக்கையில் கைகேசி அனுப்பின சேடிமார்கள் மரவுரியைக் கொண்டுவந்து நிற்க லக்ஷ்மணர், நாட்டையிழக்கச்செய்தவர் என்னசொன்னாலும் கேட்கவேண்டுவதுதான் என்றுசொல்லி அவைகளை வாங்கி இராமனுக்குங்கொடுத்துத் தானும் உடுத்திக் கொண்டு இனி நிமிஷமும் இங்கிருப்பது நியாயமல்லாமையால் நான் வனம்போய் வருவேனென்றுசொல்லிச் சுமித்திரையைப் பணிந்துநிற்க, அவள் தன் மகனைநோக்கி, குழந்தாய் இராம னிருக்குமிடமே அயோத்திநகர், அவரே உன் பிதாவாகிய மஹாராஜா, சீதையே நான் ஆதலால் சுகமாய்ப் போய்வா என்று ஆசீர்வதித்து, மகனே இன்னொன்றுகேள், நீ இராமனுக்குத் தம்பி என்னும்படியிராமல் ஏவலாளாயிருந்து அவன் திரும்பி வருகையில் இங்குவா, அப்படியில்லாமற்போனால் அவற்குமுன் உயிர்துறந்துவிடு என்றுசொன்னாள். இராமசந்திரன் தம்பியும் மரவுரியுடுத்துத் தன்னோடு கூடவர முயல்வதைக்கண்டு, தம்பி, நான் சொல்வதைக்கேள், கோசலை முதலான தாய்மாரையும் தந்தையையும் தேற்றிக்கொண்டு எனக்குப் பிரதிநிதியாக நீ இங்கே இருக்கவேண்டுமென்ன: அதைக் கேளாமல் அவர் கண்ணீர்விட்டழ, ஸ்ரீராமர் அவரும் கூடவரச் சம்மதித்து அவரோடுகூட முன்பு பட்டாபிஷேகத்துக்கு உரிய கோலத்தோடு

யாவரும் கண்களிக்கச்சென்ற வீதிகளிலேயே மரவுரியோடு எல்லாரும் பார்த்துத் தாரைதாரையாகக் கண்களில் நீரொழுகவும் விலங்குகளும் இமையெடாமற் கதறவும் அயோத்தியாபுரி திருநீங்கினதுபோல் காணப்படவும் நடந்துவருகையில், வசிட்டமாமுனிவர் வந்து வனஞ்செல்லாதிருக்கும்படி சில வார்த்தைகள் சொல்லக்கேளாமல் அதற்குத்தக்க நியாயங்களைச்சொல்லி மறுத்துவிட்டுச் சீதாபிராட்டி திருமனைக்குச்சென்றார். தாய்மாரும் அரசர் அந்தணர் முதலியோரும் அழுதுகொண்டு கூடவர மரவுரியுடுத்து வருகின்ற தன் நாயகனைக்கண்டு மனங்கலங்கிச் சீதாதேவி இதென்னவென்று தன் கணவனை வினவ, அவர் நேர்ந்ததைத் தெரிவித்துப் பெண்ணே நான் காட்டுக்குப்போய் வருகிறேன், நீ வருந்தாமலிரு என்றார். அதுகேட்டு அவள் இதென்ன புதுமை. என்னைப் பிரிந்துபோகவுந் துணிந்தீரோ என்ன, ராமமூர்த்தி, கல்லுமுள்ளுமிருந்து கடினமானகாட்டுக்கு வர உன் திருமேனி ஒவ்வாதே; தீப்போற்காயும் வெய்யிலிலே அக்காடு மிகச்சுடுமே என்றதைக்கேட்டுச் சீதை, உம்மைப் பிரிவதினும் அது சுடுமோ என்றுசொல்லிச் சரியென்று உள்ளே போய் மரவுரியுடுத்திக்கொண்டு அவர் பக்கத்தில் வந்து அவர் கையைப்பிடித்துக்கொண்டு நின்றாள். அதுகண்டு அங்கிருந்த யாவரும் பட்டவிசனத்தை என்ன சொல்லலாம். இப்படித் தம்பியும் பிராட்டியும் தானும் தந்தையிருக்குமிடஞ்சென்று அவரையும் மற்றவரையுங் கும்பிட்டுத் தொடர்ந்தயாவரையும் மெல்ல நிறுத்திவிட்டுச் சுமந்திரர்கொண்டுவந்த தேரின்மேல் ஏறிப் புறப்பட்டார்.

[இங்கே வால்மீக ராமாயணத்தோடு மாறாயிருக்கின்றது. சீதை மரவுரி உடுத்திக்கொள்ளவில்லை. சுமித்திரைமாளிகையில்சேடிமார் மரவுரி கொணர்ந்ததுமில்லை; சீதையை யிட்டுக்கொண்டு மறுபடி கைகேயி வீட்டுக்குப்போனபோது கைகேயியே நேராக மரவுரிகொடுத்தாள். சீதைக்குக்கொடுக்கவந்ததை அங்கிருந்தவர் தடுத்தார்கள். அப்படியே சிலசில பேதங்கள் அங்கங்கேயிருக்கின்றன.]

தைலமாட்டல்.

தேர்மேற்சென்ற ஸ்ரீராமர், கங்கைக்கரையில் சூரியாஸ்தமயமானதால் அங்கோர் சோலையில் இறங்கி ஓரிடத்தில் படுத்திருக்கக் கூடவந்த நகரத்தாரும் போஜனசுக முதலானவைவிட்டு அங்கங்கே படுத்து அயர்ந்து நித்திரைசெய்தனர். அத்தருணத்தில் ராமபிரான் சுமந்திரனை விளித்து, "சுமந்திரரே; என்னைத் தொடர்ந்துவந்த நகரத்தார் அன்பினால் என்னைவிட்டுப் பிரியார்கள் ஆதலால் நீர் ஒன்று செய்யவேண்டுகிறேன்; அதாவது இப்போதே அரவமின்றி நீர் தேரை அயோத்திக்குச் செலுத்திக் கொண்டு போகவேண்டும். அப்படியானால் அவர்கள் விழித்தபின் சக்கரஞ்சென்ற சுவடு அயோத்தியைநோக்கியிருப்பதனால் நான் அயோத்திக்குப் போனேனென்று எண்ணி மீண்டு அங்கே செல்வார்கள். என்னுடைய வனயாத்திரைக்கு இடையூறிராது என்றனர். அதுகேட்டுச் சுமந்திரர், கண்ணீர்வடிய, சுவாமி! அடியேன் அயோத்திக்குச் சென்றால் மஹாராஜா மகனைக் கொணர்ந்தையா என வினவுவரே, அதற்கு அடியேன், இல்லை காட்டில் விட்டுவந்தேன் என்று நெருப்பினுந் தீதாக எமன்போல் மறுமொழி சொன்னேனாகில் உடனே அவர் உயிர்விடுவாரே; அதனால் அடியேன் கைகேயியினுங் கொடியனல்லோ ஆகுவேன் என்று தரையில் விழுந்து மூர்ச்சையடைந்தார். அவனை ஸ்ரீராமர் தூக்கி எடுத்துச் சில நீதிமொழிகளால் தேற்றி, தந்தைதாய் முதலானோருக்குத் தாம் வந்தனைசெய்ததாய்ச் சொல்லும்படி பணித்தருளினார். பிராட்டியும் அப்படியே சொல்லித் தான் வளர்த்திருந்த பூவையும் கிளியையும் பரிபாலித்துவரும்படி தன் தங்கைமாருக்குச் சொல்லச்சொன்னாள். அதுகேட்டுச் சுமந்திரர் பிராட்டியின் பேதைமைஸ்வபாவத்துக்கு மிகவும் விசனப்பட்டார். இளையபெருமாள், முதலில் இராமருக்கு முடிசூட்டுவேனென்று சொல்லிப் பின் ஒரு பெண்பிள்ளைக்கு அதைக் கொடுத்த சத்தியவானை அரசனென்றும் சொல்லலாமோ என்று நிந்தித்ததைக்குறித்து ராமமூர்த்தி கோபிக்க, அவரும் தணிந்து பணிந்தபின் சுமந்திரனை அனுப்பிவிட்டுத் தாம் தம்பியோடும் மனையாளோடும் காட்டிற்சென்றார். அப்படியே வெறுந் தேரோடு முகம்வாடி அயோத்திக்குப்போன சுமந்திரனை அரசன்

அப்பா சுமந்திரா, ராமன் எங்கே என்ன; அச்சுமந்திரர் கண்ணீர் பெருகவாய்க்குழறக் காட்டுக்குச்சென்றார் என்றுசொன்னவுடனே தசரதமஹாராஜா உயிர்நீங்கினார். அப்போது தேவர் திவ்விய விமானத்தில் அவனை ஏற்றி வைகுண்டத்தில் செலுத்தினார்கள். அரசன் இறந்ததை அறிந்து கோசலாதேவி தரையில்வீழ்ந்து பலவகையிற் பன்னி அழவே, அந்தப்புரத்துள்ள மற்றப் பெருமாட்டிகளும் வந்து அழப் பெருங்கோஷமுண்டாயிற்று. அப்போது வசிட்டமாமுனிவர் மஹாராஜாவுக்குச்சாமக்கிரியைக்கு உரியார் யாருமிங்கில்லையே ஆகலால் அவர் வருமளவும் இவ்வுடம்பைக் கெடாதிருக்கும்பொருட்டு எண்ணெய்க்காரத்திற் போடுவித்து, அங்கு நடத்தவேண்டிய ராஜ்யகாரியத்துக்காகச் சுமந்திரனைப் பார்த்துக்கொள்ளும்படி நியமித்துப் பின்பு பரதனை அழைத்துவரும்படித் தூதனைக் கேகயராஜன் நகரத்துக்கு அனுப்ப, அவர்களும் மிக்க விரைவில் அங்குச் சென்றார்கள். அப்படியிருக்கக் கங்கைக்கரைத் தோப்பில் தூங்கிக்கொண்டிருந்த நகரத்தார் விழித்துப்பார்த்துச் சக்கிரவர்த்தித் திருமகனைக் காணாமல் கண்போனவர் ஒரு காரணத்தாற் கண்பெற்று மறித்தும் அக்கண்ணை இழந்தாற்போலவும், சாகநின்றவர் சாகாமருந்தாகிய அமுதத்தையடைந்து உடனே அதனைப் போக்கிக்கொண்டாற்போலவும் பெருந்துயரமுற்றுப் பரிதவித்து ஆற்றில் தேருருளைகளின் சுவடுகண்டு பின்பு அதையுங்காணாமல் அயோத்திசேர்ந்து மஹாராஜா இறந்த செய்தியையுங்கேட்டுக் கரைகாணாத் துயருழந்திருந்தார்கள்.

கங்கைகடத்தல்.

கங்கையின் வடகரைபோய்ச்சேர்ந்த ஸ்ரீராமர் அங்கிருந்த முனிவரால் எதிர்கொண்டு அழைக்கப்பட்டு அம்முனிவர் ஆச்சிரமத்தில் அவர்கள் கொடுத்த காய்கனிமுதலியவற்றை அமுது செய்து தருப்பைப்புல்லால் வேய்ந்த பாயலில் பத்தினியுடன் திருக்கண்வளர்ந்தார்; இளையபெருமாளோ வில்லுங்கையுமாக விடியுமளவும் காவல்காத்திருந்தார். இப்படியிருக்க அங்குள்ள சிருங்கிபேரமென்கிற பட்டணத்தில் இருக்கும் செம்படவர்தலைவ

னாகிய குகனென்பவன் காட்டுமனிதர்க்குரிய வேடமும் வீரனுக்குரிய ஆயுதமுதலிய லக்ஷணங்களும் உடையவனாய் ஸ்ரீராமர் சன்னதிக்கு வந்து லக்ஷ்மணரால் உள்ளே புகுவிக்கப்பட்டு, சுவாமியைக்கண்டு ஆருத்துன்பமெய்தித் தன்வரலாற்றைச் சொல்லிப் பணிந்து தான் கொணர்ந்த மீனையுந் தேனையும் சமர்ப்பிக்க, சுவாமி முனிவர்கள் முகங்களைநோக்கிப் புன்சிரிப்புக்கொண்டு, இவன் அன்பினால் கொணர்ந்தவையாகையால் இவை பரிசுத்தமானவையே; நாம் இவற்றைக் கடாக்ஷித்தபோதே அமுதுசெய்ததுபோலாம் என்று உகந்தருளி நிற்க, பிறகு சுவாமி காட்டுக்கு எழுந்தருளின வரலாற்றை வினாவி இளையபெருமாள் சொல்ல அறிந்து விசனமடைந்து, பிறகு சுவாமி படவு சீக்கிரம் கொண்டு வாவென்று கட்டளையிட்டவுடனே அவன் அப்படியே கொண்டு வர, அதனிலே தாமும் தம்பத்தினியும் தம்பியுமாய் ஏறி எளிதில் அக்கரைசேர்ந்து சித்திரகூடத்திற்கு வழி எதுவென்று குகனைக் கேட்க, அவன் அப்படியே யான் சித்திரகூடத்திற்கு வழி காட்ட வல்லேனாயினும், தம்மைப் பிரிந்திருக்க மனம்பொறாமையால் நானும் கூட வரவேண்டுகிறேனென்று பிரார்த்திக்க, ஸ்ரீராமர், இதுவரையில் நாங்கள் சகோதரர் நால்வராயிருந்தோம்; இப்போது நாம் ஐவரானோம்; உன்னுடையவையெல்லாம் என்னுடையவையன்றோ; பரதன் அந்நாட்டைக் காத்திருப்பதுபோல் இங்குள்ளவர்களை யெல்லாம் காத்துக்கொண்டு நீ இங்கேயே இருக்கவேண்டும். நான் திரும்பி வரும்போது இங்கு வந்திருக்கிறேனென்றார். அதுகேட்டுக் குகனும் ஒருவாறு தேறிநிற்க, சுவாமி உல்லாசமாய்க் காட்டுக்குள் சென்றார்.

வனம்புகுதல்.

வனத்துட்சென்ற இராமபத்திரர் மிருகங்களும் பக்ஷிகளும் விநோதமாக இருப்பதைச் சீதாதேவிக்குக் காட்டிக்கொண்டே பரத்துவாஜமுனிவர் ஆச்சிரமத்திற்கு எழுந்தருள, அம்முனிவர் எதிர்கொண்டு வந்து உபசரித்து இவரைத் தமதாச்சிரமத்தினுள்ளே அழைத்துக்கொண்டுபோய், இப்படித் தவவேடத்தோடு காட்டிற்கெழுந்தருளிய காரணம் என்னவென்று வினாவி, அவர்

சொல்லால் தெரிந்துகொண்டு கண்ணீர்மல்க விசனப்பட்டுத் தேறிக் காய்கனிமுதலியவற்றை அவரை அமுதுசெய்வித்திருக்கை யில், பல்முனிவரும் அங்குவந்து சேர்ந்தனர். அப்போது இது கங்கையும் யமுனையும் சேருமிடமாகையால் வெகு சேர்த்தியா யிருக்கின்றது; வேண்டிய காய்கனி முதலானவை கிடைக்கும்; இங்கேயே எங்களோடு இனி வீற்றிருக்கவேண்டும் என்று அவர்கள் பிரார்த்திக்க, ஸ்ரீ இராமசந்திரர் சில காரணங்களைச் சொல்லி அதைத் தடுத்துவிட்டு அவர்கள் சொன்னவழியேசென்று இளையபெருமாள் கட்டியதொரு தெப்பத்தால் யமுனையாற்றைக் கடந்து அக்கரையேறிச் சித்திரகூடபருவதம் சேர்ந்தார்.

சித்திரகூடம்.

சித்திரகூட பருவதத்தை அடைந்த இராமன், அம்மலையி லுண்டான பொலிவுகளை விவரமாய்ச் சீதாதேவிக்குக் காட்டிக் கொண்டே அம்மலைச்சாரலில் போக, அங்கிருந்த முனிவர் எதிர் கொண்டு அவர்களைத் தமது ஆச்சிரமத்துக்கு அழைத்துக் கொண்டுபோய் உபசரித்தார்கள். சூரியன் அஸ்தமயமாகி நிலவு விளங்கி நிற்க, இனிமையில் அவ்விரவைப்போக்கி, இலக்குமணன் மண்ணினாலும், அக்காட்டுமரத்துண்டுகளாலும், மூங்கில்களா லும், தருப்பைப்புற் கற்றைகளாலும் தன் தமையன் வாசம்செய் வதற்கேற்ற ஒரு சாலையும், அங்ஙனமே சீதாதேவி வாசஞ்செய் வதற்கு ஏற்றதாய்க் குங்குமங்கலந்த மண்களாலும் ஆற்றில் வரும் பொற்பொடிகளாலும் விசேஷத்தோடு சாலையும் சமைத் துக்காட்ட, அதைக்கண்ட இராமன் மிகவும் உவந்து, இந்த வித்தையை நீ எங்கே கற்றாய் தம்பி என, இலக்குமணன் உமது அனுக்கிரகத்தாலே கற்றேனென்று கேட்டு உனக்கு நான் மிக வருத்தத்தைத் தந்தேனென்று சொல்ல, அதற்கு அவர் மன மொப்பாமல் வருத்தத்திற்கு மூலம் முன்னமே உண்டாயிற் றேயென்று அசம்மதியாய்நிற்க, அதற்குச் சமாதானம்சொல்லி, இது மெத்தைமேடையினும் மேலானதென்று கொண்டாடி அவ் விடத்திலேயே தன் தம்பியோடும் மனைவியோடும் சவுக்கியமாக வசித்துக்கொண்டிருந்தார்.

பள்ளி அடைதல்.

ஸ்ரீராமர் சித்திரகூடமடைந்திருக்கையில் வசிட்டமாமுனிவர் பரதரிடத்துக்குத் தூதரையனுப்ப, அவர்கள் ஓலையைக் கொண்டு பரதருக்குக் கொடுத்தார்கள்; அதைப் பரதர் பார்த்ததும் இராமர் திருவடியைக் காணலாமென்கிற ஆசைபொங்கிச் சேனையைக் கூட்டிக்கொண்டு சத்துருக்கனரோடு கேகயநாடுவிட்டுப் புறப்பட்டுக் கோசலநாடு வருகையில், அந்நாடு முன்போலிராமல் பொலிவற்று மங்கியிருப்பதையும், அயோத்திமாநகரும் அப்படியே சந்தோஷவிலாசமற்று உறங்கிக்கிடப்பதையுங் கண்டு, நாம் எதுவோ கெட்டசெய்தி கேட்போமென்று மனதில் எண்ணிக்கொண்டு அந்தப்புரம் நுழைந்து, தந்தையைக் காணமல் அவர் எங்கேயென்று வினவச் சுவர்க்கம்போனரென்று கைகேயி தைரியமாகச் சொன்னதைக் குறித்து அவளை நிந்தித்து, அதன் காரணத்தை விசாரித்துத் தெரிந்துகொண்டு கீழேவிழுந்து மிகவும் பிரலாபித்துத் தனக்கு ராஜ்யங்கிடைப்பதைப்பற்றித் தன் தாய் செய்ததீமைகளுக்காக அவளை வெகுவாய் அவமதித்துத்தன்னையும் வெறுத்துக்கொண்டு கோசலாதேவியினிடம்சென்று நிற்க, அவள் இது நீ அறிந்தகாரியமன்றோ என்னக்கேட்டு அவள் பாதங்களில் வீழ்ந்து, இது யான் அறிந்து நடந்ததானல் இன்னின்ன பாதகங்களைச் செய்தவர் போகும் நரகத்திலே நானும் போகக்கடவேனென்று அந்தந்தக் கொடும்பாதகங்களை எடுத்துச்சொல்லிப் பிரதிக்கினைசெய்தார்; அந்தத் தேவியும் சந்தேகம் நீங்கியிருந்தாள். அப்போது வசிட்டமாமுனிவர் வந்து பரதனை நோக்கி இறந்தவருக்குச்செய்யவேண்டிய கடமைகளைச் செய்ய ஆ[illegible]க்க [illegible]ராயப[illegible] வேண்டுமென்று சொல்ல அது கேட்டுத் தசரதமகார ராஜாவைச் சிவிகையிலிட்டு வெகு வைபவமாகச் சரயுநதிக்குக் கொண்டு போய்ச் சடங்கு செய்ய எத்தனிக்க, வசிட்டர் பரதனை ரநோக்கி, உம்மை மஹாராஜா துறந்தேனென்றூராகையால், நீர் கருமம் செய்வது தகுதியல்லவென்று சொல்லக்கேட்டு மிகவும் ம் மனம் நொந்து சத்துருக்கனைக்கொண்டு கருமம் முடித்துநி றகையில். அரசரில்லாமல் ராஜ்யமிருப்பது கூடாதாதலால் நீர் ஆ ளவேண்டு மென்று வசிட்டரும் மந்திரி முதலானோரும் சொன்னார் கள்.

பரதர் வழிநடை.

மந்திரிமார் முதலானோர் அரசனில்லாமல் தேசமிருக்கக் கூடாதாகையால் நீர் ஆளவேண்டுமென்று பரதருக்குச் சொல்லக் கேட்டு அவர், அதுமுறைதான் ஆனால் மூத்தோனிருக்க இளையோன் ஆள்வது முறையன்றே எனத்தடுத்துச் சத்துருக்கனரை அழைத்து, நாளை நாம் ஸ்ரீராமபிரானை எழுந்தருளப்பண்ணிக் கொண்டுவரப் புறப்படுவோம், சேனைகள் சித்தமாகும்படி பறை யறைவிக்கவேண்டுமென்று கட்டளையிட அவர் அப்படியே செய்தார். அதுகேட்டு அந்த நகரமெல்லாம் உல்லாசமடைந்து உயிர்நீத்தவன் உயிரடைந்தாற்போல் களித்துப் புறப்பட்டது. இவ்வாறு சேனையும் பட்டணத்தாரும் அந்தப்புரத்தாரும் புறப்பட அவ்விடம் வெகு விநோதமாயிருந்தது. இப்படிப் புறப்பட்டுப் போகையில் கூனி அந்தக் கூட்டத்தில்காணப்பட, சத்துருக்கனர் அவளைப் பிடித்து அடிக்கையில் ஸ்ரீராமர் மனதுக்குப் பிரியமல்லாத காரியத்தைச் செய்யாதே என்று பரதர் தடுக்கச் சத்துருக்கனர் அவளை விட்டுவிட்டார். இவ்வாறு சென்று அஸ்தமயகாலத்தில் கங்கைக்கரையடைந்து இராமர் படுத்திருந்தவிடம் கண்டு பரதர் தாம் புழுதியிற்படுத்து நித்திரையில்லாமல் விசனத்தோடு இருந்து எழுந்து வழிச்சென்றார்.

குகன்.

மறுநாட்காலையில் பரதர் எழுந்து தன் சேனையோடுகூடக் கங்கைக்கரைக்குவர, சிருங்கிபேரபுரத்திலிருந்த குகன் என்பவன்
நம் ஆடம்பரத்தைக் கண்டு: ஓ! ஓ! பரதன் நம்முடைய
சேனைவரு ன இராமனை இராஜ்ஜியத்தை ஆளவொட்டாமற்
சுவாமியா நத் தூரத்தினதுமன்றி அங்கும் இருக்கவொட்டாமல்
காட்டுக்கு ருகிறான்போலிருக்கின்றது; பார்ப்போம் அவனுடைய
தூரத்தவ யத்தை; கங்கையைக் கடந்தல்லவோ எல்லாவல்லமை
சாமர்த்தி ல்லவேண்டும்? நான் உயிரோடிருக்குமளவும் அவன்
யும் செ த ஆடவொட்டேன் என்று மிகுந்த கோபத்தோடு
ஆட்டத்தன் னகளும் தானும் போர்க்குரிய கோலங்கொண்டிருக்க,
தன் சேனை குகனிடத்திலிருந்து ஒருவன் வந்து ஸ்ரீராமனுக்கு
அந்தக் ிய குகன் என்பான் உங்களைக் காணக் காத்திருக்கிறு
மித்திரனுகி

னென்ன; அப்படியாகில் நாமே முந்தி அவரைச் சென்று காண்போமென்று தன் தம்பியுடனே செல்ல, அந்தக் குகன் இவர் உடம்பிருக்கும் வாட்டத்தையும், புழுதியையும், அரையிற்கட்டிய சீரையையும் பார்த்து இரங்கி, நாம் தப்பெண்ணங்கொண்டோம் என்று தவித்து அவர் பாதங்களில் விழுந்தான். அப்படி வீழ்ந்த அவனைப் பரதர் எழுப்பி, நீ இராமருக்கு நண்பனானதினால் எங்களுக்கு மிகவும் கொண்டாடத்தக்கவன் என்று பல சொல்ல, குகன் எதற்காக நீங்கள் இங்குவந்ததென்று பரதனை வினவப் பரதர், என் தந்தை பரமபதம் அடைந்தார்; அவரினும் மேலான என் அண்ணன் காடுசென்றார். அவரைத் திருப்பி எழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோய் முடிசூட்டுவதற்காகப் புறப்பட்டு வந்தேன் என்று சொல்லக்கேட்டு, மறுத்தும் தரையில் வீழ்ந்து புரண்டெழுந்து, கைகூப்பி, ஆயிரம் இராமரும் உமக்கு நிகராகார் என்று துதித்து, நான் இராமர்சென்ற வழிகாட்டச் சித்தமாயிருக்கிறேன் என்று சொல்ல, இராமர் அவ்விராத்திரி எங்கே படுத்திருந்தார், இலக்குமணர் என்னசெய்தார் என்று பரதர் கேட்க, இவ்விடத்தில் ஸ்ரீராமர் தேவியோடு கண்வளர்ந்தாரென்றும் இலக்குமணர் ஆயுதபாணியாய் இரவெல்லாம் விழித்துக் காத்திருந்தாரென்றும் சொல்லக்கேட்டு மிக்க துயரத்தோடு பிரலாபித்தார். பின்பு குகன் பல படவுகளை அழைப்பித்துச் சேனைகளையும் கூடவந்தவர்களையும் அவற்றிலேற்றித் தானும் பரத சத்துருக்கனர்களோடு கரைசேர்ந்து, கோசலாதேவியை யாரென்று வினவ, எம் ஆண்டவனைப் பெற்றிழந்த பெருமகள் இவள்தான் என்று பரதர் சொல்ல அவள் பாதங்களில் வீழ்ந்து புலம்பிநின்றான். அத்தேவியும் அவனை மிக வாழ்த்தி முந்தி நால்வர் மக்களுடையவளாக இருந்தேன், இப்போது ஐந்துமக்களுடையவளானேன் என்று கூறியபின்னர், சுமித்திராதேவியை யாரென்று வினவ, இளையகாளையைப் பயந்த பெருமாட்டி என்ன, அவளையும் பணிந்து, பின்பு கைகேயியை இத்தேவி யாரென்ன இவள் பழிபாவங்களைப் பூண்டு பாவியான என்னைப்பெற்றுக் கொடுமைகளிழைத்தவள் என்று கூற, அவளையும் தாய் என்கிற மரியாதையால் குகன் வணங்கிநின்றான். இவ்வாறு யாவரையும் வினவித் தெரிந்துகொண்டு பணிந்துசெல்லுகையில், பரத்துவாச

மாமுனிவர் பல முனிவரோடுகூட எதிர்கொண்டுவந்து உபசரித்த தனால் பரதர் தம் படையோடுகூட அவர் ஆச்சிரமத்துக்குச் சென்றனர்.

கிளைகாணல்.

பரத்துவாசமுனிவர் இவரைச் சேனையோடு அழைத்துப்போய் ஒரு ஓமஞ்செய்து அதன் மகிமையால் தேவலோகத்தாரைக்கொண்டு இச்சேனைக்கெல்லாம் திவ்வியமான விருந்துசெய்வித்தார். பரதரோ காய்கிழங்கேயுண்டு தரையிற்படுத்திருந்தார். மறுநாள் சூரியோதயமானபின்பு பரதர் சேனைசூழச் சித்திரகூடம் நோக்கிச் செல்லும்போது, இவ்வாரவாரத்தைக் கேட்டுச் சித்திரகூடத்திலிருந்த லக்ஷ்மணர் உயரத்திலேறிப்பார்த்துப் பரதர் சேனையுடன் இராமர்மேல் சண்டைக்குவருவதாய் எண்ணி இராமரிடஞ்சென்று, பரதன் இங்ஙனம் வருகிறான்; அவனையும் அவன் பணியையும் நான் தொலைந்து செய்கிறேன், அடியேனுக்குக் கட்டளைதரவேண்டுமென்று பலவகை வீரவாதம்பண்ண, இராமர் அதுகேட்டு: தம்பி அவசரப்படாதே; பரதன் அப்படிப்பட்ட கருத்துள்ளவனல்லன்; நமக்கு இராச்சியங்கொடுக்க வருகிறானென்று தம்பியை அடக்கிநின்றார். இவ்வளவிலே பரதர் தன் சேனையைப் பின்வைத்துத் தானுந்தம்பியு முந்துசென்று கண்ணுங் கண்ணீருமாய்க் கதறிக்கொண்டு ஸ்ரீராமர் பாதங்களில் விழுந்தார். அவரை இராமர் எடுத்து அணைத்து லக்ஷ்மணருக்கு உண்டான சங்கையை நீக்க, அவரும் சங்கைநீங்கிக் கண்ணீருகுத்துக்கொண்டு தலையிறங்கிநின்றார். பின்பு தந்தை இறந்தசெய்தியைப் பரதர் உரைக்கக்கேட்டு இராமர் விழுந்து புலம்பித் தம்பிமார் முதலியோரால் தாங்கப்பட்டுத் தம்பியுந்தானும் நீராடி வசிட்டர் சொற்படி பிதாவுக்குச் செய்யவேண்டிய கடமையைத் தீர்த்து எங்கியிருந்தார். சீதாதேவியும் அப்படியிருந்தாள். அதன் பின்பு ஸ்ரீராமர் தாய் முதலானோருக்கு வந்தனை வழிபாடுகளைச் செய்துநிற்கையில், பரதர் கைகூப்பிக்கொண்டு, சுவாமி திரும்பி அயோத்திக்கு எழுந்தருளி ராச்சியபரிபாலனம் செய்தருளவேண்டுமென்று வேண்ட, அவர் உன் தாயும் தந்தையும் உனக்களித்த நாட்டை நீயே ஆளவேண்டுமென்னப் பரதர், மூடத்தனத்தால் நடந்ததை நான் அங்கீகரிக்க

மாட்டேன், நமது குலமுறைப்படி தேவரீரே அதை ஆளவேண்டும். தாய்தந்தைகள் கொடுத்ததனால் ராச்சியம் எனதென்று தேவரீர் எண்ணினால் அதை இப்போது நான் தேவரீருக்குச் சமர்ப்பிக்கிறேன், திருவுள்ளம்பற்றி ஆளவேண்டுமென்று பிரார்த்திக்க; தாய்தந்தைகளினும் மேலானவர் இல்லை, அதை மறுக்காதே; என் கட்டளைப்படி நட என்று இராமர் சொல்லக்கேட்டு பரதர் அதை தடுக்கமாட்டாமல் தலையிறங்கிநிற்க, அவனைநோக்கி, அப்பா தம்பி, பதினான்கு வருடங்கழிந்தபின் உன் இஷ்டப்படி நடக்கிறேன் என்று ராமர் அவரைத் தேற்றினர். ஆகில் அடியேனுக்குத் திருவடி நிலையையாவது அளிக்கவேண்டுமென்று சேவித்துப்பிரார்த்தித்த தம்பிக்கு அவைகளை அளித்து விடைகொடுத்தனுப்பினர். அந்தப் பாதுகைகளைப் பரதர் அரசன் போல எண்ணித் தமது திருமுடியில் வைத்து வெகு விபவத்தோடு புறப்பட்டு அயோத்திக்குப் போகாமல் நந்திக்கிராமத்திலேயிறங்கி அவைகளைப் பூசித்துக்கொண்டு ராச்சியபரிபாலனஞ் செய்துவந்தார். குகனும் மற்றும் வந்தவர்களும் பரதர் உத்தரவினால் அவரவரிடஞ் சேர்ந்தார்கள்.

பஞ்சதந்திரம்.

நான்காவது.

லப்தஹானி அல்லது பேறழிவு.

சோமசன்மா வரசகுமாரரை நோக்கி "இடருற்றகாலை யறிவு குன்றாதவன், குரங்கு முதலையினின்று விடுபட்டாற்போற் பெருந்துன்பத்தினின்று மீளுவான்" என, சிறுவர்கள் "அதெவ் வணஞ் சொல்வாய்" என, ஆசிரியன் சொல்லலுற்றனன்:—

"கங்கைக்கரையி னாவன்மரத்தின்மேற் சமுகனென்னு மொருவானரஞ் சிலகாலம் வாசம்பண்ணிக்கொண்டிருக்கையி லங்கே வந்த வோரிளைத்தமுதலையைப்பார்த்து நீ யென் கிருகத்துக்கு விருந்தாக வந்தமையா லுனக்கு நாவற்பழந் தருகிறேனென்று சில பழங்கொடுக்கத் தின் றத்தியந்த சந்தோஷத்துடனே தன்னிடத்திற்குப்போ யன்று தொடங்கித் தினந் தினம் வந்து நாலுவார்த்தைகள் பேசிக்கொண் டிரண்டு மந்நியோந்நியமா யிருக்கையி லொருநாள் முதலை சில கனிகள் கொண்டுவந்து தன் னில்லாட்குக் கொடுக்க, அதுதின் றக்கனி யமிர்தம்போலிருக்கக் கண்டு தன் னாயகனைப் பார்த்து, "பிராணநாதா! இந்தத் தித்திப்பான கனிக ளெங்கிருந்து கொண்டுவந்தாய்" என, ஆண்முதலை "சமுகவானர னென்னு மென்னண்ப னெனக்கு நாடோறுங் கொடுக்க நானங் கேதானே யவற்றைப் புசித்துக்கொண்டுவந்தேன்; இன்றைக்குத் தின் றுமிருந்ததை யுனக்குக் கொணர்ந்தேன்" என, இம்மொழி களைக்கேட்டுப் பெண்முதலை, "இத்தீங்கனிதின்பவனீர லமிர்தத் திற் கொப்பாயிருக்கும்; அதைக்கொணர்ந் தெனக்குக்கொடு; அதனா லுன் மூப்புச்சாக்காடில்லாம லுன்னோடு நெடுங்கால மிருப் பேன்" என, இதைக்கேட்டு முசலி "எனக் குயிர்க்குயிரா யிருக்கிற நட்டோனாகிய வானரத்துக்கு நீயே னிந்தத் தீங்கு நினைக்கிறாய்?" என, அது "நானுனக் ககத்தியமா யிருந்தா லதை னீரலைக் கொணர்ந்து கொடு, இல்லாவிட்டா லுயிர்வைத்துக்

கொண்டிரேன்" என, ஆண்முதலை "காதலியே, சகோதரனினு
மித்திர னதிகமாதலா லவனைக்குறித்து நீயடம்பண்ணவேண்டா"
என்று வேண்டிக்கொள்ள, பெண்முதலை "நீ யென்றைக்கு மென்
பேச்சுக்குக் குறுக்குச்சொன்னதில்லை; இன்றைக்குமாத்திர
மென்க்குக் குறைச்சல் பண்ணுகிறாய்; ஆதலா லிதோ நான் சீவனை
விடுகிறேன்" என்ப் பிடிவாதஞ் செய்ய, கரா பெண்ணினிச்சயத்
தையறிந்து "அச்சுமுக னெனக்குக் கொல்லக்கூடா தவனா யிருக்
கிறான்; நீயா பிடித்ததை விடாமலிருக்கிறாய்; ஆதலா னிருத
லைக்கொள்ளியெறும்புபோ லாயினேன்" என் றிங்ஙனஞ்சொல்
லிச் சுமுகனிடத்திற்குப் போயிற்று. அப்போது சுமுகன், "நண்
பனே! இன்றைக்கேன் விசனமா யிருக்கிறாய்?" என, முதலை
"மற்றொன் றுமில்லை; உன் மச்சினிச்சி, என்னைப்பார்த்து,
துஷ்டா! நன்றிகெட்டவனே! நீ யாராலே சீவனம் பண்ணுகிறை
யோ அவனை யொருநாளைக்காயினும் நமதுவீட்டிற் கழைத்து
வந்து விருந்திடவேண்டாமா? அவன்வீட்டுக்குமாத்திரம் வெட்க
மில்லாமற் போய்ப்போய் நல்லபழங்களைத் தின்னுகிறாயே யென்
றிப்படித் திட்டிக் கோபித்தாள்; ஆதலா னீ யென்வீட்டுக்கு வா;
உன்னைக்குறித்துப் பலபதார்த்தங்க டேடிவைத்துக்கொண்டு வழி
பார்த் துட்கார்ந்துகொண்டிருக்கிறாள்" என, வானரம் "நண்
பனே! எனக்குத் தண்ணீரில் வரக்கூடாது; ஆதலால், நீ மச்சி
னியை யிங்கே கூட்டிக்கொண்டு வா" என, மகரம், "சுமுகனே!
நான் கங்கைக்கரையி லிருக்கிறேன், நீ யென்முதுகின்மே லுட்
கார்ந்துகொண்டு வா; நோவாமற் கொண்டுபோவேன்" என,
அதி னம்பிக்கைவைத்துக் குரங் கப்படியே யுட்கார்ந்துகொண்ட
மாத்திரத்தின் முதலை தண்ணீரிற் குதித்துப் போகையில் வான
ரம் "என்க் கச்சமாயிருக்கின்றது, மெள்ளமெள்ள நட" என்
றது; அதைக்கேட்டு முதலை, இப்போது சுமுக னம்முடைய வாதீ
னத்திலிருக்கிறான்; இனி யிவனுக்கு நங்கருத்தை வெளியிடுவ
தற்குக் குறையென்ன விருக்கிறது? உரலிலகப்பட்ட துலக்கைக்
குத் தப்புமா? என்னா விங்ஙனந் தனக்குட் டீர்மானித்துக்கொண்டு,
"மித்திரா! உன்னிஷ்டதேவதையை நினை; பெண்சாதியின் பிடி
வாதத்தா லுன்னைக் கொண்டுபோகிறேன்" என, குரங்கு
"நானென்னபிழை செய்தேன்" என, முதலை "நீ நேற்றுக்

கொடுத்த நறுங்கனிகளை யென்மனைவிதின் றதன்மே லித்தன்மை
யான தீங்கனியைத் தினந் தின்னுகின்ற பாக்கியவா னீரல் கேவல
மமிழ்தத்தை யொத்திருக்கும்; ஆதலா னீ யவனீரலை யெனக்குக்
கொணர்ந்து கொடாவிடி னுன் பிராணனை வைத்திரே னென்றாள்;
அதைக்குறித்துத்தா னுன்னைக் கொண்டுபோகிறேன்" என,
அதைக்கேட்டு வானரம், "ஓகோ! இப்படியென் றெனக்கு முன்
னமே தெரிந்திருந்தா லந்தமரத்தின்மே லொளித்துவைத்திருக்கிற
வந்த வீரலை யுனக் கங்கேயே கொடுத்திருப்பேன்; வெறு மிருத
யத்தோ டிருக்கையி லென்னை வீணாகக் கொண்டுவந்தாய்" எனக்
கிலேசப்பட, அப்போது மகரம் "என் பிராணமித்திரா! அதைக்
கொடுத்தா லவள் சந்தோஷமாவாள்" என்றுசொல்லி வானரத்தை
யதிசீக்கிரத்தின் முன்னிடத்திற் கொண்டுவந்து விட்டவுடனே,
வானரங் குதித்து மரத்தின்மே லேறிக்கொண் டின்றைக்குக்
காலன்கையிலிருந்து விடுபட்டே னென்றெண்ணிக்கொண்டிருக்
கையில், முதலை, "மித்திரா! ஈரலைச் சுறுக்காய்க்கொடு; உன்
னண்ணியாருக்குக் கொடுத்துவிட்டு வருகிறேன்" எனக் கேட்டு,
வானரம் நகைத்து "மூடா! துஷ்டா! ஈர லுடம்பைவிட்டிருக்
குமா? அஃதிருக்கட்டும்: நீ விசுவாசகாதகனாதலா லிங்கிருக்க
வேண்டாம்; சீக்கிரத்திற் புறப்பட்டுபோ; உன்னைப்பார்க்கவென்க
ஞணுகின்றது" என் றிங்ஙனஞ் சுமுகன் சொன்னவுடனே முதலை
பச்சாத்தாபப்பட்டு, நானிவனுக்கு வழியிலுண்மை சொல்லி
யிழந்தேன்; இப்போது மறுபடி விசுவாசம்வரப்பேசி யிவனைக்
கொண்டுபோகவேண்டு மென்றாலோசித்து, "மித்திரா! நானுன்
னைப் பரீக்ஷிக்கலாமென் றிவ்வாறு சொன்னேன்; மேலு முலகத்தி
னடவாத வுன்பேச்சை நி[illegible]மென் றெண்ணித் திருப்பிக் கொண்டு
வரவில்லை; ஈரல் சரீரத்தைவிட்டு வேறிடத்தி லிராதென்பது சிறு
பிள்ளைக்குந் தெரிந்திராதா? நானிது விளையாட்டுக்குச் செய்தேன்;
ஆதலா னீ யென் வீட்டிற்கு லேசமும் பயமில்லாமல் வா;
உன்பொருட் டென்பெண்டாட்டி வழிநோக்கிக் கண்பூத்துப்
போகக் காத்துக்கொண்டிருக்கிறாள்" என, சுமுகன் "பசித்த
வனது விசுவாசத்தி னம்பிக்கை வைக்கலாகா தென்று
பிரியதரிசனனைக் கங்காதத்த னஞ்சி மீண்டுங் காணவில்லை" என,

அப்போது முதலை "பிரியதரிசனனுக் கவனேனஞ்சினான்?" என,
வானரஞ் சொல்லலுற்றது :—

"ஒருகிணற்றி லிருந்த கங்காதத்தனென்னு மொரு பெருந்
தவளையை மற்றைத்தவளைகள் மிகவும் வருத்தப்படுத்திக்கொண்
டிருகிறதனா லது இராட்டின நெறியே வெளியில் வந் திந்தத்
தாயாதிகள் வலியவரும் பலருமா யிருக்கிறார்கள், இதற் கென்ன
செய்வோமென் றெண்ணமிட்டுக்கொண் டிருக்கையி லொரு
பாம்பின் புற்றைப்பார்த்து, வழிப்போக்கர் காலிற் றைத்த
முள்ளை முள்ளாலேயே வாங்குகிறதுபோ லிந்தப்பாம்பை நமது
வீட்டுக்குக் கொண்டுபோய்ப் பங்காளிகளைக் கொல்லவேண்டு
மென நிச்சயித்து வளையின்கிட்ட விருந்து பாம்பைக்கூவ, பாம்
பிவன் மாந்திரிகனோ நம்மைக் கொல்லவந்தவனோ கூப்பிடுகிறவ
னின்னவனென்று தெரியவில்லை, ஆதலா லிவனை யிங்கிருந்தே
கேட்கவேண்டுமென்று தீர்மானித்து "நீ யார்" என, மண்டூகம்
'நான் கங்காதத்தனென்னும் மண்டூகராஜன்; உன்னைச்சரணமாக
வடைந்தேன்" என, கேட்டுப்பிரியதரிசனன் "நெருப்புந் துரும்பு
களின் சேர்க்கை யில்லாததுபோல நானுன் பரமசத்துருவா
யிருக்கையி னீ யிங்கேவந் திந்தவிபரீதபாஷணமேன்பண்ணு
கிறாய்?" என, கங்காதத்தன் "என்னை மாற்றார் வருத்துகிறார்க
ளென் றுன்னிடத்திற்கு வந்தேன்; நீ யெங்கள் ஜன்மசத்துரு
வென்பது மெய்யே; ஆனாலும் மலிய பகைவர்களை வைரிகளைக்
கொண்டே யடிக்கவேண்டுமென நீதிநூ லிருக்கிறது" எனக்கேட்டு,
இச்சர்ப்பம் "என்வரவங்கெப்படி கிடைக்கும்?" என, மண்டூகம்
"உன்னை நானனுபீசமாகக் கொண்டுபோவேன்" என, அதைக்
கேட்டுப் பிரியதரிசனனுந் தீனியைக்குறித் தென்றைக்கும்
விசாரப்பட்டுக்கொண்டிருக்கின்றோம், அவ்வாகாரந் தானேவந்
தின்றைக்கு நம்மை யழைத்துக்கொண்டு போகவிருக்கையி
லாலசியமேன் பண்ணவேண்டும்? வலியவந்த சீதேவியை வேண்
டாமென்று தள்ளலாமா? என்று தனக்கு ளாலோசித்துக்
கொண்டு தவளையின்பின்னே வர, தவளை யதை யிராட்டினத்தின்
வழியாய்க் கொண்டுபோய்த் தன்வீட்டில் வைத்துக்கொண்டது.
அந்தப்பாம்பு தவளைகளை யெல்லாந் தின்றது. பிறகு கங்காதத்த
னைப்பார்த்து "மித்திரா! என் சத்துருக்களையெல்லாங் கொன்று

படியினா லெனக் கேதாவதாகாரங் கொடு" என, தவளை "நீ யுன் சிநேகிதன் காரியத்தைச் செய்தாய்; இப்போது வந்தவழியே வீட்டுக்குப் போகலாம்" என, அதைக்கேட்டுப் பாம்பு "கங்காதத்தா! அந்தப் பிலத்தில் வேறே யேதாவது வந்து தங்கியிருக்கும்; யானங்கேபோ யென்னசெய்வேன்? நீயே யுன்சமுதாயத்திலிருந்து நித்தியமெனக் கொவ்வொருதவளை கொடுத்துக்கொண்டு வா; இல்லாவிட்டா லுன்னெல்லாரையு மொருங்கே கொல்லுவேன்" என, இவ்வுத்தரவைக் கேட்டுக் கங்காதத்தன் பயப்பட்டு நிதமொருதவளை விழுக்காடு கொடுத்துக்கொண் டிருக்கத்தின்று கடைசியி லொருநாள் கங்காதத்தன் புத்திரனையுந் தின்றது. அதைக் கங்காதத்தன் மனைவிபார்த்து மிகவு மிடும்பையுற்றுக் கங்காதத்தனைநோக்கி, "நீ ரிக்கொடியோனைக் கொண்டுவந்து குலத்தை நாசம்பண்ணினீர்; இனி யிவ்விடம்விட்டுப் புறப்படும்; இல்லாவிடி லிவனைக் கொலைசெய்யச் சூழ்ச்சி செய்யும்" என, இதைக்கேட்டாராய்ச்சி செய்துகொண்டிருக்கையிற் பாம்பு "எனக்கேதாயினுந் தின்னக்கொடு" எனக் கங்காதத்தன் "மித்திரா! நா னிருக்கையி னீ தீனிக்கேன் விசனப்படுகிறாய்? இப்போதென்மனைவியை யனுப்பி வேறு கிணற்றிலிருந் தின்னு மண்டூகங்களை யழைப்பிக்கிறேன்; அதுவரையு நீ சும்மா விரு" எனக்கேட்டுப் பிரியதரிசனன் "நீ எனக் கன்னதாதா, ஆதலாற் பிதாவாக விருக்கிறாய்; உடனே தவளைகளை யழைப்பி" என, பின்னர் மனைவியை மற்றொரு கூபத்திற் போக்கி "போனவளின்னும் வரவில்லை; நானேபோ யநேகத் தவளைகளைக் கொண்டு வருகிறேன்; நீ யிங்கே சுகமாக விரு" என்று சொல்லித் தானு மிராட்டினவழியே புறப்பட்டுப்போயிற்று. பின்பு பிரியதரிசனன் தவளைகளைக் குறித்து வழி[illegible]த்துக்கொண் டங்கேயிருந் தப்படி வெகுநாட் கழிகையில், மற்றொ[illegible]வளையிலிருந்த பல்லியைப்பார்த்துப் பிரார்த்தித்து, "ஓ பல்லியே! உனக்குங் கங்காதத்தனுக்கும் மிகவும் சிநேக மாகையா லவனிருக்கிறவிடத்திற்குப்போ யுன்னைப் பிரியதரிசனனழைக்கிறானென்று மினி யுனக்குத் துரோகம் பண்ணினா லெனக் காணையிருக்கிறது, நீ மனதிற் சிறிது மையப்படாதேயென்று மிவ்வாறு சொல்" என, அ[illegible]னுத்தரவைப் பெற்றுக் கொண் டக்கவுளி கங்காதத்தன்பாற்[illegible]ா யெல்லாச்செய்தியையுஞ்

சொல்ல, கங்காதத்தன் "பசித்தவன்விசுவாசத்தை நம்பலாகாது;
நீ போய்ப் பிரியதரிசனனுடனே, துஷ்டா! இனிக் கங்காதத்தன்
வரானென்று சொல்' என, கவுளிபோய்ப் பாம்புக் கிவற்றையெல்
லாஞ் சொல்லிற்று. அப்படிபோல "நான் மீண்டு முன் வீட்டுக்கு
வரேன்" என, இதைக்கேட்டு முதலை "நீ வராவிடி லெனக்கு நன்றி
மறந்தமை சம்பவிக்கும்; ஆதலா லுன் பட்டினியிருந் துன்னைக்
குறித் திங்கேயே பிராணனை விடுவேன்" என, அப்போது வானர
மானது "நரி நீள்செவியனுக்கு நம்பிக்கை வருவித் தெப்படிக்
கொன்றதோ வப்படி நீயு மென்னைக் கொலைசெய்ய விரும்புகிறாய்"
என, முதலை யதைக்கேட்டு "அஃதெப்படி?" என, குரங்கு சொல்
லுகிறது.—

"ஓ ரடவியிலிருக்கின்ற கராளகேசரி யென்னுஞ் சிங்கத்துக்
குத் தேக மேதோர் குணமில்லா திருந்தமையாற் றூசரனென்னு
நரியைப் பார்த்து 'பிரதானியே! இன்றைக் கெனக் கெங்கும்
போகக்கூடாது; நீயேபோ யதாயினு மிரை கொண்டுவா" என,
நரி நாலண்டையு மோடித்திரிகையி லொருகழுதையைப் பார்த்து
'மாமா! கும்பிடுகிறேன்; நீ யிப்போது மிகவு மிளைத்துப்போ
னாய்" என, அப்போது கழுதை "மருமகனே! என்ன சொல்வேன்;
எனக்குத் தலைவன் வண்ணான்; அவ னத்தியந்தங் கண்டகன்;
என்மேற் பெருஞ்சுமைகளைப் போட்டுக் கொல்லுகிறதேயன்றி
வயிற்றுக்குப் புல்லுச்செத்தை போடுகிறதில்லை; புழுதியிலிருக்கு
மறுகங்கட்டையைத் தின்றுகொண்டிருக்கிறேன்; அது வுடம்புக்
கெங்ஙனம் புஷ்டிகொடுக்கும்? என்பிழைப் பொருபிழைப்பா?"
என, நரி "இப்படி இருந்தா னீ என்னோடு கூடவா; ஆற்றங்கரை
யிற் பச்சைப்பு னிரம்ப விருக்குமிட முனக்குக் காண்பிக்கிறேன்"
என, அதைக்கேட்டுக் கழுதை "அவ்விடம் நன்றாயிருக்கும்; அங்கே
நா னொன்றியா யெப்படி யிருப்பேன்?" என, தூசரன் "மாமா!
அங்கே விஸ்தாரமாயிருக்கின்ற கழுதைக ளெங்களுக்குத்தக்க
நண்ப னகப்பட்டாற் கொண்டுவர வேண்டுமென் றெனக்குச்
சொல்லி யிருக்கின்றமையா லுனக் குரைத்தேன்" என, அதைக்
கேட் டாசையினாற் கர்த்தபம் பின்னேபோக, அதைக்கண்டு சிங்
கம் பாய்ந்தவுடனே நீள்செவிய னோட்டம்பிடித்தது. பின்னர் நரி
கோபித்துக் கண்டீரவத்தைப் பார்த்து "இன்றைக் குன்வீரத்தை

நான் பார்த்தேன்; உன்முன் னெதிர்ப்பட்ட கழுதையு மோடிப்
போயிற்று; இனி நீ யானையை யெவ்வா றடிப்பாய்?" என,
அதைக்கேட்டுக் கராளகேசரி தலையிறக்கமா யிருக்க, மீட்டும் நரி
"மற்று மோர்தரம் நா னவனை யுன்னண்டை கொண்டு வருகிறே
னப்போதாயினு மேமாறாம லவனை யடிக்கவேண்டும்" என்று
சொல்லி, நீள்செவிய னருகே போய் "நீயே னோடிப்போகிறாய்?"
என, கழுதை "மருமகனே! என்னை யிந்நேர மெமன்வாயிற் கொ
டுத்திருப்பாய்; அதிருஷ்டத்தினாற் பிழைத்தேன்; வச்சிரம்போ
னகத்தை யுடைய வப்பிராணி யார்?" என, அப்போது நரி
நகைத்து "அம்மா னந்தக்கழுதை உன்னைப் பார்த்து மித மற்ற
களிப்போடே யுன்னண்டை வருகையி னீ வீணாய்ப் பயந்தோடி
னாய்; அவ னிப்போது நீள்செவிய னென்னை நட்புக்கொள்ளாவி
ட்டா லுயிர் வைத்திரேனென்று நிச்சயித் திருக்கிறபடியா னீ
விரைவாய் வரவேண்டும்; வராவிடிற் கொலைப்பாவ மேற்கும்" என
றிப்படி நரியுரைக்கக்கேட்டுக் குண்டுக்கழுதை யதன்பின்னேபோ
கச சிங்கந் தட்சணமே யடித்து நண்டுச்சுட்டு நரியைக் காவல்
வைத்தாற்போல அதற்கு நரியைக் காவல்வைத்து நீராடப்போக,
இதற்குள்ளே நரி யத னீரலையுங் காதையுந் தின்றது. பின் சிங்
கம்வந்து பார்க்கையி லீரலுங் காதுமில்லாமையாற் சம்புகத்தைப்
பார்த்து "இதை யார் தின்றது?" என, நரி "இக்கழுதைக் கீரலுங்
காதுமில்லை; இருந்தா லது மறுபடியு முன்னண்டை வருமா?" என,
அது விதை யுண்மையென்று நம்பி நரிக்குள்ள மாம்சபாகங் கொ
டுத்து மற்றதைத் தின்றது. அப்படி நீ யென்னைக் கொல்லவிரும்பு
கிறாய்" என, முதலை "எவன் றன் பிரயோசனத்தைவிட் டுள்ளதைச்
சொல்லுகிறானோ வவன் யுதிஷ்டிரனென்னுங் குசவனைப்போற்
றுன்பமடைவான்" என, வானரம் "அதெப்படி?" என்று கேட்க,
மகரஞ் சொல்லுகின்றது;—

"ஒரு குப்பத்தில் யுதிஷ்டிர னென்னுங் குசவன் பானைகளை
யெடுக்கையி லோட்டாங்குச்சி யொன்று கபாலத்திற் றாக்கிக் கத்தி
வெட்டுப்போற் காயப்பட்டது. பிறகு சிலநாட்கழித் தத்தேயத்திற்
கருப்பு வந்தமையா லவனோ மறுதேசத்திற்குப்போ யிராசனிடத்திற்
சேவகத்திலமர, அவ்வரச னவ்வடுவைக்கண் டிவன் போர்க்களத்

தின் முன்காயம் வாங்கின சூரனென் றெண்ணி யவனை மிகவு முபசரித் தவனிடத்திற் றயையா யிருந்தான். அதுமுதற்கொண்டு மற்றைச் சேவகர்க ளவன்மேற் பொறுமையா யிருக்கத் தலைப்பட் டிராசன் றயை யிருக்கையா லொன்றும் பேசாமலிருந்தார்கள். அப்படி யிருக்கையி லொருநா ளிராச னேகாந்தமாய் யுதிஷ்டிர னைப் பார்த்து "உனக்குக் கத்திவெட்டி யாருடைய சண்டையிற் பட்டது?" என, குசச்சேவகன் "ராசனே! நான் சூளை போட்டுக் கொண் டிருக்கையில் விழுந் தோடுபட் டிக்காயம்பட்டது" என, இதைக் கேட்டமாத்திரத்தி லிராச னணிக் குலாலனைப்பார்த்து "நான் மோசம் போனேன்; இது விரண்டாம் பெயர்க்குத் தெரி வதற்குள்ளே நீ யோடிப்போ; சூரர்கள் கண்டா லுன் னுயிர் தரைமாட்டாய்" என, குயவன் "சுவாமி! என் கைகால்களைக் கட்டி ரணரங்கத்திற்போட் டென் னஸ்தலாகவத்தைப் பார்த்தரு ளும்; வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ வென்று சொல்ல லாமோ?" என, ராசன் "நீ பிறந்தகுலம் போர்க்களத்தில் வருவ தன்று; அங்ஙனமாக நீ நரிக்குட்டிபோ லேன் வம்பா துள்ளு கிறாய்? குலைக்கிற நாய் வேட்டை பிடிக்குமோ?" என, குலா லன் "இந்த நரிக்குட்டி யாரிடத்திற் றன்னைப் புகழ்ந்து கொண்டது; சொல்லுமையா" என, அரசன் சொல்லுகிறான்:—

"ஒரு வனத்திற் பெட்டைச்சிங்கத்தோ டிருந்த சிங்கத்துக் கிரண்டு குட்டிகளுண்டானவுடனே பல விலங்குகளைக் கொன்று தன் பெண்சிங்கத்தின் கையிற்கொடுத் ததைப் பார்த்து "இப் பிள்ளைக்கு விளைத் தெரிகிறவரைக்கு மிவர்களை நம்பித் தனியே விட்டிராதே" என்று பத்திரஞ்சொல்லி, நித்தியந் தான்மாத்திரம் போய் மிருகங்களைக்கொன்று கொண்டுவந்து கொடுத்துக்கொண் டிருக்கையில், ஒருநா ளதற்கொன்றுங் கிடையாமற் றிரும்பி வீட்டுக்கு வரும்போது, வழியிற் கையி லகப்பட்ட வொரு நரிக் குட்டியை யடியாமற் பிடித்துப் பெட்டையண்டை கொண்டுவந்து "இன்றைக்கு இதைவிட வேறொன்றுங் கிடைக்கவில்லை" என, அப்பெட்டை யக்குட்டி மிகவுஞ் சிறியதாயிருக்கிறதைப் பார்த்துத் தன் குழந்தைகளி லொன்றாய்க் காப்பாற்றிக்கொண்டு வரு கையில், அம்மூன்றும் பெரியனவா யொருநாள் காட்டுக்குப்

போனபோ தங்கொரு யானையைக்கண் டிதனிட்டப் போகலாகா தென்று சொல்லிவிட்டு நரிக்குட்டி வீட்டுக் கோடிப்போயிற்று. மற்றிரண்டு மதைப் பார்த் ததன்பின்னே வீட்டுக்கு வந்து தன் தாயுடனே யந்த நரியின் காரியத்தைச் சொல்ல, நரிக்குட்டி யதைக்கேட்டு மிகவுங் கோபித்து, "நானிவர்களிலுஞ் சௌரி யத்திற் குறைந்தவனோ? இவர்க ளென்னைப் பழித்து நகைப்பா னேன்? கூழுக்கு மாங்காய் தோற்குமா? நானிவர்களைத் தண் டித் தென்பராக்கிரமத்தைக் காட்டுவேன்; கொட்டினாற்றேள் கொட்டாவிட்டாற் பிள்ளைப்பூச்சியா?" என, அதைக் கேட்டுப் பெண்சிங்கம் நரியை யேகாந்தமா யோரிடத்திற்கொண்டுபோய் "நீ நரிக்குட்டி; உன் குலத்தில் யானையைக் கொல்லுகிற சக்தி யில்லை; உன்னை நான் வளர்த்தமையா லிந்தப் பராக்கிரமஞ் சொல்லிக்கொள்ளுகிறாய்; இவர்க ளினி யுன்னை யின்னானென் றறிகிறதற்கு முன்னே நீ புறப்பட் டோடிப்போ; இல்லாவிட்டா லவர்கள் கையிலடியுண் டிறந்துபோவாய்" என, அதைக்கேள்விப் பட்டவுடனே சம்புக் கோடிப்போயிற்று. ஆதலா "னீ குசல னென்று வெளிப்படுவதன் முன்னே விரைவா யிதை விட் டுப்போ" என, "அவனந்த ராசாவி னுத்தரப்படி யோடிப்போ னான்" என, இப்படி முதலையின் பேச்சைக் கேட்டுச் சுமுகன் "ஸ்திரீகளை நம்பவுங்கூடாது அவர்களோடு பேசவுங்கூடாது" என, முதலை "இது வெதினாற் சொல்லுகிறாய்?" என, வானரஞ் சொல்லத்தொடங்கிற்று:—

"நருமதை யாற்றங்கரையிற் பவானியென்னு மோரேழை வண்ணான் றன்கழுதை தீனியில்லாம லுளுக்குநா ளிளைத்துப்போ கிறதைக் குறித்து விசனப்பட்டுக் கொண்டிருக்கையி லொருநா ளினையாமற் கிடைத்தபுலித்தோலைக் கொண்டுவந்து களிப்புடனே யிரவி லக்கழுதைமேற்போர்த் தூரார்ப் பயிர்களின் மேய்வித்துக் கொண்டிருக்கும்போது, குடிகளிது புலியென்று நினைத்தோடிப் போவார்கள். இப்படி யிருக்கையி லிப்பெருவாடன் மிகவும் பருத்தொருநாட் பயிரிற் றானியத்தைத் தின்றுகொண்டிருக்கும் போதொரு பெண்கழுதையின் பேச்சைக் கேட்டு மிகவும் பெருங் கூச்சலோடு அதற்கு மறுமொழி கூறத்தொடங்கிற்று. அப்போ

துச்சொல்லைக்காரனிது புலியன்றென்று நிச்சயித் ததைப்பிடித் திப்பொடிய வடித்தான்; அதலான் மாதர்களுடனே வீணாகப் பேசலாகாது. இப்படி யிருக்கையி னீ யவளைக்குறித் தென்னைக் கொல்ல விருந்தாய். இது வுன் குற்றமன்று. விசுவாசகாதகம் பண்ணுத லுன்சாதிக்கே யியல்பாயிருக்கின்றது. அது சாதுக்களின் சேர்க்கையாலுங் குணமாகாது. மேலுந் துஷ்டர்கட் குபதேசித்துப் பயனில்லை" என்றிப்படிப் பேசிக்கொண்டிருக்கையிற் சலத்திலிருந் தொரு ஜலசரம் வந்து "உன் மனையா ளெதிர்பார்த்துக்கொண்டிருந்து பட்டினியாயிறந்தாள்" என, அந்த நாராசஞ் செவியி லேறினவுடனே முதலை "நான் கொடியோனுதலி னித்தன்மைப் பிரிவைப்பட்டேன்; முதல் நண்பனுக்குப் பொல்லாதவனுமினேன்; இரண்டாவது மனைக்கிழத்தியு மிறந்தாள்; வீடுங் காடாயிற்று; இல்லக்கிழத்தி யில்லா தில்லமுங் காடன்றோ? ஆதலால் மித்திரா! என்பிழையை மன்னி; நானுனக்குத் துரோகம் நினைத்ததற்கு மிக்குதிக்கிறேன்" என, இதைக்கேட்டு வானரம் "எவள் பேச்சினை நீ கொலைத்தொழிற் கேற்பட்டையோ வவள் சாவைக்குறித் திப்போது கிலேசித் துயிர்விட நினைக்கிறாய்; அப்படிப்பட்ட துர்க்குணியின் சாவுக்குக் களிக்கவேண்டும் என்று பின்னுஞ் சுமுகன் சொல்லுகிறது:—

"ஒருமரத்தின்மேற் கூடுகட்டி யதில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற விரண்டு தூக்கணாங்குருவி யாலங்கட்டியுடனே கூடப் பெருமழை பெய்கையிற் குளிரினாலே நளிர்பிடித்துப் பல்லுக்கிட்ட நடுங்கிக்கொண் டொருமரத்தடியி லொதுங்கி யிருந்து வருந்துகிற வானரத்தைக்கண்டு, "உனக்குக் கால் கைக ளிருந்தும், குளிர் காற்று முதலிய துக்கத்தை ஐயையோ! நீயேன னுபவிக்கின்றாய்? நீ யேன் வீடுகட்டிக்கொள்ளவில்லை?" என்றிரக்கத்தாற் சொல்ல, இதைக்கேட் டதுஷ்டக்குரங்கு "ஊசி மூஞ்சி மூடா! [illegible]வனுக்குப் புத்தி சொல்லுகிறையா? எனக்கு வீடு கட்டுகிற சக்தியில்லை; அதைப் பிரித்தெறிகிற சாமர்த்தியமுண்டு; இதோபார்" என் றதன்கூட்டைப் பிரித்தெறிந்தது. ஆகையால் "மூடர்கட் குபதேசிக்கலாகாது" என, முதலை, "அன்பனே! நான் குற்றவாளி யென்பது மெய்யே;

ஆயினும் பழைய சினேகிதனாதலா லுன்னைக் கேட்கின்றேன்" என, வானரம் "நீ யங்கேபோய்ப் பகையாளியோடு போர்செய்து மடிந்தாற் சொர்க்கமடைவாய்; வென்றால் வீடடைந்து சுகமுறுவாய்; முன்னொரு புத்திசாலி யுத்தமனுக்குக் கும்பிடும், சூரனுக்குப் பேதமும், காரியகாரனுக்குத் தானமும், ஈடானவனுக்குத் தண்டமுஞ் செய்தாற்போலச் செய்யவேண்டும்" என, முதலை "அதெங்ஙனம்?" என; சுமுகன் சொல்லுற்றது:—

"இம்மலையின்மேற் சதுரனென்னு மொரு நரி பசியுடனே யங்கங்கே திரியுங்கா லொரு செத்தயானையைக் கண்டு, அதன் றோலைக் "கிழித் திறைச்சியைத் தின்னும் வல்லமை யதற் கின்மையா லஃதன் குட்கார்ந் திருக்கையி லங்கேவந்த சிங்கத்தைக் கண்டு தண்டனிட, "அது நீயார்?" என, நரி "நான்றங்க ளடியேன்; தாங்களடித்த யானையைக் காத் துட்கார்ந்திருக்கிறேன்" என, சிங்கம் "இது நான் கொன்றதன்று; வேறொருவன் கொன்றெறிந்தானோ அன்றித் தானே மடிந்ததோ வெப்படி யிருந்தாலுமதை நான் புசியேன்; இது வுனக்கு வேண்டுமானா லெடுத்துக் கொள்" என, நரி "சுவாமி! இது யோக்கியந்தான்; பெரியோர்கடம் மாண்மையாலே சம்பாதிக்கிறார்கள்" என, சிங்க மதைக் கேட்டு வேறொரு வனத்திற்குப்போகப் பின்னு மங்கே வந்தவொரு புலியைப் பார்த்து "அம்மான்! நீ இக்காலன்முகத்திலேனெதிர்ப்பட்டாய்? இவ்வானையைக் கொன்ற மிருகேந்திரனிங்கே யாதொரு புலிவந்தா லதற்குத் தெரியாம லெனக்குவந்து சொல்லுவாயானா லதைக் கொன்றெறிவேன்; நான் முன்னே யொரு யானையை யடித்து முழ்கப் போனவிடத்தி லொரு புலியதை யெச்சிற் பண்ணிற்று; அது முதலாகப் புலியைத் தேடிப் பார்த்து அகப்பட வில்லையென் றென்னுடன் சொல்லியிருக்கிறான்" என, புலி யச்சிங்கத்தி னுத்தரவைக்கேட்டு மிகவும் பயந்து "மருமகனே! எனக்குப் பிராணதானங் கொடு" எனச் சொல்லிக்கொண்டே யோடிப்போயிற்று. மறுபடி யொரு வானரத்தைக் கண்டு முன்னேவந்த துஷ்டனைக் கும்பிட்டுப் போக்கினேம்; இரண்டாமவனைப் பேதித்தோம்; இப்போ திதன்கையா லிதைக் கிழிப்பிக்க வேண்டுமென் றிப்படித் தன்னுள்ளே நிச்ச

யித்துப் பின்பு “வானரா! நீ நெடுநாளைக்குப்பின்பு வந்தாய்; மற்றும் பசித்திருக்கிறாய்; எனக்குச் சிங்கங்கொடுத்த இவ் யானை யிறைச்சியை நீ கொஞ்சந்தின்று சிங்கம் வருவதற்கு முன்னே சீக்கிரமாயோடிப்போ” என, குரங்கதைக்கேட்டு யானையைக் கிழிக்க, அதைப்பார்த்து நரி “வானரா! சிங்கஞ் சமீபத்தில் வந்தது; இனி நீ விரைவிலோடிப்போ” என, அதைக்கேட்டுக் குரங்கு பறந்தது. பின்பது பிளந்தவிடத்திலிருந்த மாமிசத்தை நரி தின்னுகையி லங்கேவந்த வேறொரு நரியைச் சண்டையிட்டுத் துரத்தித் தான் வேண்டியமட்டு மிறைச்சிகளைத் தின்றது. ஆதலானீயம் மகரத்தைக்கொன் றுன்வீட்டிற் சுகமாயிரு. “வேறொரு தேயத்திற் சௌக்கியமெல்லாங் கிடைக்குமாயினுந் தனக்குச் சிநேக ரெங்கொருவனு மில்லாவிட்டாற் சித்திராங்கன்போற் றீங் கனுபவிக்க வரும்” என, முதலை, “சித்திராங்கனுக் கெப்படி யவ்வவஸ்தை நேரிட்டது?” என, வானரஞ் சொல்லத்தொடங்கிற்று:-

“அயோத்தியா நகரத்திலிருந்த சித்திராங்கனென்னுமொரு நாய் பஞ்சத்தினாற் சோறு கிட்டாமல் மறுதேயத்திற் சென்றொரு கிருகஸ்தன் வீட்டுக்குப்போக, அவ்வீட்டுக்காரி சோறுபோட்டாதரித்ததனா லன்று முதல் வெகுநாள்வரைக்கு மங்கே யிருந்தொருநாள் சகசமாய் வீட்டுக்கு வெளியேவந்தது. அவ்வளவிலே யவ்வூர் மற்றைநாய்களிதன்மேலே விழுந்தனேகவிடத்திற் கடித்துதிர மாம்சங்களை வெளிப்படுத்தினதனாற் சித்திராங்கன் மிகவுந் துக்கமடைந் தென்ன பஞ்சம் வந்தாலுஞ் சுவதேசத்தை விட்டு வரலாகாதெனத் தனக்குட்டேறி மீண்டு மயோத்திக் கோடிவந்தமாத்திரத்தி லதற் குறவாகிய நாய்கள் “சித்திராங்கா! அத்தேய மெப்படி யிருக்கிறது?” என, சித்திராங்கன் “அத்தேயஞ் செழிப்பா யிருக்கின்றது; மாந்தர்களுந் தயாசாலிகளா யிருக்கிறார்கள்; சுசாதிமித்திரத்துவமில்லை; ஆதலாலிவ்வவஸ்தை நேரிட்டது” என்றது. “ஆனதுகொண்டு தன்னிடத்தி லிருப்பது போலச் சுகம் வேறில்லை யென்கின்றேன்” என, முதலையவ்வார்த்தைகளைக் கேட்டுப்போயவ்வண்ணமே யெதிரியுடனே பொருதுத் தன்வீட்டை மீட்டுக்கொண்டங்கேயே வாழ்ந்திருந்தது. ஆதலாற் பராக்கிரமத்தினாற் பாக்கியம் வழிதேடி வந்தடைகின்றது.

முற்றிற்று.

83217